விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 15 சனிக்கிழமை (01.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 287

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## தமிழ் அரசியல்வாதிகள் சிலர்

# வடக்கு முதலமைச்சருக்கு எதிராக பேரினவாதிகளுடன் கூட்டுச் சதி!

## திரைமறைவில் நடப்பதாக தகவல்கள் கசிவு

(கொழும்பு)

வடக்கின் முதலமைச்சருக்கு திராக சிங்களப் பேரினவாதிகள் ன்னெடுத்துவரும் ஆர்ப்பாட்டங் ருக்குப் பின்னணியில் ஒரு சில தமிழ் அரசியல்வாதிகள் இருப்ப தாக அதிர்ச்சித் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

வடக்கின் முதலமைச்சருக்கு எதிராகப் பேரினவாதிகள் ஆர்ப் பாட்டங்களை நடத்த முற்பட்டிருக் கும் இவ் வேளையில், அவர்களுக் குப் பக்கபலமாக இருந்து வடக்கின் முதலமைச்சரைப் பதவி விலகவைப் பதில் தமிழ் அரசியல்வாதிகள் ஒரு சிலர் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் பதவியிலிருந்தால் ஒற்றையாட்சியின் கீழ் தீர்வை முன் வைக்க முடியாது எனவும் தமிழ் மக் கள் அவருக்குப் பின்னால் திரண்டு தங்கள் நம்பிக்கைக்குரிய தலை வராக அவரை ஏற்றுள்ளனர் என வும் 24ஆம் பக்கம் பார்க்க....

# அடங்கி இருந்தவர்கள் ஆட்டம் போடுகின்றனர்

## விக்னேஸ்வரன் மீது மகிந்த - கோத்தா காட்டம்

(கொழும்பு)

தாம் ஆட்சி அதிகாரத்தில் இருந்த போது வாய் திறக்காத தரப்பினர் தற்போதைய ஆட்சியின் கீழ் பல்வேறு இனவாதக் கருத்துக்களையும் முன்வைத்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரரான முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் கருத்து தெரிவித்ததுடன், வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு மைத்திரி - ரணில் அரசாங் கம் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

அவன்ட்கார்ட் பாதுகாப்பு நிறு வனத் தலைவர் நிஸ்ஸங்க சேனாதி பதி உட்பட எட்டு பேருக்கு எதிராக தொடரப்பட்ட மோசடி வழக்கை விசாரித்த கொழும்பு புதுக்கடை நீதவான் லங்கா ஜயரத்ன நேற் றைய தினம் நீதிமன்றில் முன் னிலையாகிய கோத்தபாய உட்பட ஏழு பேருக்கு பிணை வழங்கினார். இதன் போது முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவும் நீதிமன்ற வளாகத்தில் 24ஆம் பக்கம் பார்க்க....

## கோத்தபாய உள்ளிட்ட 7 பேருக்கு கடும் நிபந்தனைகளுடன் பிணை



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட் டுள்ள முன்னாள் பாதுகாப்பு செயலா ளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட 7 சந்தேக நபர்களை கடும் நிபந்தனை கள் கொண்ட பிணையின் கீழ் விடு தலை செய்யுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் அவன் கார்ட் எனும் தனியார் நிறுவனமொன் றுக்கு ஆயுத கப்பலொன்றை நடத்த அனு மதி வழங்கிய 24ஆம் பக்கம் பார்க்க....

## பௌத்த கடும்போக்குவாதிகளால்

# விக்னேஸ்வரனுக்கு எதிராக நேற்று கண்டனப் போராட்டம்



24ஆம் பக்கம் பார்க்க...

## கோலூன்றிப் பாய்தலில்

# மகாஜனக் கல்லூரி மாணவி அனித்தா புதிய சாதனை



22ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் நேற்றிரவு வாள்வெட்டு

# இரு சகோதரர்கள் உட்பட மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத ஒன்பது பேர் கொண்ட குழுவினர் வாளால் சர மாரியாக வெட்டியதில் இரு சகோத ரர்கள் உட்பட மூவர் படுகாய மடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச் சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றிரவு 8.00 மணியளவில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி அத்தியடி பகுதியில் இடம்பெற் றுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் இராசா வின்தோட்டத்தினைச் சேர்ந்த ஜெனு சன் அஜந்தன் (வயது 16) யாழ்ப் பாணம் ஸ்ரான்லி வீதி பினை சேர்ந்த வர்களான யோகேஸ்வரன் புவித் தன் (வயது 21) மற்றும் அவரது சகோதரரான யோகேஸ்வரன் கோபிகன் (வயது 18) ஆகிய மூன்று இளை ஞர்களுமே வெட்டுக் காயங் களுக்கு உள்ளாகியுள்ளனர். இது தொடர்பில் 24ஆம் பக்கம் பார்க்க....

நாளைய வலம்புரியில்...


அசிங்கத்தை ஏன்...
என்ற கவிதைக்களம் நாளைய வலம்புரியில் வெளிவரும் (ஆ-ர்)

புதிய

# வெளிச்சம்

பேராசிரியர் Dr ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களின்
M.A., M.Phil., Ph.D (English), M.Ed., M.A., Ph.D (Tamil).

## “சிறப்பு நிகழ்ச்சி”
## Motivational Speech

நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் : 02 ஒக்டோபர் 2016 மாலை 5.30 மணி
இடம் : வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்



அனுமதி இலவசம்

ஏனைய நிகழ்வுகள் :
யாழ்ப்பாணம்,
வன்னி,
திருக்கோணமலை,
மட்டக்களப்பு.

தெருவி வலம்புரி

தொடர்புகளுக்கு :
நவஜீவன் அனந்தராஜ் 0778293366


# மனசுக்குள் ஒரு மழைச்சாரல்

(யாழ்ப்பாணம்)

ராஜ் மூவிஸ் தயாரிப்பில் மனசுக்குள் ஒரு மழைச்சாரல் என்னும் முழு நீளத் திரைப்படம் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.நகரில் உள்ள ராஜா-2 திரையரங்கில் காலை 10.30 மற்றும் பிற்பகல் 2.30 மணிக்கு இரு காட்சிகளாக வெளியிடப்படவுள்ளது.

ஈழத்துக்கலைஞர்களின் முழுமையான பங்களிப்பில் உருவான இத்திரைப்படம் ஈழத்திரைப்படத்துறையில் ஒரு திருப்புமுனையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (செ)


# வேலைவாய்ப்பு

இலங்கையின் முதற்தர காப்புறுதி நிறுவனமான AIA உடன் இணைவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்





### ❄ குழு முகாமையாளர்



தகைமைகள் :- I. தலைமைத்துவ பண்பு
II. துறைசார் முன் அனுபவம்

அனுகூலங்கள் :- I. எல்லைகளற்ற வருமானம்
II. வருமான இழப்பீடு வழங்கப்படும்
III. வெளிநாட்டு பயணங்கள்
IV.. விரைவான பதவி உயர்வு

### ❄ அலுவலக உத்தியோகத்தர்

தகைமைகள் :- I. G.C.E. A/L இல் சித்தியடைந்திருத்தல்
II. மும்மொழிகளிலும் தேர்ச்சிபெற்றிருத்தல்
III. யாழ். நகரிலிருந்து 3 Km எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

### ❄ அலுவலக உதவியாளர்

தகைமைகள் :- கல்வி தகைமை - G.C.E O/L சித்தி
● யாழ். நகரிலிருந்து 3 Km எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான உங்கள் விண்ணப்பங்களை சுயவிபரக் கோவையுடன் (With 2 Non Related Refree) 07.10.2016ற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி :- **AIA Insurance Lanka PLC**
62/6, Stanley Road, Jaffna.
தொலைபேசி :- **021 222 1215, 076 528 9947**

GREAT PLACE TO WORK® Best companies to work for 2016 Sri Lanka

(6080)


# 30வது பிறந்தநாளும் ஐந்தாம் மாத நினைவஞ்சலியும்

## செல்வி சிவதாஸ் சிவதர்ஜினி

பிறப்பு : 1986.10.01 - இறப்பு : 2016.05.27



அன்பிற்கு இலக்கணமாய் பண்பே உருவமாய்
பாசத்திருவுருவமாய் எம் நெஞ்சமதில் வாழ்ந்தாயே
நிறைந்த பொக்கிசமாய் உற்றார்க்கு உதவுபவராய்
உறவினர்க்கு இனியவராய் அன்பான ஜீவனாய்
அருமையான தோழியாய் நல்லதொரு சகோதரியாய்
எம்முடன் வாழ்ந்தாயே
மாதங்கள் ஐந்து ஆனாலும் உன் நினைவலைகள்
எம்மை விட்டு என்றென்றும் நீங்காதம்மா…!

றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

(6079)

# வடக்கு மாகாணத்தில் அபிவிருத்திகளை தெற்கிலுள்ளோர் மேற்கொள்ள முடியாது

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை தெற்கில் உள்ளவர்கள் மேற்கொள்ள முடியாது. அதற்கான அனுமதியை வடக்கில் உள்ளவர்கள் வழங்கவும் முடியாது என சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண நிர்மாண நிர்மாணிகள் சங்கத்தின் கூட்டம் நேற்றைய தினம் யாழ்பொது நூலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். போருக்கு பின்னரான வடக்கு மாகாணம் பல்வேறு துறைகளிலும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இதனை அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறு உதவித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்கள் எமக்கு தேவையாகவுள்ளன.

எனினும் யுத்தத்திற்கு பின்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கம் எமக்கான எந்த உதவிகளையும் செய்யவில்லை. மாறாக இங்கு மேற்கொள்ளப்பட்ட சில அபிவிருத்திகளை கூட எம்மோடு கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாகவும் மத்தியில் உள்ளவர்களை கொண்டு வடக்கை சேர்ந்தவர்களை புறக்கணித்து மேற்கொண்டு வந்துள்ளது.

இந்த காரணத்தினால் இங்குள்ள தொழிலாளர்கள் முதற்கொண்டு நிர்மாணிகள் வரை வெகுவாக பாதிப்பை எதிர்நோக்கியே வந்திருந்தனர். இந்த தவறை தற்போதும் நாம் விட முடியாது. தமிழ்மக்களின்துணையுடன் ஆட்சிக்கு வந்துள்ள நல்லாட்சி அரசு தமிழ் மக்களுக்கு உதவி செய்ய முயற்சித்து வருகின்ற போதிலும் அதனை தெற்கில் உள்ள இனவாதிகள் தடுத்து வருகின்றனர்.

இதனால் நல்லாட்சியின் உதவிகள் ,அபிவிருத்தி திட்டங்கள் வடக்கு ,கிழக்கு மக்களுக்கு கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டு வருகின்றன. தெற்கில் உள்ள இனவாதிகள் வடக்கு மக்களுக்கு நல்லாட்சி அரசு உதவி செய்வதனை தடுப்பதற்கான ஒரே காரணம் இனவாதமே. வடக்கில் உள்ள மக்களுக்கு உதவிகள் செய்யப்பட்டு அவர்களுடைய பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டு விட்டால்,

அவர்களுடைய அரசியலை நடத்த முடியாது என்பதும் ஒரு காரணமாகவும் உள்ளது. எனவே எமக்கான உதவிகளை நாம் பெறுவதற்கு நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எமது அபிவிருத்திகளை தெற்கில் உள்ளவர்கள் செய்து அவர்களே இலாபமடைகின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

எமக்கான அபிவிருத்திகள் எம்மிடம் கலந்தாலோசிக்கப்பட்டே மேற்கொள்ளப்பட வேண்டும். இதுவே எம்முடைய கோரிக்கை மற்றும் இங்குள்ள அபிவிருத்தி பணிகள் எம்முடைய நிர்மாணிகளால் மேற்கொள்ளப்பட்டு அதில் எம்முடைய தொழிலாளர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொது செயலாளர் மாவை சேனாதிராசா, வடக்கு மாகாண முதலமைச்சரின் பிரதிநிதியாக கலந்துகொண்டிருந்த வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

## இலங்கையின் பாதுகாப்பு விடயத்தில் முப்படையும் அவதானமாக உள்ளது



(கொழும்பு)

யுத்தம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இலங்கை முப்படை தமது கடமையை சரியாக தொடர்ந்தும் நிறைவேற்றி வருவதாக தெரிவித்த விமானப்படைத் தளபதி எயார் மார்சல் கபில ஜயம்பதி, இலங்கை பாதுகாப்பு விடயத்தில் அவதானமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

கண்டிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்த விமானப் படைத்தளபதி ஸ்ரீதலதா மாளிகை, மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடத்துக்கு விஜயம் மேற்கொண்டதுடன், மஹா நாயக்க தேரர்களிடம் நல்லாசி பெற்றுக் கொண்டார். இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-10)

# சீன-இலங்கை உறவுகள் மேலும் பலப்படுத்தப்படும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

இலங்கை - சீனாவுடனான நட்பை நாளுக்கு நாள் பலப்படுத்தி முன்னோக்கிச் செல்வதற்கான நடவடிக்கையினை நல்லாட்சி அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

67ஆவது சீன தேசிய தினம் மற்றும் சீன-இலங்கை நட்புறவு சங்கத்தின் 35ஆவது ஆண்டு நிறைவு விசேட நிகழ்வில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் அபிவிருத்தி, முதலீட்டுத்துறை மற்றும் சர்வதேச மட்டத்திலும் சீனா மற்றும் இலங்கையின் உறவு உயர்மட்டத்தில் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சீன அரசானது இலங்கையுடன் எப்போதும் நல்லுறவைப் பேணி வரும் அரசு என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையின் கல்வித் துறை, வீதி அபிவிருத்தி உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கான அபிவிருத்தியில் சீனா வழங்கும் ஒத்துழைப்பானது அளப்பரியது என்றும் தெரிவித்துள்ள ஜனாதிபதி, தான் ஜனாதிபதியாக



பதவியேற்று முதன்முதலாக சீனா சென்றபோது அந்நாட்டு மக்களும்,அரசும் தனக்கு மிகுந்த வரவேற்பளித்ததாகவும் தெரிவித்தார். (இ-10)

# புலம்பெயர் தமிழர்களுடன் மங்கள பேசியதில் எந்தத் தவறும் இல்லை


## அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்களுடன் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பேச்சு நடத்தியதில் எந்தத்தவறும் கிடையாது. புலம்பெயர் தமிழர்களுடன் இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டில் புலம்பெயர் தமிழர்களுக்கும் வெளிவிவகார அமைச்சருக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பு குறித்து வினவப்பட்டது. இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சு நடத்தப்பட்டது. சிறந்த வெளிவிவகார அமைச்சராக மங்கள சமரவீர செயற்பட்டு வருகிறார்.



அவர் புலம்பெயர் தமிழர்களுடன் சந்தித்து பேச்சு நடத்தியதில் தவறு எதுவும் இல்லை. அவர்கள் பிரிவினைவாத கோரிக்கையுடையவர்களாக இருந்தால் அவர்களை எமது பக்கம் திருப்ப வேண்டும். அதற்கு பேச்சு நடத்துவது பொறுத்தமானதே என்றார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, புலம்பெயர் தமிழர்கள் பிரிவினைவாத நோக்குடையவர்கள் என ஒதுக்கிவிட முடியாது. பிரச்சினைகளுக்கு தீர்வு காண பேச்சு நடத்த வேண்டும் என்றார். (இ-10)

# மன ஆரோக்கிய விழிப்புணர்வு




இலங்கை முழுவதும் மன ஆரோக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடைபவனி தென்பகுதியிலிருந்து நேற்று 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறையை வந்தடைந்த போது...


(படம்:-கரணவாய் செய்தியாளர்)

# இந்தியாவுக்கு எதிராக போராடுகிறது நியூசிலாந்து

இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது நாள் ஆட்ட முடிவில்,

தமது முதலாவது இனிங்ஸில் ஆடி வரும் இந்திய அணி, ஏழு விக்கெட்டுகளை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், ரித்திமான் சகா 14 ஓட்டங்களுடனும்





ரவீந்திர ஜடேஜா ஓட்டமெதனையும் பெறாமல் உள்ளனர்.

முன்னதாக, செட்டேஸ்வர் புஜாரா 87, அஜிங்க ரகானே 77 ஓட்டங்களைப் பெற்று ஆட்ட மிழந்தனர். பந்துவீச்சில், நியூசிலாந்து அணி சார்பாக, மற் ஹென்றி மூன்று, ஜீதன் பட்டேல் இரண்டு, ட்ரெண்ட் போல்ட், நீல் வக்னர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினைக் கைபபற்றினர்.

முன்னர், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி, தமது அணி முதலில் துடுப்பெடுத் தாடும் என அறிவித்தார். இந்திய அணியில், காயமடைந்த லோகேஷ் ராகுலுக்குப் பதிலாக ஷிக்கர் தவான இடம்பெற்றதுடன்,

உமேஷ் யாதவுக்குப் பதில் புவனேஸ்வர் குமார் இடம்பெற்றார். நியூசிலாந்து அணியில், உடல் நலமின்மை காரணமாக, அணித்தலைவர் கேன் வில்லியம்ஸன் அணியில் இடம் பெறாத நிலையில், அவருக்குப் பதிலாக ஹென்றி நிக்கொல்ஸ் இடம்பெற்றார்.

இது தவிர, இஷ் சோதிக்குப் பதிலாக ஜீதன் பட்டேல் அணியில் இடம்பெற்றார். போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# கிரிக்கெட்டை மேம்படுத்த இலங்கை அணி திட்டம்

இலங்கையின் 100 கிரிக்கெட் வீரர்களை தேசிய பயிற்சி குழுவில் இணைத்து, அவர்களுடன் ஒப்பந்த உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ள இலங்கை கிரிக்கெட கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் ஏ கிரிக்கெட் அணியின் 30 வீரர்களை பிரதான (மத்திய) ஒப்பந்தத்திற்கும்,

20 இளைய கிரிக்கெட் ( வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரர்கள்) வீரர்களை விளையாட்டு ஒப்பந்தத்திலும், 25 பிரபல கிரிக்கெட் வீரர்களை மற்றுமொரு ஒப்பந்தத்திலும் சேர்த்து, மாகாண மற்றும் கழக மட்டத்திலான கிரிக்கெட் விளையாட்டை அபிவிருத்தி செய்ய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 25 உடன்படிக்கைகளில் கையெழுத்திடவுள்ளது.

கிரிக்கெட் வீரர்களையும் கிரிக்கெட் விளையாட்டையும் மேம்படுத்தும் நோக்கில் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின தலைவர் திலங்க சுமதிபால தலைமையிலான நிறைவேற்றுக்குழு இந்த தீரமானத்தை எடுத்துள்ளது. (க)

# அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார் நட்சத்திர வீரர் ரொனால்டோ

போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

ரொனால்டோவுக்கு சொந்தமான 15 மில்லியன் பவுண்ட் மதிப்புள்ள தனியார் விமானம் கடந்த திங்கள் அன்று பார்சிலோனாவில் உள்ள விமான நிலையத்தில் தரையிறக்க முற்பட்டுள்ளது.

ஆனால் தரையிறங்குவதற்காக விமான ஓட்டுநர் விமானத்தின் கியரை பயன்படுத்தும் போது, தொழில்நுட்ப கோளாறு காரணமாக பிரச்சினை ஏற்பட்டுள்ளது. விமானத்தை கட்டுபபடுத்த முடியாத காரணத்தினால், விமானம் தரையில் முட்டி மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. அதிர்ஷ்டவச மாக விமானத்தில் யாரும் பயணம் செய்யாத காரணத்தினால், விமான



ஓட்டுநருக்கு மட்டும் சிறிதாக காயம் ஏற்பட்டுள்ளது. விமானத்தின் பாகங்கள் முக்கியமானவை சில உடைந்துள்ளன. (க)

# யூரோப் லீக் வென்றது மன்செஸ்டர் யுனைட்டெட்

உக்ரேனிய கத்துக்குட்டி அணியான ஸோர்யா லுஹன்ஸ்க்கை தோற்கடித்த மன்செஸ்டர் யுனைட் டெட், ஐரோப்பிய லீக் குழுவின் இறுதி இடத்திலிருந்து முன்னேறியுள்ளது.

போட்டியின் 65ஆவது நிமிடத்தில் மாற்று வீரராகக் களமிறக்கப்பட்ட வெய்ன் ரூனி அடித்த பந்தொன்று கோல் கம்பத்தில் பட்டுத் திரும்பி வந்த நிலையில், அதை, ஸல்டான் இப்ராஹிமோவிக் கோலாக்கினார். கடந்த ஐந்து போட்டிகளில், இப்ராஹிமோவிக் பெற்ற முதலாவது கோல் இதுவாகும்.



போட்டியின்போது, 70 சதவீதமான நேரத்தில், மன்செஸ்டர் யுனைட்டெட்டே பந்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதும், மெதுவாகவே யுனைட்டெட் ஆடியிருந்தது. (க)


# "த தோனி" வெளியானது! ரசிகர்கள் உற்சாக வரவேற்பு

இந்திய கிரிக்கெட் வீரர் தோனியின் வாழ்க்கை வரலாற்று படம் நேற்று உலகமெங்கும் பிரமாண்டமாக வெளியாகியுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் சாதனை தலைவரான டோனியின் வாழ்க்கை படமான "எம்.எஸ். டோனி த அண்டோல்ட் ஸ்டோரி" என்ற படம் 60 நாடுகளில் 4 ஆயிரத்து 500 திரையரங்குகளில் வெளியாகியுள்ளது.

ஆனால் டோனி படத்தை திரையிட பாகிஸ்தானில் தடை விதிக்கப்பட்டுள்ளது. யூரி தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியா 7 தீவிரவாத முகாம்களை அழித்தது.


இதற்காகவே தோனி படம் பாகிஸ்தானில




தடைவிதிக்கப் பட்டதாக கூறப்பட்டு வந்த நிலையில், சென்சார் போர்டு சான்றிதழ் அளிக்கவில்லை என்று புதுக்கதை கூறியுள்ளது பாகிஸ்தான்.

எனினும் வெளியாகியுள்ள மற்ற நாடுகளில் டோனியின் வாழ்க்கைப் படம் ரசிகர்களின் மாபெரும் வரவேற்பை பெற்றுள்ளது. (க)

# புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?



(கொழும்பு)

ஓய்வுபெற்ற முன்னாள் கிரிக்கெட் வீரர் திலகரட்ண டில்ஷானின் மகன் ரேசாந்து திலகரட்ண அண்மையில் இடம்பெற்ற 13 வயதிற்குட்பட்டோர் கிரிக்கெட் போட்டியில் ஆட்டமிழக்காமல் 114 ஓட்டங்களை பெற்றுக் கொண்டுள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தும் ரேசாந்து தலகரட்ண கோட்டை புனித தோமஸ் கல்லூரிக்கு எதிரான போட்டியிலேயே இவ்வாறு சதம் அடித்து, அணிக்கு வெற்றியை பெற்றுக் கொடுத்துள்ளார்.

சிறுவயதிலேயே இவ்வாறு திறமைகளை கொண்டுள்ள ரேசாந்து எதிர்காலத்தில் டில்ஸ் கூப்பை ஞாபகப்படுத்துவார் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (க)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி யோகராசா நித்தியா (BA)
கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 27.09.2016 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கண்டிப் பேராதனைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டம் பெற்ற
செல்வி யோகராசா நித்தியா (BA)
அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர் :
செல்வராசா பாசமலர்
செல்வராசா மதனகுமார்
செல்வராசா கதிஸ்வரன்

கோண்டாவில்,
தில்லையம்பதி.

### ஜோதிடத் தகவல்
**திருமண யோகம்**

குரு, சுக்கிரன் ஜென்ம லக்கினத்தையாயினும் சந்திர லக்கினத்தையாகிலும் பார்வை செய்தால் வாலிபத்தில் திருமணம் நடக்கும். சந்திர லக்கினத்தை சனி, செவ்வாய் பார்வை செய்தால் மனச்சஞ்சலத்தோடு தலை நரைத்த பின்னும் திருமணம் ஆகாது இருப்பாள்.

# இருதய நோயாளர்களுக்கு இலவச ஸ்டென்ட் கருவிகள்

இருதய நோயாளர்களுக்கு "ஸ்டென்ட்" கருவிகளை இலவசமாக வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இருதய சிகிச்சைக் காக பயன்படுத்தப் படும் ஸ்டென்ட் கருவியொன்றின் விலை 75 ஆயிரம் ரூபாவாகும் என்றும் முதற் கட்டமாக அரசாங்கம் 37 மில்லியன் ரூபாவை செலவிடவுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்தது. சுகா தார அமைச்சர் ராஜித சேனாரத்ன வின் வழி காட்டலில் இலங்கையில் முதல் தடவையாக இந்த "ஸ்டென்ட்" கருவி இலவசமாக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இருதய சிகிச்சைக்கு உபயோகிக்கும் இக்கருவி நேற்று முன்தினம் அரசாங்க வைத்தியசாலைகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக அமைச்சிலிருந்து விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2017 ஆம் ஆண்டுக்கான ஸ்டென்ட்கள் சுகாதார அமைச்சினால் இப்போதே முன் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன இருதய நோய் நிபுணர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே மேற்படி கருவியை இலவசமாக வழங்குவதற்குத் தீர்மானித்ததாகத் தெரிவித்தார்.

முற்றிலும் இலவச மருத்துவ சிகிச்சையை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே இத்தீர்மானத்தை மேற்கொண்டதாகக் குறிப்பிட்ட அவர் இதற்கான நிதியைத் திறைசேரியிலிருந்து பெற்றுக் கொள்ளவில்லை என்றும் சுகாதார அமைச்சின் ஊழல் நிறைந்த டெண்டர் முறையை நிறுத்தியதில் மீதப்படுத்த முடிந்த நிதியிலேயே "ஸ்டென்ட்" கருவிகளை கொள்வனவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். (இ-10)


## புலமைப்பரிசில் வகுப்புக்கள்

2017 இல் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான தனிப்பட்ட மற்றும் குழு நிலை வகுப்புக்கள் மற்றும் ஆங்கில வகுப்புக்களுக்கு அழையுங்கள்.

**T.தயாளன்- BBA**
077 442 5229 (யாழ்.நகர்)
(6075)


## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts up to 18.10.2016.

**Unit of Allied Health Sciences, Faculty of Medicine**

Temporary Demonstrator in Nursing/ Pharmacy /Medical Laboratory Sciences

| Post | Salary Scale |
|---|---|
| Temporary Demonstrator | Rs.21,370/(fixed)p.m |

Perfected applications shall be sent to the Deputy Registrar/ Academic Establishments, university of Jaffna, Thirunelvely, Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/Academic Establishments, university of Jaffna, srilanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order /Postal Order drawn in favour of the Bursar, university of Jaffna together with a self addressed stamped envelope 23x10c.m in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the university Website Should attach a Money Order/Postal Order For Rs.100/- to the application form drawn in favour of the Bursar, university of Jaffna.

Those who wish to apply for more than one post should apply in separate forms.

Applications from the University system /Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions.Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA SRILANKA.**
**30.09.2016**
(C-5949)

## கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 | 29 |
| 01 | 09 |
| 1948 | 2016 |

New Science World கல்வி நிறுவன உயிரியல் ஆசிரியர்
**திரு.சு.பொன்திவாகரன்** அவர்களின் அன்பு மாமனார்
**அமரர் இராமநாதன் இராமச்சந்திரன்**
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**New Science World இயக்குநர், சக ஆசிரியர்கள், பணியாளர்கள்.**
(C-5942)


அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
◆ செய்திகள்
◆ புகைப்படங்கள்
◆ நிகழ்வுகள்
◆ பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல
076 636 3378

Viber


## இராசி பலன்

01.10.2016
(புரட்டாதி 15, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
பிரதமை முழுவதும்
அத்தம் பின்னிரவு 12.23 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
நவராத்திரி விரதாரம்பம்
மூன்றாம் புரட்டாதிச் சனி

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சதயம்,பூரட்டாதி | | |
| | | | ராகு |
| செவ் | சனி | சுக் | சூரி, குரு<br>சந், புத |

**மீனம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**மேடம்:** கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், குடும்ப மகிழ்ச்சி கூடும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியமான நாள்.

**இடபம்:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வியாபார விருத்தியுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்:** பொதுக்காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பணவரவு திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்களால் பலனுண்டு, சுபசெலவுகள் கூடும் நாள்.

**கும்பம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், விரயங்கள் கூடும், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.

**கடகம்:** பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், காரிய அனுகூலமுண்டு, நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும்.

**மகரம்:** மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**சிம்மம்:** இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பேச்சில் இனிமை பிறக்கும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்:** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், கூட்டாளிகளிடம் கொஞ்சம் கவனம் தேவை, பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.

**கன்னி:** குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், சிந்தனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

# வடபகுதியில் நிறுவப்பட்டுள்ள பல வங்கிகள் பொதுமக்களுக்கு உதவிகரமானதாக இல்லை

## மாவை எம்.பி.விசனம்

வடபகுதியல் நிறுவப்பட்டுள்ள பல வங்கிகள் பொது மக்களுக்கு உதவிகரமான தாக இல்லை என யாழ் .மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிர்மாண நிர்மாணிகள் சங்கத்தின் புதிய நிர்வாக சபையினை தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டம் நேற்றைய தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

போரினால் அழிக்கப்பட்ட வட மாகாணத்தில் போருக்கு பின்னரான சூழ்நிலையில் அரசின் ஒதுக்கீடு, நன்கொடையாளர்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் பல இப்பிரதேச அபிவிருத்தியில் ஈடுபடும் போதும் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை செய்யும் போதும் நாம் அவதானித்த ஒரு விடயம் என்னவெனில் தென்னிலங்கையில் இருந்து பெரும் முதலாளித்துவத்தை கொண்டவர்கள் அரசின் சலுகையுடன் இங்கு வந்து ஒப்பந்தங்களை, திட்டங்களை நிறைவேற்றுகின்றனர். அது எமது மனதில் ஆதங்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பல கோடி நிதியிலான பெரிய திட்டங்களை நிர்மாணிக்கும் போது பெரிய தொழில்நுட்ப உபகரணங்களுடன் வந்து தமது வேலைகளை செய்கிறார்கள். அத்துடன் பல கனரக வாகனங்கள் வீதி ஒழுங்கு முறை இல்லாமல் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. இதனால் விபத்துக்கள் நடைபெற்று கொண்டுதான் உள்ளன. எங்கு பார்த்தாலும் அவர்களின் நடமாட்ட மற்றும் நிர்மாணம் உள்ளது. சாதாரண தொழிலாளிகள் கூட தென்னிலங்கையில் இருந்து தான் வருகிறார்கள். அதற்கு மாற்று வழி இல்லாமல் அவற்றை தடுக்க முடியாமல் இருப்பது கவலைக்குரியது. தன்னிச்சையாகவோ அல்லது அரச அதிகாரிகளின் ஒத்துழைப்புடனோ பல நடவடிக்கைகளை செயற்படுத்துகிறார்கள்.

கடந்த காலத்தில் அமைச்சு அதிகாரத்திலிருந்து இராணுவத்துடன் சேர்ந்து இயங்கியவர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அரச நிறுவனங்களை சார்ந்துள்ள விசாரணை நிர்வாகத்தில் பல பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன.

பல துறைகள் நேர்மையான நிர்வாகம் இல்லாமல் மிக மோசமாக உள்ளன. விசாரணையின் போது செல்வாக்குள்ள அரசியல்வாதிகள் மோசடிகளின் பின் இருக்கிறார்கள் என தெரியவந்துள்ளது.

மிகப்பெரும் தொகையாக அரசுக்கு வழங்கப்படாத ஆயிரம் கோடி ரூபாய்கள் இரத்து செய்யப்படுகிற நிலைமை தொடர்ச்சியாக இருந்து வருகிறது. அது தவறு என கண்டு பிடிக்கப்படும் பட்சத்தில் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் அதற்கான தண்டனை வழங்கவும் பாராளுமன்றத்தில் சட்டம் இல்லை. அதற்கான சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தற்போது சிபாரிசு செய்யப்படுகிறது

மோசடி இல்லாமல், ஊழல் இல்லாமல் எமக்கு ஒதுக்கும் பணத்தை நேர்மையாக செலவளிக்க வேண்டும். வடக்கில் உள்ள ஒப்பந்தக்காரர்கள் வங்கிகளில் இருந்து குறிப்பிட்ட அளவுக்கு மேல் பணத்தினை பெற முடியாது உள்ளார்கள்.

எமது பிரதேசத்தில் பல வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன. அவைகள் நட்டத்தில் உள்ளன, அவ்வங்கிகள் பல தமது ஊழியர்களுக்கு சம்பளம கொடுக்க முடியாத நிலையில் உள்ளன. வங்கிகள் அதிகம் எமது பகுதிகளில் நிறுவப்பட்டாலும் அவை சாதாரண மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் உதவி கரமானதாக இல்லை என பதை அறிய முடிகிறது.

பல கோடி ஒப்பந்தக்காரர் அரசுடன் இலகுவாக ஒப்பந்தம் செய்கிறார்கள். ஆனால் எமது பகுதிகளில் உள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு வாய்ப்பில்லை. வடக்கில் உள்ள ஒப்பந்தக்காரர்களிடம் கட்டட நிர்மாணப் பணியில் நவீன இயந்திர சாதனங்கள் இல்லை. பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் இல்லை, சாதாரண நிர்மாணப் பணியில் ஈடுபடும தொழிலாளர்கள் இல்லை. பயிற்றப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என மதிப்பிட வுமில்லை. இது பாரிய குறை பாடாகவுள்ளது.

போர் முடிந்தது என்று அல்ல, ஆயுதப் போர்தான் முடிந்துள்ளது. இந்த நிலையில் நாம் ஒரு இலக்கை நோக்கி செல்கிறோம். இன்றைய கால கட்டத்தில் அமைச்சில் இடம்பெறமாட்டோம். அரசுக்கு பொருத்தமான ஒத்துழைப்பு, ஆதரவு வழங்குவோம். அதேபோல் மாகாண சபை அரசிடம் பேசி திட்டங்களை நிறைவேற்ற பங்களிப்பு செய்ய வேண்டும்.


அழிந்து போன தேசத்தில் மீள நிர்மாணம் செய்ய தகுதியுள்ளவர்களாக இருக்கிறோமா? திட்டங்கள் இருக்கிறதா? சிறந்த திட்ட தயாரிப்பாளர்கள் இருக்கிறார்களா? என்ற மதிப்பீடுகளை அதை மாகாண சபை செய்திருக்க வேண்டும்.

இன்னும் வருகின்ற 3 ஆண்டுகளில் எமது தேசத்தை கட்டியெழுப்ப வேண்டும். புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் பல நாடுகள் வடகிழக்கில் கோடிக்கணக்கில் முதலீடு செய்ய உள்ளார்கள். அவர்களுக்கு ஈடு கொடுக்கும் அளவிலான திட்ட அமைப்பாளர்கள் எம்மிடம் இல்லை. அதற்கு எமது இளைஞர்களை தயார்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)



அனலைதீவு தெற்கு புளியந்தீவு அருள்மிகு ஸ்ரீநாகேஸ்வர சுவாமி திருக்கோயில் வருடாந்த பெருவிழாவை முன்னிட்டு அண்மையில் பத்து நாட்கள் தொடர் இசைச்சொற்பொழிவு நிகழ்த்திய நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவை பாராட்டி பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ.வெ.நாராயணக் குருக்கள் சர்மாவுக்கு மலர்மாலை சூட்டி பொற்கிழி வழங்குவதை படத்தில் காணலாம்.

## அரசாங்க நிர்மாணிகள் சங்க புதிய நிர்வாக சபைக்கூட்டம்





(யாழ்ப்பாணம்)

வடமாகாண அரசாங்க நிர்மாண நிர்மாணிகள் சங்கத்தின் புதிய நிர்வாக சபையின்ன தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் நேற்றைய தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வட பிரதேச நிர்மாணிகள் சங்கம் 1982 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இந்நிலையில் செயற்படாமல் இருந்த அச் சங்கத்தை மீள இயங்கச்செய்வதற்கும் எதிர் கால நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கும் இந்த நிர் வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண அரசாங்க நிர்மாண நிர்மாணிகள் சங்கத்தின் தலைவர் எஸ். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வடமாகாண சபை விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், வடமாகாண சபை உறுப்பினர்களான அரியரட்ணம், பரஞ்சோதி, வடமாகாணத்தில் உள்ள கட்டட ஒப்பந்தக்காரர்கள் .உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)


## பாலகர்களின் கல்விச் சுற்றுலா

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பு மலரும் மொட்டுக்கள் பாலர் பாடசாலை,மானிப்பாய் வண்ணத்துப்பூச்சி பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான மகிழ்வூட்டும் செயற்றிட்டமாக கல்விச் சுற்றுலா இன்று முதலாம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதனூடாக மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு வித்திடுவதோடு மாலை நேர நிகழ்வாக பட்டம் ஏற்றும் விழாவைக் கொண்டாடி அகம் மகிழ்வடையவுள்ளனர். இப்பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்கள் அனைவரும் பங்கு கொள்ள முடியும் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-3)




## வடமராட்சிப் பகுதியில் டெங்கு ஒழிப்பு தீவிரம்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சியின் கரவெட்டி, பருத்தித்துறை சுகாதாரப் பகுதியினரினால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் கடந்த 29ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து இவ் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வீடுகள்,கடைகள்,வீதிகள் போன்றவற்றினை பார்வையிட்டு டெங்கு பரவும் சூழல் உள்ள பகுதிகளை அழித்தல், சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. (இ-60)

## மகாஜனக் கல்லூரியின் சிறுவர் தின நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் சிறுவர் தினமும் சிறுவர் விளையாட்டு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

கல்லூரி அதிபர் ம.மணிசேகரன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் உள சமூகவள நிலைய நிபுணத்து ஆலோசகர் திருமதி கோகிலா மகேந்திரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்ட ஆரம்பப்பிரிவு, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி ஜெயரஞ்சினி மயில்வாகனம், கௌரவ விருந்தினர்களாக கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலய ஆசிரியை திருமதி சத்தியநிதி சசிதரன், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஆரம்ப பாடசாலை ஆசிரியை திருமதி சிவானி வேல்முருகு ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## சிறுவர் தின நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சிறுவர் தினம் இன்று முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

பிரதம நூலகர் திருமதி. சுகந்தி சதாசிவ மூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக யாழ்மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய சிறுவர் கழகத்தினர், கிட்ஸ்கோச்சிங்நிலைய மாணவர்கள் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

சிறுவர்களுக்கான மகிழ்வூட்டல் நிலையத்தினரால் CCH சிறுவர் நாடக நிகழ்வுகள்,சிறுவர் பாடல்கள்,சிறுவர் மகிழ்வூட்டல் பயிற்சிகள் என பன நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3-51)

# மிருகங்களுக்கு நீர் வழங்க நடவடிக்கை

வரட்சியினால் பாதிக்கப்பட்ட மிருகங்களுக்கு நீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நிலையான அபிவிருத்தி மற்றும் வனவிலங்குகள் நல பதில் அமைச்சர் சுமேதா ஜயசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடும் வரட்சி காரணமாக விலங்குகள் நீரைத் தேடி கிராமங்களுக்குள் பிரவேசிப்பதனை தடுக்கும் நோக்கில் தேசிய வனவிலங்கு சரணாலயங்களில் பவுசர் மூலம் நீர் விநியோகம் செய்யும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யால,உடவளவ, வில்பத்து, லுனுகம்வெஹர, பந்துல, குமண, கல்ஓய உள்ளிட்ட வனவிலங்கு சரணாலயங்களில் பவுசர் மூலம் விலங்குகளுக்கு நீர் வழங்கப்படுகின்றது.

தேசிய வனவிலங்கு சரணாலயங்களில் காணப்படும் சிறுகுளங்கள் ஏரிகளுக்கு நீர் விநியோகம் செய்யப்படுகின்றது.

சிலசரணாலயங்களில் சூரியசக்தி மூலமான நீர்ப்பம்பிகளின் ஊடாக சிறு ஆறுகளுக்கு நீர் விநியோகம் செய்யப்படுகின்றது.

வரட்சி காரணமாக விலங்குகள் கிராமங்களுக்குள் பிரவேசிப்பதனால் பாரியளவு பாதிப்புக்கள் ஏற்படக்கூடுமென அவர் தெரிவித்துள்ளார்.(இ-10)


யாரிடம் பேசுவது ?

மனதில் சுமையா?
வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா?
துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்.

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். எடை போட மாட்டோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளை நீங்கள் கண்டறிய உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், எத்தனை நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம். ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை

தொலைபேசியில் அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள். உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

கை கொடுக்கும் நண்பர்கள்

104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

(021) 222 8117 / 077 900 8776

(தினமும் காலை 9.00-1.00)

வவுனியாவில் (024) 324 4444 சனி, ஞாயிறு காலை 9.00—1.00

(மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)

Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)


## வீரத்தின் திருவுருவமே



வீரத்தின் திருவுருவமே– உன்னை
விழுந்ததும் கைகூப்பினேன்
மகிசா சூரனை வதைத்தவளே–உன்னை
மனதோடு என்றும் வைப்பேன்

உண்மையின் திருவுருவமே–உன்னை
உணர்வுகளால் நான் காண்பேன்
வர்ணங்களின் ஜாலமே –உன்னை
வணங்க என் இரு கை போதாது

கல்வியங்காடு–ச.கனுசிகா


அழைப்பிதழ்



225 ஆவது ஞானச்சுடர் வெளியீடு
ஆச்சிரம சுவாமிகளுக்கான கௌரவிப்பு
கட்டுரையாளர் கௌரவிப்பு



இடம்:
சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்:
02.10.2016 ஞாயிற்றுக்கிழமை
காலை 08.00 மணி

நிகழ்வுகள்: ஆலய வழிபாடு
வரவேற்பு
மங்கல விளக்கேற்றல்
பஞ்சபுராணம் ஓதுதல்
வரவேற்பு நடனம்
வரவேற்புரை : திரு. சி.நாகலிங்கம்
ஆசி உரைகள்: பேரவைப் போஷகர்கள்
நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர்
பிரம்மஸ்ரீ ப.மனோகரக் குருக்கள்
தலைமை உரை: திரு. அ.குமாரவேல்

வாழ்த்துரைகள்
கலைநிகழ்வுகள்

விருது வழங்கல்:
வணக்கத்துக்குரிய கணேசானந்தா மகாதேவாச் சுவாமிகள்
விருது பெறுபவர்:
சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகி சுவாமி மோகனதாஸ்
வாழ்த்துப்பா: திரு. க.ஆனந்தராசா

ஆவணப்பட வெளியீடு
ஞானதான மலர் வெளியீடு

மலர் அறிமுக உரை: இரா.செல்வவடிவேல்
225 ஆவது ஞானச்சுடர் மலர் வெளியீடு
வெளியீட்டுரை : திரு.சி.சிவஞானராஜா
மதிப்பீட்டுரை : திரு.ச.லலீசன்

2014-2015 வரையான காலப்பகுதிக்குள்
ஞானச்சுடரில் இடம்பெற்ற கட்டுரையாளர் கௌரவிப்பு
நன்றியுரை: விழாக்குழுச் செயலாளர் திரு.ஆ.சிவநாதன்
"அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்."

விழாக் குழுவினர்.





மனமார்ந்த வாழ்த்துக்கள்

இராசையா குவேந்திரநாதன்

கல்விக்கொடையாளன், பதிவரோதயன் இராசையா குவேந்திரநாதன் அவர்களின் தொடரும் சமூகப் பணியை பாராட்டி 29.09.2016 அன்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகத்தால் நடைபெற்ற கௌரவிப்பு விழாவின் போது அன்னாரால் இருபத்தைந்து(25)மாணவர்களுக்கு அன்பளிப்புக்களும் எட்டு(8) மாணவர்களுக்கு இரண்டு வருடங்களுக்கு ஊக்குவிப்பு நிதியும் வழங்கி சமூகத்தினருக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் அன்னாரின் சேவையினை நாமும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

ஐங்கரன் களஞ்சியம்
இல. 06, பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(0067)



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா:16
உயரம்: 5’4"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு:முகாமையாளர் (தனியார்)
தொ.இ: B/5153

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா: 67 செவ் 7 இல்
தகைமை/தொழில்: சமுர்த்தி உத்தியோகத்தர் (அரச)
தொ.இ: B/5158

பிறப்பு: 1987இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம் 4
கி.பா:22 சூரி செவ்11இல்
உயரம்:5’7"
தகைமை/தொழில்:A/Lதனியார் நிறுவன உரிமையாளர்
தொ.இ: B/5162

பிறப்பு: 1973இந்து
நட்சத்திரம்:பூசம் 4
கி.பா:16.5 செவ் 12 இல்
உயரம்:5’4"
தகைமை/தொழில்:Bsc ,MscUK PR
தொ.இ: B/5163

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1980இந்து
நட்சத்திரம்:அனுசம்
கி.பா: 108
உயரம்: 5’
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/2157

பிறப்பு: 1975இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 4
கி.பா: 18.75
உயரம்:5"
தகைமை/தொழில்:Accounting diploma (Canada Citizen)
எதிர்பார்ப்பு: வெளிநாடு கனடா மட்டும் உள்நாடு எனின் உயர் பதவி
தொ.இ: G/2159

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: 15.5
உயரம்:163cm
தகைமை/தொழில்:Cima (UK) விரிவுரையாளர் (தனியார்)
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: G/2160

பிறப்பு: 1973RC
நட்சத்திரம்:அத்தம் 2
கி.பா:28.5 செவ் 8 இல்
உயரம்: 5’4"
தகைமை/தொழில்:B.Aபட்டதாரி programmer (அரச)
எதிர்பார்ப்பு: இந்து சமயமும் ஏற்கப்படும்
தொ.இ: G/ 2169

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai jaffna@gmail.com
021 7201005,021 2215434

# நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான பேருந்தில் கடத்தப்படவிருந்த பாலைமரக்குற்றிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்





(பரந்தன்)

கிளிநொச்சி-யாழ்ப்பாணம் வழித்தடங்கலில் பயணிக்கும் தனியார் பேருந்து ஒன்றில் கடத்தப் படுவதற்கு தயாரான நிலையில் வைக்கப்பட்டிருந்த சுமார் நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான பாலை மரக்குற்றிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 3.45 மணியளவில் வடகாடு மாங்குளம் காட்டுப்பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டது.

கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதேசப் பொலிஸ்மா அதிபரின் விசேட பிரிவினரால் சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது.

கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின்படி உதவிப் பொலிஸ் பரிசோதகர் இந்து பிரதீபன், பொலிஸ் சார்ஜன்ட் லால் குமார, சிறி, ஏக்கநாயக்க, சோமரட்ன, சியாம், சிவஜங்கரன் ஆகியோர் கொண்ட சிறப்புக் குழுவினருக்கு கிடைத்த இரகசியத்தகவலை அடுத்து நேற்று அதிகாலை 3.45 மணியளவில் வடகாடு மாங்குளம் காட்டுப்பகுதியில் வைத்து கிளிநொச்சி யாழ்ப்பாணம் வழித்தடங்கலில் பயணிக்கும் பேருந்து ஒன்றில் கடத்தப்பட்ட சுமார் நான்கு இலட்சம் பெறுமதியான 12 அடி நீளமான 6X4 அளவுடைய 55 பாலை மரக்குற்றிகளுடன் சந்தேக நபர்கள் மூவரையும் குறித்த குழுவினர் கைது செய்துள்ளதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-312)




## வாகனங்களில் மரக்குற்றிகளை கடத்த முற்பட்ட இருவருக்கு விளக்கமறியல்

ஓமந்தை கொம்புவைத்தகுளம் காட்டுப்பகுதியில் இரு வாகனங்களில் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மரக்குற்றிகளை கடத்த முற்பட்ட இருவர், கடந்த 28 ஆம் திகதி புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, அவர்களை எதிர்வரும் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (2)





அமரர் கனகசிங்கம் சத்தியமூர்த்தி நினைவாகவும் உலக சிறுவர் தினமான ஒக்டோபர் முதலாம் திகதியையும் முன்னிட்டு குருதிக் கொடை முகாம் கடந்த 28 ஆம் திகதி கிளி/இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கிளி/இந்துக்கல்லூரியின் உயர்தர மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் இணைந்து குருதிக்கொடை முகாமில் பங்கேற்றிருந்தனர். (படங்கள்:-கிளிநொச்சி செய்தியாளர்)

## டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு டெங்குப் பரிசோதனை

தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு முசலி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஒஸ்மன் சாள்ஸ் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அப்பிரதேசத்தில் டெங்குப் பரிசோதனைகள் இடம்பெற்றன.

முசலி பிரதேசச் செயலாளர் பிரிவிற்குட்பட்ட வேப்பங்குளம், பொற்கேணி, ஆகிய பிரதேசத்தில் டெங்கு நிகழ்வு நடைபெற்ற போது இதில் பொது சுகாதார பரிசோதகர்கள்.முப்படையினர்கள்.சுகாதார உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகெண்டனர்.

தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு முசலி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஒஸ்மன் சாள்ஸ் தலைமையில் இரண்டாவது நாளாக குறித்த பிரதேசத்தில் டெங்கு நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (2)



மு/அம்பலவன் பொக்கணை மகா வித்தியாலயத்திற்கான புதிய கட்டடத்தை கடந்த 28ஆம் திகதி வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

## 12 மீனவர்களுக்கு அபராதம் விதிப்பு

முல்லைத்தீவு, நந்திக்கடல் நீரேரியில் தடை செய்யப்பட்ட கூட்டு வலையைப் பயன்படுத்தி மீன்பிடித்த 12 மீனவர்களுக்கு ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து முல்லைத்தீவு நீதவான் எஸ்.எம்.எஸ்.ஸம்சுதீன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தீர்ப்பளித்தார்.

முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் கடந்த 28ஆம் திகதி நந்திக்கடல் பகுதியில் நடத்திய சோதனை நடவடிக்கையில் இந்த 12 மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

மீனவர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது, அவர்கள் தங்கள் குற்றங்களை ஏற்றுக்கொண்டனர். இதனையடுத்து, அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டதுடன், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வலைகளை அழிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.(2)

# தீ விபத்தில் வாழ்வாதாரத்தை இழந்த கிளி.வர்த்தகர்கள் உதவிக்கரம் நீட்டுமாறு புலம்பெயர் உறவுகளிடம் வேண்டுகோள்

கிளிநொச்சி பொதுச்சந்தையில் கடந்த 16ஆம் திகதி அன்று ஏற்பட்ட தீ விபத்து காரணமாக தங்களது வாழ்வாதாரத்தை இழந்து சாம்பல் மேட்டில் நின்று தங்களுக்கு உதவிக்கரம் நீட்டுமாறு கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தகர்கள் புலம்பெயர் உறவுகளிடம் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பொதுச்சந்தையில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக பாதிக்கப்பட்டவர்களிற்கு உதவி வழங்குமாறு கோரி நேற்றுக் காலை கிளிநொச்சி பொதுச்சந்தை வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேசத்தில் வாழும் புலம்பெயர் சமூகம் உதவ முன்வர வேண்டும்என இதன் போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

கிளிநொச்சி சந்தை வர்த்தக அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் அ.யேசுராஜன், செயலாளர் இ.கிருஸ்ணராசா, பொருளாளர் சு.ஜீவராஜ் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள வர்த்தகர்கள் சிலர் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கிளிநொச்சி பொதுச் சந்தையில் ஏற்பட்ட பாரீய தீ காரணமாக முழுமையாகவும் பகுதியளவிலுமாக 124 வியாபார நிலையங்கள் அழிவடைந்துள்ளன.



யுத்தமும் அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வும் அதன் விளைவாக ஏற்பட்ட உயிர் உடைமைகள் இழப்பும் எனப் பல்வேறு அழிவுகளிலிருந்து ஓரளவுக்கு மீண்டு வங்கிகள், நிதி நிறுவனங்கள், மொத்த வியாபாரிகள் ஆகியோரிடம் கடன்களை பெற்று கடன் முதலீட்டுடன் எங்களுடைய வியாபாரத்தை ஆரம்பித்தோம். இதன் மூலம் இனிமேலாவது எங்கள் வாழ்வில் சிறிய முன்னேற்றத்தையாவது எட்டமுடியும் என நம்பினோம்.

முன்னேற்றப் பாதையில் ஒரு சில அடிகளை எடுத்து வைக்க முன் தீ எல்லாவற்றையும் முற்றுமுழுதாக அழித்துவிட்டது. ஆகவே எமது ஒரேயொரு வாழ்வாதாரமாக இருந்த கடைகள் இன்று சாம்பல் மேடாக காட்சியளிக்கிறது.

எங்களுடைய வியாபாரிகள் இனி உதவிகள் இன்றி வழமைக்கு திரும்ப முடியாத நிர்க்கதியான நிலையில் நம்பிக்கையற்று காணப்படுகின்றனர். ஆகவே எமக்கு தற்போது இருக்கின்ற ஒரேயொரு நம்பிக்கை என்பது நீங்கள் நீட்டுகின்ற கருணைமிக்க உதவிக்கரமே!.

கடன் சுமையை தாங்க முடியாது தத்தளிக்கும் உறவுகளுக்கு கை கொடுத்து உதவுங்கள்.

புலம்பெயர் எம் உறவுகள், புலம்பெயர் பொது அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஆகியோரிடம் கோருகின்றோம். உங்களால் முடிந்த உதவிகளை நேரடியாக சந்தை வர்த்தக சங்கத்தின் ஊடாக மேற்கொள்ளுங்கள் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15-312)

## அமரா பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உதவிகள்

(மல்லாவி)

ஓம் சற்குரு ஸ்ரீசரவணபாவாவின் 31ஆவது ஜெயந்தி தினத்தை முன்னிட்டு லண்டனிலுள்ள ஓம் சற்குரு ஸ்ரீசரவணபாவா அறக்கட்டளை நிதியத்தின் 10 இலட்சம் ரூபா நிதியனுசரணையுடன் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேச அமரா பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வள்ளிபுரம் இனிய வாழ்வு இல்லத்தில் நடைபெறும்.

இதன்போது 37 பயனாளிகளுக்கு துவிச்சக்கர வண்டிகள், 118குடும்பங்களுக்கு உலருணவு பொதிகளுடன் உடுபுடைவைகளும் மதியபோசனம் என்பன வழங்கப்படவுள்ளன.

அத்தோடு இனிய வாழ்வு இல்ல ஆசிரியர்களுக்கும் உதவிகள் வழங்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)



வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதனுடைய இவ்வாண்டுக்கான மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட 28 கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள் கடந்த 27 ஆம் திகதி அவருடைய அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. (படம்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

## மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில்

# 8 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நிரந்தரமாக கிராம அலுவலர்களை நியமிக்கப்படவில்லை

### பாதிக்கப்பட்ட பொதுமக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் 15 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ள நிலையில் ,8 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நிரந்தரமாககிராமஅலுவலர்கள் இன்மையால் பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு பதில் கிராம அலுவலர்களைத் தேடி அலைந்து திரிவதாக பாதிக்கப்பட்டுள்ள கிராம மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவானது 494 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ள பெரியதொரு பிரதேசமாகும்.

இங்கு இடப்பெயர்வின் பின்னர் 2 ஆயிரத்து 932 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 197 அங்கத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இங்குள்ள 15 கிராம அலுவலர் பிரிவுகளில் கொல்லவிளான் குளம், சிவபுரம், பூவரசங்குளம், செல்வபுரம் , மூன்றுமுறிப்பு , விநாயகர்புரம் , பொன்னகர் , சிராட்டிக்குளம் ஆகிய எட்டு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நீண்ட காலமாக நிரந்தரமாக கிராம அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை.

கிராம அலுவலர்கள் இல்லாத பிரிவுகளுக்கு ஏனைய கிராமங்களில் கடமையாற்றுகின்ற நிரந்தர கிராம அலுவலர்கள் பதில் கடமையாற்றி வருகின்றனர்.

இதில் ஒரு கிராம அலுவலர் மூன்று கிராமங்களின் கடமைகளை ஆற்றுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் பொதுமக்கள் தமது அடிப்படைத் தேவைகள் தொடக்கம் வாழ்வாதார உதவித் திட்டங்கள் வரை பெற்றுக்கொள்வதற்கு கிராம அலுவலர்களின் சிபாரிசு தேவையாகவுள்ளது.

இவ்வாறான நிலையில் தமது கிராமத்திற்குரிய பதில் கிராம அலுவலரைத் தேடி அலைந்து திரியும் அவல நிலை காணப்படுவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

எனவே வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் , முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன், ஆகியோர் இவ்விடயத்தை கவனத்தில் எடுத்து நிரந்தர கிராம அலுவலர்களை நியமித்துத் தர வேண்டுமென கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர். (2-15)




# இராணுவத்தினர் சிகை அலங்கரிப்பு நிலையம் நடத்துவதால் தொழில் நடவடிக்கை பாதிப்பு

### வவுனியா சிகை அலங்கரிப்பாளர் சங்கம் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

வவுனியாவில் இராணுவத்தினர் சிகை அலங்கரிப்பு நிலையம் நடத்துவதால் தமது தொழில் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதாக வவுனியா சிகை அலங்கரிப்பாளர் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அதன் தலைவர் ஸ்ரீபன் கருத்து தெரிவிக்கையில்,

வவுனியா பம்பைமடு மற்றும் ஓமந்தை- நாம்பன்குளம் ஆகிய பகுதிகளில் இராணுவத்தினரால் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றது. நாம் பரம்பரை பரம்பரையாக செய்து வரும் தொழிலை இராணுவத்தினர் மேற்கொண்டு வருவதால் எம்மில் பலர் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மூன்று மாதங்களுக்கு முன்னர் பம்பைமடு இராணுவ முகாம் பொறுப்பதிகாரியுடன் இந்த விடயம் குறித்து கதைத்தோம். ஞாயிற்றுக்கிழமைகளில் எமது நிலையங்கள் பூட்டப்படுவதால் இராணுவத்தினரின் சிகை அலங்கரிப்பு நிலையங்களையும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடுமாறும் அல்லது பொதுமக்களுக்கு அன்றைய தினம் முடிவெட்டுவதை தவிர்க்குமாறும் கேட்டிருந்தோம். அத்துடன் எமது சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விலைப்பட்டியலை பயன்படுத்துமாறும் கேட்டோம். அவர்கள் இக் கோரிக்கைகளை எழுத்து மூலம் பதிவுத் தபாலில் அனுப்புமாறு கேட்டார்கள். அதன்படி அனுப்பியும் வைத்தோம். இன்றுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

வழமை போல் இராணுவத்தின் சிகை அலங்கரிப்பு வேலைகளை செய்து வருகிறார்கள். இதனால் எமது தொழில் பாதிக்கப்படுகின்றது. வவுனியா மட்டுமல்ல வடக்கு மாகாணத்தில் பரவலாக இத்தகைய வேலைகளில் இராணுவம் ஈடுபடத் தொடங்கியுள்ளது. இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி தமக்கு தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-250)

## கொக்குவெளியில் இருந்த மக்களை

# வெளியேறுமாறு கூறியதையடுத்து ஏ-9 வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்

(குருமன்காடு)

வவுனியா கொக்குவெளி பிரதேசத்தில் அமைந்துள்ள இராணுவ குடியிருப்பு பிரதேசத்திற்குள்நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் சென்ற இளைஞர் குழுவொன்று அங்கிருந்த சிங்கள மக்களை வெளியேற கோரியதால் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது.

கொக்குவெளி பிரதேசத்தை சேர்ந்த நபர் ஒருவரும் அவருடைய சகாக்களும் இணைந்தே தம்மை வெளியேற கோரியதாக அப்பகுதி சிங்கள மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் அச்சம் காரணமாக அப்பகுதியில் இருந்து சுமார் 30 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெளியேறி ஏ-9 வீதியில் நின்று போக்குவரத்துக்கும் இடையூறை ஏற்படுத்தினர். இதனால் ஒரு மணி நேரமாக போக்குவரத்திற்கும் தடை ஏற்பட்டது.

இதன் காரணமாக பதற்றமான நிலை ஏற்பட்டதை அடுத்து அப்பகுதிக்கு வவுனியா பொலிஸார் வரவழைக்கப்பட்டு குவிக்கப்பட்டு அச்சுறுத்தல் விடுத்தவர்களை கைது செய்வதாக கொடுத்த வாக்குறுதியை அடுத்து அப்பகுதி மக்களை அவர்களின் வீடுகளில் கொண்டு சென்று விட்டிருந்ததுடன் அப்பகுதியில் பொலிஸார் தொடர்ந்தும் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை இக் கிராமத்திற்கு அருகாமையில் தமிழ் மக்கள் வாழ்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (2-250)

# கசிப்பு உற்பத்தி விற்பனையில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் நபரொருவருக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து பாரிய அளவில் கசிப்பு உற்பத்தி விற்பனையில் ஈடுபட்டு வந்த முக்கிய நபர் ஒருவரை எதிர்வரும் 12 ஆம்திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த பல ஆண்டுகளாக சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகளில் ஈடுபட்டு வந்த பிரதான நபர் ஒருவரை கடந்த 27 ஆம் திகதி கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை கடந்த 28 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆயர்படுத்தியதை யடுத்து குறித்த நபர் ஏற்கனவே கிளிநொச்சி கல்லாறுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட வேளை கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் மீண்டும் கசிப்பு உற்பத்தி தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் விடுக்கப்பட்டமை தொடர்பான பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஏற்கனவே நீதிமன்ற வழக்குகளுடன் தொடர்புபட்டதை கவனத்தில் எடுத்துக்கொண்ட நீதிமன்றம் குறித்த நபரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் கடந்த 2015 ஆம்ஆண்டு கல்லாறுப்பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சமயம் ஏழு பரல் கோடா கசிப்பு உற்பத்தி உபகரணங்களுடன் கைது செய்யப்பட்டதுடன் கிளிநொச்சி கண்டாவளைப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்திகள் விற்பனைகளால் இளைஞர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பாக இந்தப்பகுதி மக்களால் இதனைக்கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுத்த சமயம் அவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தமை மற்றும் சட்டவிரோத கசிப்புக்கொண்டு சென்ற சமயம் கடந்த ஜூன் மாதம் முரசுமோட்டைச் சந்திப்பகுதியில் வீதி விபத்து ஒன்று தொடர்பில் வாகனச்சாரதியை கடுமையாக தாக்கியமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நபர் கடந்த காலங்களில் பொலிஸாரின் துணையுடன் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்ததாகவும் இதனால் ஏராளமான குடும்பங்கள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (2-15)

## 45 நாட்களுக்குள்

# நான்கு சிறுமிகள் தந்தையர்களின் துஷ்பிரயோகத்திலிருந்து காப்பாற்றப்பட்டனர்

நாடளாவிய ரீதியில் உலக சிறுவர் தினம் இன்று கொண்டாடப்படும் நிலையில் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குட்பட்ட ஒட்டுசுட்டான், மாங்குளம் , மல்லாவி ஆகிய பொலிஸ் பிரிவுகளில் கடந்த 45 நாட்களுக்குள் பாடசாலை செல்லும் 15 வயதுக்குட்பட்ட 4 சிறுமிகள் தமது தந்தையர்களினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளான நிலையிலும் மற்றும் துஷ்பிரயோகத்தில் இருந்து காப்பாற்றப்பட்டுள்ள நிலையிலுமான அதிர்ச்சிகரமான செய்தி பொலிஸ் தரப்பில் இருந்து வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, மாங்குளம்பொலிஸ் பிரிவிலுள்ள திருமுறிகண்டி இந்துபுரம் கிராமத்தில் மதுபோதையில் வந்த தந்தையொருவரினால் தனது முதல் மனைவியின் மகளான சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி விட்டு, தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ள பிரஸ்தாப நபரை மாங்குளம் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இதேபோல் மாங்குளம் நீதிபுரம் கிராமத்தில் சிறுமி ஒருவர் மதுபோதையில் வந்த தந்தையால் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கமுற்பட்ட வேளை உறவினர்களின் உதவியுடன் காப்பாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய தந்தையை மாங்குளம் பொலிஸார் கைது செய்தனர்.

இதேவேளை ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவில் பேராறு கிராமத்தில் மதுபோதையில் வந்த தந்தையால் மகளை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்க முற்பட்டதாக தெரிவித்து ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் உறவினர்களினால் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து சந்தேக நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இதேபோல் மல்லாவி பொலிஸ் நிலையத்திலும் 15 வயதிற்குட்பட்ட சிறுமி ஒருவர் மதுபோதையில் வந்த தந்தையால் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டதாக தெரிவித்து முறைப்பாடொன்று பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.


மேற்படி சம்பவங்கள் முல்லைத்தீவு மாவட்ட மக்களை விழிப்படையச் செய்யும் வகையில், பல்வேறு தரப்பினராலும் ஆக்கபூர்வமான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை கூறி நிற்பதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (2-15)

# பிரதமர் நியூசிலாந்தை சென்றடைந்தார்





பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 3 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் நியூசிலாந்தை சென்றடைந்துள்ளார். இலங்கைப் பிரதமர் ஒருவர் நியூசிலாந்திற்கு விஜயம் செய்வது இதுவே முதன்முறை. குறித்த பயணத்தில் பிரதமரின் மனைவி, அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ, சாகல ரத்நாயக்க, பிரதியமைச்சர் ஹர்ஷ டீ சில்வா மற்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே ஆகியோரும் இணைந்துள்ளனர்.








சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகமும் இலங்கை செஞ்சிலு வைச் சங்க வலிகாமம் மேற்குப் பிரிவினரும் இணைந்து நடத்திய இரத்ததான முகாம் இளைஞர் முன்னேற்றக்கழக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

சக்தி கலாசார மேம்பாட்டு மன்றத்தின் தமிழ் விழா, ஞானோதயம் நிறுவக ஸ்தாபகர் அமரர் செல்வநாதன் கருணாவதியின் 31ஆம் நாள் நினைவையொட்டி தரம் 4,5 மாணவர்களுக்கு இலவச புலமைப்பரிசில் நூல்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் அரியாலை கனகரத்தினம் வீதியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானத்தினால் மாகாண சபை பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியின் கீழான வேலைத்திட்டத்தில் சக்தி கலாசார மேம்பாட்டு மன்றத்துக்கு நிழற்பட பிரதி இயந்திரம் ஒன்றும் வழங்கப்பட்டது. (படங்கள்:-பொ.சோபிகர்)













யாழ்.கரவெட்டி நவீன்ஸ் EMC நிறுவனத்தின் ஏற்பாட்டில் தரம்-11 மாணவர்கள் பங்குபற்றிய முன் ஆயத்தமில்லாப் பேச்சும் (ஆங்கிலம்)பரிசளிப்பு விழாவும் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.



உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு யாழ்.கிறீன்கிறாஸ் ஹோட்டல் நிறுவனத்தினரால் கைதடியிலுள்ள அரச சிறுவர் இல்லத்தில் சிறுவர்களின் மகிழ்ச்சியான கற்றலை ஊக்குவிக்கும் நடவடிக்கையின் ஒருபகுதியாக கட்டடச்சுவர்களில் கார்ட்டூன் சித்திரங்களை வரைந்து வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் கிறீன்கிறாஸ் ஹோட்டல் நிறுவன ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இதேவேளை நேற்று வலம்புரிப் பத்திரிகையின் 7 ஆம் பக்கத்தில் கற்றலை ஊக்குவிக்க உதவி என்ற தலையங்கத்தின் கீழ் வெளியான செய்தியில் கைதடி நவீல்ட் பாடசாலை என தவறுதலாக பிரசுரமாகியிருந்தது. அதனை அரச சிறுவர் இல்லம் எனத் திருத்தி வாசிக்கவும்.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—90

## நுண்ணிய நீர்ப்பாசனம்:தூவல் நீர்ப்பாசனத்தின் நன்மைகள்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

நீரினைவினைத்திறனாக பயன்படுத்தும் தொழில்நுட்பங்களினூடே கடந்த இரு வாரங்களாக நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். நீருக்குரிய முக்கியத்துவத்தை நீரேதராதவிடத்து வேறு யார் தருவார்.எமக்கு கிடைக்கும் பயன்படுத்தத்தக்க நீரினளவு மிகக் கணிசமானதாகும். அதனை நாம் வினைத்திறனாக பயன்படுத்தத் தவறினால் பின்னர் பாதகமான விளைவுகளை நாம் சந்திக்க நேரிடும். கிடைக்கின்ற நீரை சேமிப்பது ஒருபுறமிருக்க அதனை எமது தேவைகளுக்காக வினைத்திறனாக பயன்படுத்துவது இன்னொருபுறமாகும். இனாமாக கிடைப்பதென்பதாலோ, இயற்கை தந்ததை நாம் எமது சொந்தமானதாக உரிமை கொள்வதாலோ அன்றி பிரதேச ரீதியாக உரிமை கொள்வதாலோ நீருக்கான பிரச்சினையை நாம் தீர்த்துவிட முடியாது. ஆதலினால் நீரின் முக்கியத்துவம் அறிந்து அதனை நாம் அனைவருக்கும் தெரியப்படுத்தல் வேண்டும். எமக்குள்ளே இருக்கின்ற வேறுபாடுகளைக் சொல்லப்படுகின்றது. சற்று நேரம் அமைதியாக இருந்து யோசித்துப் பாருங்கள். கிடைக்கின்ற நீரினை நாம் எவ்வாறு செலவழிக்கின்றோம் என கணக்கிட்டுப் பாருங்கள். புள்ளிவிபரங்களின் நம்பக சார்ந்து கற்கும் மாணவர்களினதும் பொறுப்பாகும்.

தூவல் நீர்ப்பாசனம் (Sprinkler irrigation) என்பது குழாய்களினூடே நீரினை பம்பி மூலமாக உயரமுக்கத்தில் செலுத்தி அதனை தாவரத்தின் விசிறுவதனால் தாவரத்தின் இலைப்பகுதி மற்றும் வேர்ப் பகுதியுடனான நிலம் என்பன குளிர்வடையும். தாவரத்தின் நில மேற்பகுதியில் இவ்வாறான விசிறல் மூலம் மழைபெய்வதற்கு ஒப்பானகால நிலையை



வெப்பநிலை, ஈரப்பதன் என்பன மாற வாய்ப்பிருக்கின்றது. தூவல் நீர்ப்பாசனத்தில் குறிப்பிட்ட பகுதிக்கெனநீர் விசிறப்படாத காரணத்தால் பயிர் தவிர்ந்த இடங்களில் பயிருக்கு போட்டியாக களைகளும் வளர்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகும். குறிப்பாக ஒருவித்திலைக் களைகளின் பிரச்சினை அதிகமாக உள்ள இடங்களில் தூவல் நீர்ப்பாசனத்தின் மூலம் நீர் வழங்கப்படும் போது களைகளை முன்கூட்டியே கட்டுப்படுத்துவதற்கான ஆயத்தங்களையும் செய்தல் வேண்டும். இந்த பிரச்சினை சொட்டு நீர்ப்பாசனத்தின் மூலம் பொதுவாக ஏற்படாது. ஏனெனில் சொட்டு நீர்ப்பாசனத்தில் நீரானது

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 107

களைந்து இந்த அதிய உயரிய முயற்சிக்கு அனைவரும் கைகொடுப்போம். வாருங்கள் எமது எதிர்கால சந்ததிக்கான புதிய உலகத்தை நாம் படைக்க ஆரம்பிப்போம்.

விவசாய செய்கைக்கு முக்கியமான நீரின் தரத்தை பேணுதல் அவசியமானதாக வலியுறுத்தப்படுகின்றது. வடபுலத்தில் கிடைக்கின்ற மழை நீரினை வினைத்திறனாக பயன்படுத்துதல் பல மட்டங்களிலும் எடுத்துச் த்தன்மையை அனைவரின் முன்பாகவும் வெளிப்படுத்துதலில் தவறில்லை. எவ்வளவு நீரை நாம் நீர்ப்பாய்ச்சலுக்காக பயன்படுத்துகின்றோம்? அந்த நீரில் எவ்வளவு விகிதம் தாவரத்திற்கு செல்கின்றது என்பதனை விஞ்ஞான ரீதியாக விளக்கமளிக்கும் போது அனைவரும் அதனை கிரகிப்பதோடு தங்களது கருத்துக்களையும் முன்வைக்கின்றனர். இதனை அறிவுபூர்வமாக அனைத்து மக்களுக்கும் விளக்கவேண்டியது புலமையாளர்களினதும் இது மேற்பக்கத்திலிருந்து சிறிய துளிகளாக விசிறுதலாகும். தாவரத்தின் மேற்பக்கத்திலி ருந்து ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இந்த காலநிலையை நுண்ணிய காலநிலை (Micro climate) என

| பயிர் | நீர்சேமிக்கப்படும் அளவு % | விளைச்சல் அதிகரிப்பு% |
|---|---|---|
| கோவா | 40 | 3 |
| மிளகாய் | 33 | 24 |
| நிலக்கடலை | 20 | 40 |
| சோளம் | 41 | 36 |
| வெங்காயம் | 33 | 23 |
| உருளைக்கிழங்கு | 46 | 4 |



அழைப்பர். தாவரங்களின் நிலமேற்பரப்பின் கனதிக்கேற்ப இந்த நுண்ணிய காலநிலை வேறுபடும். இதில் குறிப்பாக வெப்பநிலை, ஈரப்பதன் என்பனவற்றின் கணிசமான அளவுக்கு மாறுதல் ஏற்படும். மேலும் விசிறலினை செய்யும் காலஅளவின் பிரகாரமும் இந்த நுண்ணியகால நிலைமாறுபடும். தூவல் நீர்ப்பாசனத்தின் மூலம் பயிருக்கு தேவையான நீர் வழங்கப்படுவதுடன் அதற்கான நுண்ணியகால நிலையையும் நாம் மாற்றிக்கொள்ளவாய்ப்பு கிடைக்கின்றது. சொட்டு நீர்ப்பாசனத்தில் நீர் வேர்ப்பகுதிக்கு நேரிடையாக வழங்கப்படுவதனால் நிலத்தின் மேற்பரப்பிலுள்ள நுண்ணியகால நிலையை நாம் மாற்றியமைக்க முடியாது. ஆனால் நிலத்தினுள் உள்ள காலநிலை குறியீடுகளான வேர்ப்பகுதியை நோக்கி மையப்படுத்தப்படுவதனால் வேறிடங்களுக்கு இந்நீர் கிடைக்காது. அதனால் களைகளின் தொல்லை பொதுவாக இருக்காது. எது எப்படியிருந்தாலும் இரண்டு நீர்ப்பாசனமுறைகளும் நீரை விரயமாக்காது வினைத்திறனாக பயிர்களுக்கு கிடைக்கவும் சேமிக்கவும் பயன்படும் என்பதே ஒருமித்த கருத்தாகும்.

INCID(1998) தகவலின் படிதூவல் நீர்ப்பாசனத்தின் மூலம் பின்வரும் பயன்கள் கிடைக்கும் என கூறப்பட்டுள்ளது.

இதிலிருந்து நீர் சேமிக்கப்படும் அளவு பயிருக்கு பயிர் மாறுபடுவதனையும் அதனாலான விளைச்சலும் மாறுபடுவதனையும் காணலாம். பயிரொன்றுக்கு சாதாரணமாக தேவையான நீரினை நாம் மிகவும் வினைத்திறனாக இவ்வகை தூவல் நீர்ப்பாசனம் மூலம் கொடுக்க முடியும். மேலும் தென்னைக்கென சிறப்பான தூவல் நீர்ப்பாசனமும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது.

எனவே நுண்ணிய நீர்ப்பாசன முறைகளை எமக்கு தேவையான வகையில் தெரிவுசெய்து பயன்படுத்தி எதிர்கால நீர்த்தேவையை நாம் சுலபமாக பூர்த்தி செய்வதுடன் நீரைசேமிக்கவும் முன்னிற்போம்.

# பட்டினிச்சாவின் விளிம்பில் 75 ஆயிரம் குழந்தைகள்!

## ஐ.நா. எச்சரிக்கை

(அபுஜா)

**போகோஹராம் தீவிரவாதத்தினால் நைஜீரியாவில் சுமார் 75 ஆயிரம் குழந்தைகள் பட்டினிச் சாவின் பிடியில் இருப்பதாக ஐ.நா. வின் குழந்தைகள் நிதியம் எச்சரித்துள்ளது.**

இது, கடந்த 7 ஆண்டு கால போகோஹராம் தீவிரவாத நடவடிக்கைகளால் கொல்லப்பட்ட 20ஆயிரம் பேர் என்ற எண்ணிக்கையைக் காட்டிலும் மிக அதிகமானது.

உலகிலேயே மிக மோசமான மனிதார்த்த நெருக்கடியில் வடகிழக்கு நைஜீரியா உள்ளதாக எச்சரித்துள்ள ஐ.நா. ஊட்டச்சத்துக் குறைபாடு சொல்லொணா நிலைமைக்குச் சென்றுள்ளதாக எச்சரித்து, உதவிபுரிபவர்களும் உலக நாடுகளும் துரிதமாக இதனைத் தடுக்கச் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

ஊட்டச்சத்து குறைபாடு அதிகமாக பாதிக்கப்பட்ட குழந்தைகள் இரண்டாம் நிலை நோய்களான வயிற்றுப்போக்கு, மூச்சுக்குழல் கிருமி நோய் ஆகியவற்றினால் இறந்து விடுவதாக, நைஜீரியா யுனிசெப் ஊட்டச்சத்து குறைபாடு துறை தலைவர் அர்ஜன் டி வாக்ட் என்பவர் அசோசியேட் பிரஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு நைஜீரியாவின் 50% பகுதியில் குழந்தைகள் கடும் ஊட்டச்சத்து குறைபாட்டினால் குழந்தைகள் மரணத்தை எதிர்நோக்குவதாக வாக்ட் எச்சரித்தார்.

"உலக அளவில் இப்படிப்பட்ட நிலையை நீங்கள் பார்க்க முடியாது. 5 ஆண்டுகளுக்கு முன்பு சோமாலியாவில் இருக்கும் அதே நிலைதான் இங்கும் உள்ளது. 2010-2012 இடையே போர் காரணமாக சோமாலியாவில் ஏற்பட்ட கடும் பஞ்சம், பட்டினிக்கு சுமார் 2,60,000 உயிர்கள் பலியாகியுள்ளனர்"

யுனிசெப் நைஜீரிய குழந்தைகளைக் காப்பாற்ற 115 மில்லியன் டொலர்கள் தேவைப்படுகிறது என்று கூறியுள்ளது. உதவிகள் 'அவசரம்' என்று கூறும் யுனிசெப், 'இந்தக் குழந்தைகளின் உயிர் நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கிறது' என்று எச்சரித்துள்ளது.

பணம் இல்லாததால் பாதிக்கப்பட்ட சுமார் 7,50,000 மக்களுக்கு உதவி செய்ய முடியவில்லை என்கிறது யுனிசெப்.

போகோஹராம் தீவிரவாதத்திலிருந்து வெளியேறிய சுமார் 2.6 மில்லியன் விவசாயிகள் 2 ஆண்டுகளாக பயிர் செய்ய முடியாமல் வறுமையில் தத்தளித்து வருகின்றனர்.

நைஜீரிய அகதிகள் முகாமிலிருந்து இராணுவம் அழைத்து வந்திருக்கும் பல்லாயிரக் கணக்கானோர் வேளாண் தொழிலில் ஈடுபடுவதற்கான காலம் முடிந்து விட்டது. ஆனால் போகோஹராம் நகரப்பகுதிகளுக்கு வெளியே இன்னமும் தாக்குதல் நடத்திய படிதான் உள்ளது.

உணவு நெருக்கடியில் இருக்கும் 40 இலட்சம் பேர்களில் சுமார் 22 இலட்சம் பேர் போகோஹராம் வலுவாக உள்ள பகுதிகளில் சிக்கியுள்ளனர். போகோஹராம் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட



புதிய பகுதிகளில் மக்களை சென்றடைய வழியில்லை. இதில் 65,000 பேர் கடும் பஞ்சம் பாதித்த பகுதிகளில் வாழ்பவர்கள் போன்ற நிலையில் உள்ளனர்.

நெருக்கடி 'பேரழிவு மட்டத்திற்கு சென்று கொண் டிருக்கிறது' என்று உதவிக்குழு வைத்தியர்கள் தெரிவித்தனர்.

"பலர் ஒருவேளை உணவு உண்பதே சில நாட்களுக்கு ஒருமுறை என்ற நிலை இருந்து வருகிறது. அந்த ஒரு வேளையும் கஞ்சி மட்டுமே கிடைக்கிறது. பசியுடன் தூங்கச் செல்பவர்கள் அதனை போக்க வழியின்றி, மாற்ற வழியின்றி கண் விழிக்கின்றனர்" என்று ஆக் ஸ்பாம் உதவிக்குழு தெரிவித்துள்ளது.

போகோஹராம் போராளிகள் மனித உதவி வாகனத்தை கடந்த ஜூன் மாதத்தில் தாக்கியதில் யுனிசெப் ஊழியர் ஒருவர் படுகாயமடைந்ததால், யுனிசெப் தனது பணியிடத்தை குறுக்கிக் கொண்டுள்ளது.

மைதுகுரி முகாம்களில் அதிகபட்சமாக குழந்தைகள் பட்டினியின் பிடியில் சிக்கியுள்ளனர்.

"அவசரநிலை என்று கூறும் நிலையை விட இறப்பு விகிதம் 5 மடங்கு அதிகமாக உள்ளது, இதற்கு முழுக் காரணம் பட்டினியே" என்று ஐ.நா. குழந்தைகள் நிதியம் தனது அறிக்கையில் கூறியுள்ளது. (இ-10)




## சீனாவின் பகோடா கோபுரம் கின்னஸ் சாதனை படைத்தது

சீனாவின் கலாசார சின்னங்களில் 'பகோடா' என்ற மரத்தினால் ஆன கோபுரமும் ஒன்று. இக்கோபுரங்கள் வழிபாட்டு தலங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

சீனாவின் வடக்கு ஷான்ஸி மாகாணத்தில் உள்ள 'பாக் யாங்' கோவிலில் மிக உயரமான கோபுரம் கட்டப்பட்டுள்ளது. இது 1056ஆம் ஆண்டில் லியாவோ ஆட்சி காலத்தில் கட்டப்பட்டது.


மரத்தினால் ஆன இக் கோபுரம் 67.31 மீற்றர் உயரம் கொண்டது. இதில் உள்ள மரக்கட்டைகள் 3 ஆயிரம் கன மீற்றருடன் 2600 தொன் எடை கொண்டதாகும்.

எனவே, உலகிலேயே மிக உயரமான மரத்தினால் ஆன 'பகோடா' கோபுரம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இது கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. (இ-10)



## மகள்கள் விரும்பினால் ராணுவத்தில் சேரலாம்

### ஒபாமா பச்சைக்கொடி



அமெரிக்காவில் போர்ட் லீ இராணுவ முகாமில் நடந்த சி.என்.என். டவுன்ஹால் கூட்டம் ஒன்றில், அந்த நாட்டின் ஜனாதிபதி ஒபாமா கலந்து கொண்டார். அங்கு அவர் பல்வேறு தரப்பட்டவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

அப்போது அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர், "உங்கள் மகள்கள் மாலியா (வயது- 18),சாஷா (வயது-15) இருவரும் அமெரிக்க இராணுவத்தில் சேர்ந்து பணியாற்ற விரும்பினால், அனுமதி அளிப்பீர்களா?" என கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒபாமா, "ஆமாம், நீங்கள் விரும்பினால் சேருங்கள் என்று சொல்வேன். அதேநேரத்தில், அவர்கள் போருக்கு சாத்தியமாகக் கூடிய ஆயுதங்களில் ஈடுபட வேண்டி வந்தால், நான் பதற்றம் அடைய மாட்டேன் என்று குழந்தைகள் உங்கள் குழந்தைகள்தான். அவர்களை எஞ்சிய வாழ்நாள் முழுவதும் பத்திரமாக பார்த்துக்கொள்ளத்தான் பெற்றோர்கள் நினைப்பார்கள்" என பதில் அளித்தார்.

நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் பிள்ளைகளை இராணுவத்தில் சேர அனுமதிப்பேன் என்று ஒபாமா கூறினாலும், பிள்ளைகளை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளத்தான் பெற்றோர் விரும்புவார்கள் என்ற சராசரி பெற்றோரின் உணர்வை தானும் கொண்டிருப்பதை உணர்

## வடகொரியாவுடனான உறவை முறித்துக்கொள்ள அமெரிக்கா உலக நாடுகளுக்கு வேண்டுகோள்

(வோஷிங்டன்)

உலக நாடுகளின் எதிர்ப்பையும், ஐ.நாவின் எச்சரிக்கையையும் மீறி வட கொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனையை நடத்தி வருகிறது. இதனால் உலக நாடுகள் பெரும் அச்சத்திலுள்ளன. வட கொரியா 5 ஆவது அணுகுண்டு சோதனைக்கு தயாராகி வருவதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் வட கொரியாவுடனான உறவை உலக நாடுகள் முறித்துக் கொள்ள வேண்டும் என அமெரிக்கா [illegible]



இது குறித்து அமெரிக்கத் [illegible]

உள்ளது. செனட் சபையிடம் [illegible]

தூதரக உறவுகளை முக்கியமாகக் கருதுவதால், அந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளதாக ரசல் அதில் கூறி உள்ளார்..

தற்போது, 160இக்கும் மேற்பட்ட நாடுகளுடன் வட கொரியா தூதரக உறவைக் கொண்டுள்ளது. வடகொரியாவுக்குக் கூடுதல் நெருக்கடி கொடுக்கும்படி ரசல் சீனாவிடம் வலியுறுத்தியுள்ளார்.

வடகொரியாவுக்கு எதிரான தடைகளை மீறிய சந்தேகத்தின் பேரில் சில சீன நிறுவனங்கள் மீது அமெரிக்கா

# இந்தியா-பாகிஸ்தான் இடையே பதற்றம் தணிய வேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்து

தீவிரவாத முகாம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா- பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட பதற்றம் தணிய வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இந்தியாவுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி வந்த பாகிஸ்தான் தீவிரவாதிகள் மீது இராணுவம் நேற்று முன்தினம் அதிரடித் தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு காஷ்மீருக்குள் புகுந்து அங்கிருந்த தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன. இத் தாக்குதலில் 55 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 2 பாகிஸ்தான் இராணுவ வீரர்களும் பலியாகினர்.

இந்தியா- பாகிஸ்தான் இடையே போர்ப்பதற்றம் ஏற்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து இரு நாட்டு எல்லையிலும் இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இந்தியா- பாகிஸ்தான் இடையேயான பதற்றம் தணிய வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. வோஷிங்டன் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜோஷ் ஏர்னெஸ்ட் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

இந்தியா- பாகிஸ்தான் இராணுவத்தின் இடையே தாக்குதல் நடைபெற்றதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இதனால் இரு நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள பதற்றம் தணிய வேண்டும். அதற்காக இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும்.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலுடன் இது குறித்து நேற்று முன்தினம் பேசினார். அப்போது எல்லை தாண்டும் பயங்கரவாதத்தை அமெரிக்கா ஆதரிக்காது என தெரிவித்தார். பாகிஸ்தான் ஐ.நா. சபையில் தடைசெய்யப்பட்ட லஷ்கர்-இ-தொய்பா மற்றும் ஜெய்ஸ் இ முகமது உள்ளிட்ட தீவிரவாத இயக்கத்தின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் இந்தியாவுடன் சேர்ந்து அமெரிக்கா போராடி வருகிறது.

இந்தியா- பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் சுய கட்டுப்பாட்டுடன் அமைதி காக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-10)

# 55 தீவிரவாதிகள் கொன்று குவிப்பு

(டில்லி)

**ஆக்கிரமிப்பு பாகிஸ்தானுக்குள் 1.5 கி.மீ. வரை ஊடுருவி இந்திய கொமாண்டோ படையினர் நடத்திய தாக்குதலில் 55 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.**

காஷ்மீரின் ஊரி பகுதியில் உள்ள இராணுவ தலைமையகம் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் அண்மையில் தாக்குதல் நடத்தினர். இதில் இந்திய வீரர்கள் 20 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு தக்க பதிலடி கொடுக்க இந்தியா திட்டமிட்டது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் தீவிரவாதிகளின் முகாம்கள் செயற்பட்டு வருகின்றன. இங்கிருந்தவாறு தான் அவர்கள் இந்தியாவுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தி வந்தனர்.

இதையடுத்து இந்த முகாம்களை தாக்கி அழிக்க இந்திய இராணுவத்துக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனையடுத்து நேற்றுமுன்தினம் மேற்படி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-10)

## ஆளில்லா விமானத்தாக்குதல்; ஆப்கானிஸ்தானில் 15பேர் பலி



அமெரிக்கா இராணுவத்தின் ஆளில்லா விமானத் தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த அப்பாவி பொதுமக்கள் 15 பேர் பலியாகினர்.

அமெரிக்க இராணுவத்தின் ஆளில்லா விமானம் கடந்த புதன்கிழமை அதிகாலை கிழக்கு ஆப்கானிஸ்தானில் தாக்குதல் நடத்தியது. இதில் பொதுமக்கள் 15 பேர் பலியாகினர். 13 பேர் காயமடைந்தனர். இந்த தாக்குதல் குறித்து வெளிப்படையான விசாரணை நடத்தும்படி ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த தாக்குதலில் சில இராணுவ வீரர்களும் பொதுமக்கள் பலரும் கொல்லப்பட்டுள்ளனர். இந்த தாக்குதல் குறித்து வெளிப்படையான, பாரபட்சமற்ற விசாரணை நடத்திட சர்வதேச இராணுவம் மற்றும் அரசுக்கு அழைப்பு விடுத்துள்ளோம்" என்று கூறியுள்ளது.

ஆப்கானின் நங்கர்ஹர் மாகாணத்தை சேர்ந்த அச்சின் மாவட்டத்தில் உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்தியதை அமெரிக்க இராணுவமும் உறுதி செய்துள்ளது. இதுகுறித்து அமெரிக்க இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஒவ்வொரு தாக்குதலிலும் பொதுமக்கள் பலியாகுவதைத் தடுக்க எங்களாலான முயற்சிகளை செய்கிறோம். இந்த தாக்குதல் குறித்த கூடுதல் விசாரணைக்கு ஆப்கான் அதிகாரிகளுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குவோம் என தெரிவித்துள்ளது. (இ-10)

# சீனா-பாகிஸ்தானுக்கு எதிராக அணு ஆயுதங்களைத் தாங்கிய ராபல் ஜெட்டுக்களை இந்தியா பயன்படுத்தும்

## சீன ஊடகங்கள் தகவல்

(பீஜிங்)

காஷ்மீரின் ஊரி பகுதியில் உள்ள இராணுவத் தலைமையகம் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் அண்மையில் தாக்குதல் நடத்தினர். இதில் இந்திய வீரர்கள் 20 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு தக்க பதிலடி கொடுக்க இந்தியா திட்டமிட்டது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் தீவிரவாதிகளின் முகாம்கள் செயற்பட்டு வருகின்றன. இங்கிருந்தவாறு தான் அவர்கள் இந்தியாவுக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்தி வந்தனர். இதையடுத்து இந்த முகாம்களை தாக்கி அழிக்க இந்திய இராணுவத்துக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

'சர்ஜிகல் ஸ்டிரைக்ஸ்' என்ற பெயரில் இராணுவத்தின் கொமாண்டோ படைப் பிரிவு தாக்குதல் நடத்தியது. இதில் தீவிரவாதிகளின் 7 முகாம்கள் அழிக்கப்பட்டன. 55 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதைத்தொடர்ந்து எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்தியா-பாகிஸ்தான் இடையே நிலவும் பதற்றத்தை தணிக்க சீனா முயற்சித்து வருவதாகவும், இது தொடர்பாக இரு நாடுகளுடனும் தொடர்பு கொண்டு பேசி வருவதாகவும் சீன வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் கெங் சாங் நேற்று பீஜிங் நகரில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களுக்கு இடையேயான தகவல் தொடர்புகளை மேம்படுத்தி கருத்து வேறுபாடுகளை களைந்து தெற்கு ஆசிய பிராந்தியத்தின் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிசெய்ய பாடுபடும் என்று சீனா நம்புவதாகவும் அப்போது அவர் தெரிவித்தார்.



ஆனால் இந்தியா அணு ஆயுதம் தாங்கிய ரபெல் போர் விமானங்களை சீனா மற்றும் பாகிஸ்தானுக்கு எதிராக சர்ச்சைக்குரிய பகுதிகளில் பயன்படுத்தும். இந்தியா உலகில் அதிகம் ஆயுதம் வாங்கும் நாடாக இருந்து வருகிறது என சீன அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தியா அண்மையில் பிரான்சிடம் இருந்து 36 ரபெல் போர் விமானங்களை வாங்க ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது. இந்திய விமானப்படை 3 ஆண்டுகளுக்கு பிறகு இந்திய எல்லைக்குள் சீனா, பாகிஸ்தான் இலக்குகளை தாக்க இந்த விமானங்களை அனுமதிக்கும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (இ-10)

# நெருப்புடன் விளையாடாதீர்கள்

## ஜப்பானுக்கு சீனா கடும் எச்சரிக்கை

தென் சீனக் கடல் பகுதி தங்களுக்குத்தான் சொந்தம் என்று சீனா, வியட்நாம், தாய்வான் ஆகிய நாடுகள் சொந்தம் கொண்டாடி வருகின்றன. மேலும் இப்பகுதியின் சில பகுதிகள் தங்களுக்கு சொந்தம் என்று ஜப்பான், பிலிப்பைன்ஸ், மலேசியா, புருனே ஆகிய நாடுகள் உரிமை கோரி வந்தன.

இந்த நிலையில், தென் சீனக் கடல் பகுதி தொடர்பாக பிலிப்பைன்ஸ் அரசு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்தது. அந்த வழக்கின் முடிவில் தென் சீனக் கடல் பகுதியில் சீனாவிற்கு உரிமை இல்லை என்று சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சர்வதேச நீதிமன்றத்தின் இத்தீர்ப்பை ஏற்க மறுத்த சீனா தொடர்ந்து தென் சீனக் கடல் பகுதியில் உரிமை கொண்டாடி வருவதோடு கடல் பகுதியில் தனது இராணுவ நிலைகளை கட்டும் பணியில் ஈடுபட்டு வருகிறது. மேலும் இந்தக் கடல் பகுதி முழுவதையும் செயற்கைக் கோள் மூலம் கணகாணித்தும் வருகிறது. இந்நிலையில், தென் சீனக் கடல் விவகாரத்தில், நெருப்புடன் விளையாடாதீர்கள் என்று ஜப்பானுக்கு சீனா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென் சீனக் கடல் பகுதியில் அமெரிக்காவுடன் இணைந்து ரோந்து பணியில் ஈடுபடப்போவதாக ஜப்பான் அறிவித்ததை அடுத்து சீனா இவ்வாறு கூறியுள்ளது.

ஜப்பானின் அறிவிப்பு தென் சீனக் கடல் பகுதியில் நிலவி வரும் சூழ்நிலையை குழப்பி, அதில் இருந்து பலனடைய நினைக்கும் செயல் என்று சீனா தெரிவித்துள்ளது.

சீனாவும் முதன் முறையாக கடந்த திங்கட்கிழமை ஜப்பானுக்கு அருகில் உள்ள மேற்கு பசுபிக் பகுதியில் போர் விமானங்களை அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# அரியானாவில் லொறி மோதி 9 பக்தர்கள் பரிதாப மரணம்

அரியானாவில் லொறி வாகனம் நேருக்குநேர் மோதிய விபத்தில் 9 பக்தர்கள் உடல் நசுங்கி பலியாகினர். படுகாயமடைந்த 14 பேருக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ராஜஸ்தான் மாநிலம் கோகமேதி கிராமத்தில் உள்ள ஒரு கோவிலுக்கு யாத்திரை சென்றிருந்தனர். சாமி தரிசனம் செய்து விட்டு தங்களது வாகனத்தில் புறப்பட்டு பஞ்சாப் திரும்பிக் கொண்டிருந்தனர். வாகனம் அரியானா மாநிலம் பிவானி மாவட்டத்தில் சைனிவாஸ் கிராமத்திற்கு நேற்றுக்காலை வந்த போது எதிரே வந்த லொறியுடன் மோதியது.

இந்த விபத்தில் 9 பக்தர்கள் உடல் நசுங்கிப் பலியாகினர். 14 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-10)

# முதுமைக்குத் துணையாகும் "தனிமை"

இலங்கையில் அறுபது வயதைக்கடந்தவர்கள் மூத்தோர்கள் ஆகிவிடுகின்றார்கள். குடும்பங்களில் மூத்தோர்களின் இருப்பு என்பது கேள்விக்குறியாக போகுமளவிற்கு குழப்பங்கள் நிறைந்துள்ளன.' மூத்தோர்கள் தங்களுடன் மற்றவர்கள் கதைக்க வேண்டும் என்பதை விட தாங்கள் மற்றவர்களுடன் கதைக்க வேண்டும் என்பதையே விரும்புகின்றார்கள்.

"மூத்தோரின் சிறப்பு அனுபவத்தின் இருப்பு"ஆகும். அனுபவங்களை கலசங்களாக கொண்ட ஒவ்வொரு மூத்த பிரஜையும் நாட்டின் மிகப் பெரிய சொத்துக்களாகும். சர்வதேச முதியோர் வாரமாகிய ஒக். 01 முதல் ஒக். 07 வரையான காலப் பகுதியில் எமது மூத்தோருக்காக சிந்திப்பது சிறந்த விடயமாகும்.

உலகில் எந்தப் பொருளும் அழிவடையும் என்பது இயற்கை விதியாகும். இருப்பினும் இரண்டே இரண்டு விடயங்கள் மட்டும் பழைமையடைய பழைமையடைய பெருமையடைகின்றன. ஒன்று ஆலயங்கள். தொன்மையான ஆலயங்களை வழிபடும் போது வேண்டுதல் நிறைவடைகின்றது.ஆத்மீக அதிர்வுகளால் காலம் காலமாக நிரப்பப்பட்ட இந்த சூழலுக்கு கடவுளின் சக்தி இருப்பதாக வேதங்களில் கூறப்பட்டுள்ளது. நேரான நல்ல சிந்தனைகள் நல்லதையே விளைவிக்கும் என்பதும் ஆய்வுகளின் முடிவாக உள்ளது. மொத்தத்தில் உயரிய சக்தி ஒன்று இத்தகைய நிலைமைக்கு வழிகோலியுள்ளது. இரண்டாவது மூத்தோரின் வயது முதுமையடைய, முதுமையடைய மூத்தோருக்கு மிகப்பெரிய சக்தி கிடைத்து விடுகின்றது.இதனால் தான் மூத்தோரின் ஆசிர்வாதம் என்பது இறைவனின் ஆசிர்வாதத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. குழந்தையாகப் பிறந்த மனிதன் குழந்தையாகியே இறக்கின்றான்.முதுமையில் ஒரு வளர்ந்த குழந்தையாக இருக்கின்றான். குழந்தைக்குரிய குணங்களில் மிதக்கின்றான். தோற்றமும் மனங்களின் மாற்றமும் முதுமைத் தோற்றத்தை வரவழைத்து குழந்தைக் குணத்தைக் இருப்பிடமாக்கிக் கொள்கின்றன.

வீடுகளில் மூத்தவர்களின் தேவை என்பது இன்று இல்லாது போய் விட்டது. குழந்தைப் பராமரிப்பிற்கு மட்டும் மூத்தோர் பயன்பாடு உள்ளவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். விருந்தினர்கள் வந்தால் கூட ஒதுங்க வேண்டியவர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.அல்லது கொல்லைப்புற அடுப்படியின் சொந்தக்காரர்களாக உயில் எழுதி வைக்கப் பட்டுள்ளனர். அன்பைக் கொட்டி பண்பை வளர்த்து சமூகத்தில் நெஞ்சை நிமிர்த்தி நடைபோடச் செய்தவர்களுக்கு 'முதுமை" என்ற பட்டம் தனிமையைக் கொடுத்து நடைப் பிணமாக்கி உள்ளது. முதுமையில் கொடுமை தனிமை ஆகும்.இதை வீடுகளில் அனுபவிக்கும் மூத்தோருக்கு காத்திரமாக வழி ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்காகத்தான் முதியோர் பகல் நிலையங்கள் கிராமங்களில் அவசியமாக்கப்பட்டுள்ளன.பொறி தட்டிய சிந்தனைகள் என்னுள் மீண்டும் உறைந்து கொள்கின்றன.

மூத்தோர்களின் முகவுரைகள் சமூகத்தில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.தன்னிகரில்லா உழைப்பின் செய்திகள் ஊன்றி உணர்த்தப்பட வேண்டும்.பழைய நினைவுகள் மீட்டுப்பார்க்கும் பருவம் தான் முதுமைப் பருவம். இவையெல்லாம் இன்றைய சமூகத்தின் தேவைப்பாடாக உள்ளன. முதுமையின் இயலாமை என்பது தான் சமூகம் புறந்தள்ளுவதற்குரிய காரணியாக உள்ளது.இயலாமையில் பராமரிப்பது என்பது சவாலான ஒரு விடயமாக இருக்கின்றது.கூடவே அடம்பிடித்தல் என்பதும் இயலாமையினை தோற்றுவிப்பதாக அமைகின்றது.

இந்நிலையில் மிக மோசமான நிலையை மூத்தோர்கள் எதிர்நோக்குகின்றார்கள். இந்த நிலையில் அதிக காலம் உயிர் வாழ்பவர்கள் அழுதே காலத்தைக் கடத்துகின்றார்கள். இத்தகைய நிலையில் பராமரிப்பை ஒவ்வொரு குடும்பமும் தெரிந்திருப்பது அவசியமாகின்றது.இதற்காக அரச முதியோர் இல்லத்தில் முதியோர் பராமரிப்புச் சேவை தொண்டராக பயிற்சி பெறக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நோயாளர் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு இவை இரண்டும் சேர்ந்த பராமரிப்பு ஒன்றே தேவையாக உள்ளது. இப்பயிற்சியைப் பெற்றவர்கள் தனது குடும்பத்திற்கும் உதவலாம். பிறர் குடும்பத்திற்கும் உதவலாம்.

சமூகத் தொடர்பாடல் என்பது சமூகத்தில் நின்று நிலைக்கக்கூடிய தன்மையை ஏற்படுத்துகின்றது. தனித்து விடப்படுவது என்பது சமூகத் தொடர்பாடலை சரியாகப் பயன்படுத்தியவர்களுக்கு ஏற்பட்டதில்லை என்பது ஆய்வுகளின் முடிவாகி உள்ளது.முதுமையில் பரம்பரைக் குணங்கள் வெளிப்பட்டு விடுகின்றன. இளமையில் கல்வியாலும் பழக்கவழக்கங்களாலும் அடைக்கப்பட்டிருந்த பரம்பரைக் குணங்கள் முதுமையில் பூதாகரமாகின்றன.சில கூடாத விடயங்கள் எல்லாம் வெளிப்படுகின்றன. இவை இன்னொரு வகை சவாலாக உள்ளது. முதுமையில் அதீதமான ஆத்மீக ஈடுபாடுகள் இத்தகைய கூடாத குணங்கள் வெளிப்படுவதை கட்டுப்படுத்துகின்றன. மேலும் நேரான எண்ணங்கள், சுகமாக முதுமையடைதல் என்ற தத்துவத்தை கடைப்பிடிப்பவர்களும் இதிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள்.எமது மனதின் உறுதி தான் நிலைபேற்றுக்கு வழிசமைக்கும் என்ற சமூகவியல் உண்மையும் இவ்விடயத்தில் வலுச் சேர்க்கின்றது. மூத்தோர்களை ரோபோக்கள் போன்று கருதுதல் தவறாகும்.





மூத்தோர்களை மதிக்கும் சமூகமும் இருக்கின்றது.தமது பெற்றோர் வீதியில் அலைவது, முதியோர் இல்லங்களில் அனுமதிக்காக முயற்சிப்பது என்பவற்றை கௌரவக்குறைவாக கருதுகிறார்கள்.குறிப்பாக தமது பெற்றோரை இத்தகைய நாடல்கள் ஏற்படும் போதெல்லாம் கவலை கொள்கின்றார்கள். முதியவருக்கு ஏதோ தேடிய ஒன்று அந்தக் குடும்பத்தில் கிடைக்காமையே இதற்கு காரணமாகின்றது. முதியவர்கள் நினைத்தது கிடைக்காவிட்டால் மீண்டும் மீண்டும் அவ்வப்போது நச்சரிப்பது வழக்கமாக உள்ளது. இவ்வேளையிலும் பராமரிப்பில் இடைவெளி ஏற்படுகின்றது. சிறுபிள்ளைகளை சமாளிப்பது போன்ற உத்தியே பயன்படுத்தப்பட வேண்டும். உடனடியான பாதகமான முடிவும் முதுமையைப் பாதிக்கின்றது.முடியாத என்பதையும் பக்குவமாகக் சொல்ல வேண்டிய தேவை உள்ளது.மூத்தோர் தம்மை ஒத்தவர்களின் கருத்துக்களை மட்டும் ஏற்பதில் ஆர்வம் உள்ளவர்களாக காணப்படுகின்றார்கள். எனவே மேதாவித்தனமான அணுகுமுறை சிறந்தது அல்ல.

முதுமையில் மணநிலை பாதிப்பு என்பது நிறைய அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது. இத்தகைய பராமரிப்பில் அர்ப்பணிப்புடன் ஈடுபடுதல் தேவையாக உள்ளது. அன்புடன் கண்களால் பாருங்கள், அன்புடன் காதுகளால் கேளுங்கள், அன்புடன் கரங்களால் கடமையாற்றுங்கள், அன்பான எண்ணங்களை எண்ணுங்கள், அன்பாக வார்த்தைகளைப் பேசுங்கள், ஒவ்வொரு நாளத்திலும் அன்பை உணருங்கள்... என்ற தத்துவங்களை இவ்விடத்தில் மீட்டுப்பார்க்க வேண்டி உள்ளது.

மகிழ்ச்சியாக இருக்க பழகுங்கள்,பரிசுத்தமாக சிரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள், பிறருக்குதவுங்கள்,யாரையும் வெறுக்காதீர்கள், சுறுசுறுப்பாக இருங்கள், தினமும் உற்சாகமாக வரவேற்க தயாராகுங்கள். மகிழ்ச்சியாக இருக்க முயற்சி மேற்கொள்ளுங்கள்... முதியோர் பராமரிப்பின் சவால்களுக்கு தீர்வாக காற்றில் அசைந்து கொண்டிருந்த வாக்கியங்கள் விடை பகிர்ந்து கொள்கின்றன.

இன்று முதியோரின் மரணம் என்பது சமூகத்தில் சமாளிக்க முடியாத செலவாக உள்ளது. இறப்பில் பெரிய ஒரு இருப்பு காலியாக்கப்பட வேண்டும்.இதுவும் முதியோரை வைத்திருப்போருக்கு பயமாக உள்ளது. மரணச்சடங்குகள் கூட இன்று "பக்கேஜ்" முறைக்கு மாறியுள்ளது.எந்தப் பக்கேஜை தெரிவு,செய்வது என்பதும் ஊராரின் நேர்முக வர்ணனைக்கு ஈடுகொடுப்பது என்பதும் இறுதிச்சவாலாகும். எல்லோரது அபிப்பிராயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். இல்லையேல் பிரேரணையில் தோற்றவர் பாராளுமன்றத்தை போல மரண வீட்டிலிருந்து வெளிநடப்புச் செய்து விடுகிறார்.

ஒரு ஊரின் முழுப் புதினமும் கட்டவிழ்த்து விடப்படும் இடமாக மரணவீடு அதுவும் முதியவர் ஒருவரின் மரணவீடு மறுபிறவி எடுத்து விடுகின்றது.முதியவர்களின் மரணம் நூலகங்களின் எரிப்புக்கு ஒப்பானது என்பார்கள்.இதற்கு மேலாக இன்று மூத்தோரின் மரண வீட்டில் இன்னுமொரு குடும்ப குழப்பத்திற்கான கருவும் உருவாக்கப்பட்டு விடுகின்றது.

இதைப்பார்த்து பயந்து இறப்பதற்கு முன்பே முதியவர்கள் சாவீட்டிற்கென பணம் சேர்க்கும் கலாசாரம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் மூத்தோர்கள் சமூகத்தில் வைத்து பராமரிக்கப்படும் போது அவர்களின் முதுமையின் தேடலுக்கான விடயங்கள் கிடைத்து விடுகின்றன.முதியோர் இல்லங்கள் மூத்தோரின் பிரச்சினைகளுக்கான நிரந்தரத்தீர்வு அல்ல.மூத்தோரைக் காத்தோர் உயர்வடைவர்.

மூத்தோரைப் பராமரித்தலே நாகரிகத்தின் வெளிப்பாடாகும். முதுமையில் தனிமை மிகக் கொடியது.எமது மூத்தோரை நாமும் பராமரித்து நாகரிகத்தின் வளர்ச்சிப்படிகளில் ஏறிக் கொள்வோம். முதுமைக்கு துணையாகும் தனிமைக்கு விடை கொடுப்போம்.

**த. கிருபாகரன்**
அத்தியட்சகர்,
அரச முதியோர் இல்லம், கைதடி.

# புதிய கட்சி உருவாகுவதைக் கண்டு மைத்திரி-ரணில் அரசு அச்சத்தில்

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**புதிய கட்சியொன்றை உருவாக்க முனைவதைக் கண்ட மைத்திரி -ரணில் அரசாங்கம் அச்சமடைந்துள்ளதாக முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முந்தினம் மாலை ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரான பசில் ராஜபக்ஷ ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டு மக்களின் பிரதான பிரச்சினையாக அதிகரிக்கப்பட்டுள்ள வரி விதிப்புக்கள் மாறியுள்ளதாக தெரிவித்துள்ள பசில் ராஜபக்ஷ, எனினும் அரசாங்கத்தின் புதிய கட்சி உருவாக்கமே பிரதான பிரச்சினையாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

புதிய கட்சியில் யார் அங்கம் வகிக்கப்போகின்றனர், யார் அதன் தலைவர், அதன் சின்னம் என்ன என்பதே அரசாங்கத்தின் பிரதான பிரச்சினை என்றும் குறிப்பிட்டுள்ள பசில் ராஜபக்ஷ, நாட்டு மக்களின் அவசர பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே புதிய கட்சியை தாம் உருவாக்கத் திட்டமிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மக்கள் மீது மேலும் பொருளாதார சுமைகளைத் திணிக்கும் வரி விதிப்புக்களை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ளுமானால் புதிய கட்சியொன்றை உருவாக்க வேண்டிய அவசியம் இருக்காது என்றும் பசில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் புதிய கட்சிகளுக்கு அஞ்சுவதை விடுத்து மக்களுக்கு அஞ்சி மக்களின் பிரச்சினைகளை தீர்த்துவைக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள பசில் ராஜபக்ஷ, எதிர்வரும் ஒக்டோபர் எட்டாம் திகதி இரத்தினபுரியில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டம் புதிய கட்சியை மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கும் கூட்டமல்ல என்று மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# தொலைபேசி ஊடாகவேனும் ஆசிரியர்களை வாழ்த்துமாறு கல்வி அமைச்சர் கோரிக்கை

(கொழும்பு)

தொலைபேசி ஊடாகவேனும் ஆசிரியர்களை வாழ்த்துமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச ஆசிரியர் தினத்தில் வாழ்த்துரைப்பது மிகவும் அவசியமானது என அவர் தெரிவித்தார்.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஊடகங்களின் மூலம் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்விக் கண்ணை திறந்த ஆசிரிய தாய், தந்தையருக்கு பரிசுப் பொருட்கள் வழங்காவிட்டாலும் பரவாயில்லை தொலைபேசி அழைப்பின் ஊடாகவேனும் அனைத்து மக்களும் ஆசிரிய பெருந்தகைகளை வாழ்த்த வேண்டும்.

தற்பொழுது எவ்வளவு உயரத்தில் இருந்தாலும் சிறந்த நிலையில் இருந்தாலும் ஆசிரியர்கள் வழங்கிய ஆலோசனைகள், அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்களை மறந்துவிடக் கூடாது.

தற்போது ஓய்வுபெற்றுக் கொண்டுள்ள ஆசிரியர்களின் தொலைபேசி இலக்கங்களை கண்டறிந்து அவர்களுக்கு தொலைபேசி ஊடாகவேனும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார்.(இ-7-10)

# லசந்தவின் சடலத்தை படம் பிடிக்கவந்த 'ட்ரோன் கமரா' தொடர்பில் விசாரணை



படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் சடலத்தை கடந்த செவ்வாய்க்கிழமை தோண்டும் போது, அதனை படம் பிடிக்க முற்பட்ட ட்ரோன் கமரா (ஆளில்லா சிறிய ரக விமானம் மூலம் இயக்கப்படும் கமரா)குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

குறித்த ட்ரோன் கமரா தொடர்பில் பிரத்தியேக விசாரணைகளை ஆரம்பிக்க உள்ளதாக, லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை விசாரணைகளுக்கு பொறுப்பான குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் திசேரா கல்கிஸை பிரதான நீதவான் மொஹம்மட் சஹாப்தீனுக்கு நேற்று முன்தினம் அறிவித்தார்.

லசந்தவின் சடலத்தை மீளவும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த தோண்டும் போது, சடலத்தை ஊடகங்களுக்குகாண்பிக்க வேண்டாம் என உதவி பொலிஸ் அத்தியட்சகர் திசேராவுக்கு, அவுஸ்திரேலியாவில் இருந்து லசந்தவின் பாரியார் தொலைபேசி ஊடாக கோரிக்கை முன்வைத்திருந்தார். தமது இரு பிள்ளைகளும் அவற்றை பார்வை இடுவதனூடாக மனதளவில் பாதிக்கப்படுவர் என்பதைக் காரணம் காட்டியே அவர் உதவி பொலிஸ் அத்தியட்சகரிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனால் புகைப்படம் எடுப்பதற்கு ஊடகங்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை என குறிப்பிட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் திசேரா, இதன்போது ட்ரோன் கமரா ஒன்றூடாக யாரோ ஒருவர் அல்லது ஒரு குழு புகைப் படங்களை எடுக்க முற்பட்டதாகவும், அது பொலிஸாரால் தடுக்கப்பட்டதாகவும் அது குறித்து பிரத்தியேக விசாரணைகள் நடத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.(இ-7-10)

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சேவைக்கு போட்டி போடும் அமெரிக்க நிறுவனம்

ஸ்ரீலங்கன் விமான சேவையின் முகாமைத்துவத்தை பெற்றுக்கொள்ள அமெரிக்க உலக முதலீட்டு மேலாளர் நிறுவனம் ஒன்று விருப்பம் வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

லங்கா பிஸ்னஸ் ஒன்லைன் வலைத்தளம் வெளியிட்டுள்ள தகவலுக்கு அமைய ப்லேக்ரொக் (BlackRock) மற்றும் கெப்பிட்டல் (TPG capital) ஆகிய இரண்டு நிறுவனங்களே இவ்வாறு விருப்பம் வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்துள்ளார். கடன் சுமையுடன் இந்நிறுவனத்தை ஏற்றுக்கொள்வதற்கு எந்த தரப்பும் இதுவரையிலும் இணங்கவில்லை. அதன் காரணமாக தற்போது வரையில் ஸ்ரீலங்கன் விமான சேவையின் கடன் பணத்தை அரசாங்கத்திற்கு செலுத்த நேரிட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, ஸ்ரீலங்கன் விமான சேவையினை ஏற்றுக்கொள்வதற்கு விருப்பம் வெளியிட்டுள்ள வெளிநாட்டு நிறுவனங்களுக்குள் சீன நிறுவனம் முன்னணியில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், குறித்த நிறுவனமும் தற்போது வரையிலும் இணக்கம் வெளியிடவில்லை என கூறப்படுகின்றது. (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### தருணங்கள்

ஒரு மருமகள் ஒரு வீட்டின் கைச் சாவியைக் கைப்பற்றுவதாகட்டும் ;

ஒருவர் தன் அலுவலகத்தில் பதவி உயர்வைப் பெறுவதாகட்டும் ;

ஒருவர் தன் நிறுவனத்தில் முற்பணம் பெறுவதாகட்டும் நல்லதொரு தருணத்திற்காகக் காத்திருந்து சரியான நேரத்தில் அவற்றைச் சாதித்துக் கொள்ள வேண்டும்.

சில புது மருமகள்கள் எடுத்த எடுப்பிலேயே வீட்டு நிர்வாகத்தைக் கைப்பற்றி எல்லோரையும் கைப்பிடிக்குள் வைத்திருக்க வேண்டும் என்று அவசரப்படுகிறார்கள். சிலருக்கு சாவியைக் கைப்பற்றுவதில் ஆர்வம் இராது.

மாறாக,நான் பெரியவளா? என் மாமியார் பெரியவளா? பார்த்துவிடுகிறேன் ஒரு கை என்று கால் மெட்டி தேயுமுன்பே அவசரப்படுகிறார்கள்.

வீட்டுச் சாவியைக் கைப்பற்றுவதிலும், மாமியாரின் விசப் பல்லைப் பிடுங்குவதிலும் அவசரம் ஆகாது. அதையெல்லாம். ஓர் ஐந்தாண்டுத் திட்டம் போல் ஆசுவாசமாகச் செய்ய வேண்டும்.

போரில் வெற்றி பெற எண்ணும் ஒரு மேஜர் ஜெனரல் எடுத்த எடுப்பில் போய் எதிரிப் படையைத் தாக்குவாரா? ஒருக்காலும் மாட்டார். எதிரியின் வலிமை என்ன? நம் வலிமை என்ன? அவர்களது மற்றும் நம் பலவீனம் என்ன? எந்த நேரத்தில் அவர்கள் அசந்து இருப்பார்கள். என்றெல்லாம் நிலைமையை நன்கு தெரிந்து கொண்டு , அவசரம் காட்டாமல் தருணம் பார்த்துத் தானே போர் தொடுப்பார்? அப்படித்தான் இதுபோன்ற முயற்சிகளும் கையாளப்பட வேண்டும்.

அத்தே, அத்தே! என்று முதலில் குழையடித்து, சரி அத்தை அப்படியே செய்கிறேன் அத்தை! ஜால்ரா போட்டு ,அந்த அத்தையின் மனத்தை மயக்க என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து வந்தால் சாவி கைக்கு வருவதென்ன, மாமியாரே பெட்டிப் பாம்பாக அடங்கிப் போவாள். இதைவிட்டு விட்டு எடுத்த எடுப்பிலேயே நான் சொல்வதைத் தான் என் மாமியார் கேட்க வேண்டும்; அவர் (அவள் ) சொல்வதை நானென்ன கேட்பது? உங்களுக்கு நான் முக்கியமா? உங்க அம்மா முக்கியமா? முடிவு செய்யுங்க! என்கிற பாணியில் அணுகினால் வாழ்க்கைப் பாதையில் முழுக்க சோக முட்கள் குத்திக் கொண்டே தான் இருக்கும்.

அலுவலகத்திலும் கிட்டத்தட்ட இப்படித் தான். பதவி உயர்வுக்காகத் தான் செயற்படுகிறோம் என்று பச்சையாகக் காண்பித்துக் கொள்ளக் கூடாது. மாறாக , அந்த ஆசையை உள்ளடக்கி அந்தப் பதவிக்கு இவரை விடத் தகுதியான ஆள் வேறு யார் இருக்க முடியும் என்று உரியவர்களை எண்ணும் படி செய்ய வேண்டும். அதற்கான களங்களையும் சூழ்நிலைகளையும் பிறரால் சுவாசித்து உணர முடியாதபடி அமைக்க வேண்டியதும் முக்கியம்.

ஆசையை வெளிப்படுத்தி , ஒகே ! உன் உள்நோக்கம் இதுவாக்கும் ? உனக்கு வைக்கிறேன் பார் அதிர்வேட்டு ! என்று எதிரியை உசுப்பிவிட்டுவிடக் கூடாது.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## நயவஞ்சக நரி

ஒரு காட்டில் நரி ஒன்று இருந்தது. ஒரு முறை அதற்கு நிறைய உணவு ஒரே வேளையில் சாப்பிட வேண்டுமென்று விரும்பிற்று. அதற்கான தருணம் எப்போது வாய்க்கப் போகிறதோ என்று காத்துக் கொண்டிருந்தது.

மரத்தின் நடுவிலுள்ள பொந்து ஒன்றில் அது மிகவும் நல்லவனைப் போல வசிக்க ஆரம்பித்தது. மனதுக்குள் இந்த மரத்தின் கூடு கட்டி வரும் பறவைகள் குஞ்சு பொரித்தால் குஞ்சுகளை அப்படியே சாப்பிட்டு விடலாமே என்றெண்ணிற்று நரி.

அதன் எண்ணம் வீண் போகவில்லை. இரண்டு கழுகுகள் கணவன், மனைவியாக ஒரு நாள் அம்மரத்தடிக்கு வந்தன. மரப் பொந்தில் மிகவும் சாது மாதிரி படுத்துக் கிடக்கும் நரியைப் பார்த்தன.

"நரியாரே! நீ இம்மரப் பொந்தில் எவ்வளவு நாளாக இருக்கிறீர்?" என்று கேட்டது ஆண் கழுகு.

"கழுகாரா வாங்க கூட யாரு? மன்னியா?" என்று கேட்டது.

"ஆமாம்!" "நான் கேட்டதற்கு நீர் இன்னமும் பதில் சொல்லவில்லையே!" என்று கேட்டது.

"ஆமாம்! இம்மரப் பொந்தில் பல வருஷங்களாக இருக்கிறேன்! ஏன் கேட்கிறீர்?"



என்று கேட்டது நரி.

"என் மனைவிக்கு பிரசவ காலம் நெருங்குகிறது. இம்மரத்தில் கூடு கட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொரிக்கலாம என்று ஒரு ஆசை!" என்றது ஆண் கழுகு.

"ரொம்ப ராசியான மரம் இது முன்பு கூட ஒரு பருந்து இங்கு கூடு கட்டி, குஞ்சு பொரித்து, சுகமாக வாழ்ந்தது!" என்றது நரி.

"ஆபத்து ஏதாவது உண்டாகுமா?" என்று கவலையோடு கேட்டது பெண் கழுகு.

"நான் வயதானவன் இந்த பொந்தே கதி என்று கிடக்கிறேன். நீங்கள் பயப்படவே வேண்டாம். நாம் நல்ல நண்பர்களாக இருப்போம்!" என்றது நரி.

பிறகு மரத்தை அண்ணாந்து பார்த்து மூன்று கிளைகள் பிரியும் ஒரு இடத்தை சுட்டிக் காட்டி, "அங்கு கூடு கட்டிக் கொள்ளுங்கள். மிகவும் வசதியாக இருக்கும்!" என்றது.

ஆண் கழுகும், பெண் கழுகும் அங்கு சென்று கூடு கட்ட ஆரம்பித்தன. ஆண் கழுகு வெளியில் இரை தேடிச் செல்லும் பொழுது, "என் மனைவி மட்டும் கூட்டிலிருக்கிறாள். அவளால் பறக்க முடியவில்லை இன்றோ, நாளையோ முட்டை இடப் போகிறாள் கொஞ்சம் பார்த்துக் கொள்ளும் நரியாரே!" என்றது.

"கவலைப்படாமல் போய் வாரும் நண்பரே! நான் இங்கிருக்கும் வரை எந்த ஆபத்தும் அண்டாது!" என்றது நரி.

நமக்கு நல்ல நண்பன் கிடைத்தான் என்றெண்ணி இரை தேட பறந்து சென்றது ஆண் கழுகு.

பெண் கழுகு முட்டையிட்டு குஞ்சு பொரித்து அவை சுமாராக பெரிதானதும், எல்லாவற்றையும் சாப்பிட்டு விட வேண்டுமென்று நரி எண்ணிக் கொண்டிருக்கும்பொழுது, மரத்தடியில் புதிதாக வந்த பன்றியும், அதன் கொழு கொழு குட்டிகளும் அதன் பார்வையில் பட்டது.

பன்றிக் குட்டிகளை சாப்பிட்டு பல நாள் பசியாறலாம் போலிருக்கிறதே என்றெண்ணிற்று நரி. மேலே கழுகு குஞ்சுகள், கீழே பன்றிக் குட்டிகள் பேஷ் பேஷ்

"நரியாரே இந்த மரத்தடியில் நானும் என் குட்டிகளும் தங்கலாமா?" என்று கேட்டது அம்மா பன்றி.

(தொடரும்)

## இன்றைய நாளில் முன்னைய பதிவுகள்

10.2016 01

- 1795 - பிரான்ஸ் பெல்ஜியத்தைப் பிடித்தது.
- 1799 - புதுக்கோட்டை மன்னர் விஜயரகுநாத தொண்டமானால் வீரபாண்டிய கட்டபொம்மன் கைது செய்யப்பட்டான்.
- 1827 - இவான் பஸ்க்கேவிச் தலைமையில் ரஷ்ய இராணுவம் ஆர்மேனியாவின் தலைநகர் யெரெவானைப் பிடித்தது.
- 1843 - நியூஸ் ஒஃப் தெ வேர்ல்ட் பத்திரிகை லண்டனில் வெளியிட ஆரம்பிக்கப்பட்டது.
- 1854 - இந்திய அஞ்சல் துறை ஏற்படுத்தப்பட்டது.
- 1869 - உலகின் முதல் தபால் அட்டை ஆஸ்திரியாவில் வெளியிடப்பட்டது.
- 1880 - இந்தியாவுடனான காசுக்கட்டளை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1880 - முதலாவது மின் விளக்கு தொழிற்சாலையை தொமஸ் எடிசன் ஆரம்பித்தார்.
- 1887 - பிரித்தானியரினால் பலூசிஸ்தான் கைப்பற்றப்பட்டது.
- 1892 - இலங்கையில் இந்திய இரண்டு அணா நாணயம் செல்லுபடியற்றதாக்கப்பட்டது. பதிலாக வெள்ளி நாணயம் அறிமுகமானது.
- 1895 - பிரெஞ்சுப் படைகள் மடகஸ்காரின் அண்டனனாரிவோ நகரைக் கைப்பற்றினர்.
- 1898 - ரஷ்யாவின் முக்கிய நகரங்களிலிருந்து யூதர்கள் இரண்டாம் நிக்கலாஸ் மன்னனால் வெளியேற்றப்பட்டனர்.
- 1910 - லாஸ் ஏஞ்சலீஸ் டைம்ஸ் கட்டடம் பெரும் குண்டுவெடிப்பினால் தகர்க்கப்பட்டது. இதில் 21 பேர் கொல்லப்பட்டனர்.
- 1918 - முதலாம் உலகப் போர்: அரபுப் படைகள் சிரியாவின் டமாஸ்கஸ் நகரைக் கைப்பற்றினர்.
- 1931 - ஜோர்ஜ் வாஷிங்டன் பாலம் திறக்கப்பட்டது.
- 1953 - ஆந்திரா மாநிலம் உருவாக்கப்பட்டது.
- 1961 - கிழக்கு மற்றும் மேற்கு கமரூன் ஒன்றுபட்டு கமரூன் சமஷ்டிக் குடியரசு ஆகியது.
- 1965 - இந்தோனேசியாவில் நிகழ்ந்த கம்யூனிசப் புரட்சி ஜெனரல் சுகார்ட்டோவினால் முறியடிக்கப்பட்டது.
- 1969 - கொன்கோர்ட் விமானம் முதற்தடவையாக ஒலியின் வேகத்தை மீறியது.
- 1971 - வால்ட் டிஸ்னி உலகம் புளோரிடாவில் அமைக்கப்பட்டது.
- 1975 - சிஷெல்ஸ் சுயாட்சியைப் பெற்றது. எலீஸ் தீவுகள் கில்பேர்ட் தீவுகளிலிருந்து பிரிக்கப்பட்டு துவாலு என்ற பெயரைப் பெற்றது.
- 1977 - பிரேசில் கால்பந்தாட்ட வீரர் பெலே இளைப்பாறினார்.
- 1979 - ஐக்கிய அமெரிக்கா பனாமா கால்வாயை பனாமாவுக்கு மீள அளித்தது.
- 1982 - சொனி நிறுவனம் முதலாவது குறுந்தட்டு ஒலிபரப்பு சாதனத்தை (CDP-101) வெளியிட்டது.
- 1992 - விடுதலைப் புலிகள் கட்டைக்காடு இராணுவக் காவலரணைத் தாக்கி பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றினர்.
- 1994 - பலாவு ஐ.நா.விடம் இருந்து விடுதலை பெற்றது.
- 2006 - பாண்டிச்சேரி மாநிலத்தின் பெயர் புதுச்சேரி என மாற்றம் பெற்றது.

### பிறப்புக்கள்

- 1847 - அன்னி பெசண்ட், பெண் விடுதலைக்குப் போராடியவர். (இ. 1933)
- 1924 - ஜிம்மி கார்ட்டர், அமெரிக்காவின் 39வது குடியரசுத் தலைவர்.
- 1927 - சிவாஜி கணேசன், தமிழ்த் திரைப்பட நடிகர் . (இ. 2001)
- 1928 - ஜீ ரோங்ஜி, சீனத் தலைவர்.
- 1932 - அரங்க முருகையன், தமிழறிஞர், எழுத்தாளர் . (இ 2009)
- 1936 - கே. எஸ். சிவகுமாரன், ஈழத்து எழுத்தாளர், திறனாய்வாளர்.
- 1947 - ஆரன் சீசேனோவர், நோபல் பரிசு பெற்ற இசுரேலியர்.

### இறப்புகள்

- 1973 - பாபநாசம் சிவன், கருநாடக இசை, தமிழிசை அறிஞர் . (பி. 1890)
- 2008 - பூர்ணம் விஸ்வநாதன், தமிழக நாடக, திரைப்பட நடிகர்.

### சிறப்பு நாள்

- மக்கள் சீனக் குடியரசு தேசிய நாள் . (1949)
- சைப்பிரஸ் - விடுதலை நாள். (1960)
- நைஜீரியா - விடுதலை நாள். (1960)
- துவாலு - விடுதலை நாள். (1978)
- சிங்கப்பூர் - சிறுவர் நாள்.
- ஆர்மேனியா - ஆசிரியர் நாள்.
- அனைத்துலக முதியோர் நாள்.
- அக்டோபர் 1-7 உலக வனவுயிரி வாரம்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 50 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 70 | 120 | 100 |
| தக்காளி | 80 | 80 | 80 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 70 | 60 | 80 |
| கோவா | 80 | 100 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 100 | 120 | 100 |
| பூசணி | 30 | 40 | 40 | 50 | 40 |
| புடோல் | 50 | 50 | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 60 | 100 | 100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 120 | 80 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 80 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 120 | 160 | 100 | 100 | 150 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 40 | 30 | 80 | 50 |
| கறிமிளகாய் | 100 | 160 | 90 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 80 | 80 | 100 |
| போஞ்சி | 160 | 200 | 160 | 200 | 160 |
| கத்தரிதம்பள்ள | 60 | 60 | 50 | 40 | 75 |
| கீரை - 1பிடி | 20 | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 350 | 600 | 300 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 30 | 25-35 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 80 | 120 | — | 200 | 180 |
| முள்ளங்கி | 40 | 40 | 50 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | — | — | 60 | — |

# பிரிவினை இல்லாதது குழந்தைகளின் உலகம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

இந்த உலகில் பிறக்கும் எல்லா குழந்தைகளும் அவர்களது கண்களில் பிரமிப்புடனும் இயற்கையின் அதிசயமான படைப்புகள் குறித்த துருவியறியும் தன்மையுடனும் ஒளி வீசும் மலர்ந்த முகத்துடனுமே பிறக்கின்றன. அழகும் பல்வகைத் தன்மையும் நிறைந்ததேஅவர்களது உலகம்.

சிறுவர்கள் வானவில்லின் பிரகாசமான நிறங்களை மட்டுமே பார்க்கின்றனர். பறவைகளின் இன்னிசை இராகங்களை மட்டுமேஅவர்கள் கேட்கின்றனர். பூவிதழ்களின் மென்மையை மட்டுமே உணர்கின்றனர். பெரியவர்களின் உள்ளங்களில் உள்ள இனம், சமயம் அல்லது நில எல்லைகள் என்ற எந்தப் பிரிவினையும் குழந்தைகளின் உலகைச் சேர்ந்தவை அல்ல என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு அன்பைக் கொடுங்கள். ஆனால் அவர்களுக்கு உங்களது எண்ணங்களையும் சிந்தனைகளையும் கொடுத்து விடாதீர்கள். ஏனென்றால் அவர்களுக்கு அவர்களுக்கே உரிய எண்ணங்களும் சிந்தனைகளும் உள்ளன என தத்துவக் கவிஞர் கலீல் ஜிப்ரான் குறிப்பிடுகிறார்.இது பிள்ளைகளோடு நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை எமக்கு நினைவுபடுத்துவதுடன் இது இந்த சர்வதேச சிறுவர் தினத்தில் நாம் நமது எண்ணத்தில் பதித்துக் கொள்ள வேண்டியதொன்றாகும்.



சிறுவர்களுக்கு போசாக்கு மற்றும் சுகாதார வசதிகளை வழங்கவும் கல்வி கற்கும் உரிமையை உறுதி செய்யவும் பொருத்தமான சூழலை உருவாக்குவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம்.

என்றாலும் ஒரு தேசம் என்ற வகையில் சிறுவர்களின் இந்த எல்லா தேவைகளும்உறுதிசெய்யப்பட்டுள்ளதா என்பதில் நாம் திருப்தியடைந்து விட முடியாது. சிறுவர்களுக்கெதிரான காட்டுமிராண்டித்தனமான வன்முறையை ஒழித்துக்கட்டுவதிலும் நாம் திருதியையடைந்து விட முடியாது. எனவே தான் குடும்பம், பாடசாலை, உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வாழும் இடங்கள் உள்ளிட்ட எல்லா இடங்களும் சிறுவர்கள் வாழ்வதற்குப் பொருத்தமான இடங்கள் என்பதை உறுதி செய்வதற்கான ஒரு முக்கிய சமுகப் பணியை நாம் முன்னெடுக்க வேண்டும்.

இந்த முக்கியமான சமுகத் தேவைப்பாட்டுக்கு முன்னுரிமையளிக்கும்வகையில்ஜனாதிபதி செயலகத்தினால் சிறுவர்களைப் பாதுகாப்போம் (துருவன சுரகிமு)என்றதேசிய நிகழ்ச்சித்திட்டத்தைநாம்ஆரம்பித்துள்ளோம்.

இந்த உலகம் சிறுவர்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கேற்ற பாதுகாப்பானதும் அழகானதுமான ஒரு இடமாக இருக்க வேண்டும் என பெரிதும் விரும்புகின்றவன் என்ற வகையில் இந்த சர்வதேச சிறுவர் தினத்தைக் கொண்டாடும்எல்லோருடனும்நானும் இணைந்து கொள்கின்றேன். இந்த உலகில் வாழும் எல்லா சிறுவர்களுக்கும் எனது அன்பையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## எல்லை நிர்ணயம் ஒக்டோபரில் நிறைவு; ஜனவரியில் உள்ளூராட்சி சபைத்தேர்தல்

உள்ளூராட்சி சபைத் தேர்தலை அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

புதிய எல்லை நிர்ணயத்துக்காக நியமிக்கப்பட்ட குழுவினரின் பெரும்பாலான வேலைகள் தற்போது நிறைவடைந்துள்ளதால், எதிர்வரும் ஒக்டோபர் மாத இறுதிக்குள் அவற்றை நிறைவு செய்ய முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் எல்லை நிர்ணயத்தை தவறாக உருவாக்கியவர்களே இன்று நாம் தேர்தலை நடத்தாது தாமதிப்பதாக குற்றம்சாட்டுகின்றார்கள். எல்லை நிர்ணயத்துக்காக அமைக்கப்பட்ட குழு ஆய்வுகளை மேற்கொள்ளும் போதே கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட எல்லை நிர்ணயத்தில் காணப்படும் குறைப்பாடுகளை இனம்காணமுடிந்துள்ளது.

இக்குழுவினர் பெரும்பாலான வேலைகளை நிறைவு செய்துள்ளார்கள். மாத்தறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களிலுள்ள சிவில் அமைப்புகள், கட்சிகளின் கருத்துகள் மட்டுமே தற்போது பெறப்பட்டுள்ளன. இன்னும் இது தொடர்பில் ஆராய்வதற்கு இக்குழுவினர் செல்லவில்லை. எனவே விரைவில் இப்பகுதிக்கான வேலைகளும் நிறைவடையும்

உள்ளூராட்சி தேர்தலை காலதாமதமாக்கும் தேவை எங்களுக்குஇல்லை. எல்லை நிர்ணய வேலைகள் சரியான முறையில் நிறைவடைந்தவுடன் தேர்தலை நடத்துவோம்.

நாங்கள் சகல அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலேயே எல்லை நிர்ணயக் குழுவினை அமைத்துள்ளோம். இக்குழுவின் தலைவர் அசோக பீரிஸ் முன்னாள் காணி அமைச்சின் தலைவராகவிருந்தவர். அதேபோல் ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி ஏ.எஸ்.ஏம் மிஸ்பரும், ஐக்கிய மக்கள் முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி சாலியவும், மக்கள் விடுதலை முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி உபுல் குமரப்பெருமவும், தமிழ் தேசிய கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி பாலசுந்தரம்பிள்ளையும் நியமிக்கப்பட்டுள்ளனர்.


பலர் நான் பொய் உரைப்பதாக குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் ஒருபோதும்



நான் நாட்டை சீரழிக்கும் விதத்தில் நட்ந்துகொள்ள மாட்டேன். ஜனாதிபதி சகலருக்கும் சமவுரிமையை வழங்கும் விதத்தில் செயற்படுத்துமாறு ஆலோசனை வழங்கியுள்ளார். எனவே அதற்காகவே எங்களுடைய வேலைகளை மேற்கொண்டு வருகின்றோம் என அவர் தெரிவித்தார். (இ-7-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 858


**ராசி**




**ஜெசி**




**சந்து**



கவலைப்படாத கணவர்கள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள்!!!

உங்கள் மனைவி இரண்டு
சிம் கார்டு
வைத்திருந்தாலும்
இரண்டு நம்பரையும்
மனைவி என்ன
பெயரில் சேவ்
பண்ணிக்கொள்ளவும்.
மனைவி 1,
மனைவி2 என்று
சேவ் பண்ண வேண்டாம்.
இப்படிக்கு
மருத்துவமனையிலிருந்து
நமது உறுப்பினர்.

**சர்மி சர்மி**

"கடவுள்" கொடுக்காத
அனைத்தையும்...
"கனவு" மட்டும் தான்
கொடுக்கும்...

வாலிபன் @SK.Sorya_off7

**பகி**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அனைத்துலக அரங்கிற்கு விரிவடையும் மைத்திரி-ரணில் பனிப்போர்

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கிடையில் அமெரிக்காவின் நியூயோர்க்கில் இடம்பெற்ற சந்திப்பில் என்ன நடந்தது என்பதை அறிவது ஆர்வத்தைத் தூண்டியது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட அமெரிக்காவின் உதவிச் செயலர் நிஷா பிஸ்வால் ஜோன் கெரிக்கு தகவல் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இந்தத் தகவலை வாசித்த கெரி, ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அரசாங்கத்திற்கும் இடையிலான தற்போதைய நிலவரம் தொடர்பாக மைத்திரியிடம் வினவினார். ஜோன் கெரிக்கு அனுப்பிய செய்திக்குறிப்பில் தேசிய அரசாங்கம் தொடர்பாக வினவுமாறு நிஷா பிஸ்வால் கேட்டமைக்கான காரணம் என்ன என்பது தொடர்பில் மைத்திரி சந்தேகம் கொண்டிருந்தால் அது நியாயமானது.

எனினும், நிஷா பிஸ்வாலின் செய்திக்குறிப்புத் தொடர்பாக மங்களவும் ரணிலுமே உண்மையில் மகிழ்ச்சியடைந்தனர். மைத்திரிபாலவுடன் அமெரிக்காவிற்குப் பயணம் செய்திருந்த ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக ரணில் குழப்பமடைந்திருந்தமையே இதற்கான காரணமாகும்.

தனக்கோ அல்லது தனது உதவியாளருக்கோ அறிவிக்காமல் தனது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்காவிற்குச் சென்றமை தொடர்பில் ரணில் சந்தேகம் கொண்டிருந்தார்.

ஏனெனில் மகிந்தவைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்துவதற்கு ரணில் முயற்சிப்பதாக இவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் கட்சிக்குள் பிளவு ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டே ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களை மைத்திரிபால தனது அமெரிக்காவிற்கான பயணத்தின் போது தன்னுடன் அழைத்துச் சென்றிருந்தார் என ரணில் நம்பமுடியும்.

எனினும், மைத்திரியுடன் அமெரிக்காவிற்குப் பயணம் செய்த ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ரணில் தரப்பு விசாரணை செய்யும் என்பதிலும் எவ்வித சந்தேகமுமில்லை. இந்தச் செய்தியானது மைத்திரிக்கு எதிரான ஒன்றாகும்.

ரணிலிடம் அறிவிக்காது ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியூயோர்க்கிற்குப் பயணம் செய்திருந்தால், இந்தப் பிரச்சினை தொடர்பாக ரணில் மற்றும் மைத்திரிக்கு இடையில் கலந்துரையாடப்பட்டு தீர்வு காணப்பட்டிருக்கும். எனினும், இந்த விடயத்தை ஊடகங்களின் மூலம் வெளியிடுவதன் மூலம் இந்த நாடு மட்டுமல்லாது அனைத்துலக நாடுகள் மத்தியிலும் மைத்திரி மற்றும் ரணில் ஆகிய இரு தலைவர்களுக்கும் இடையில் பாரியதொரு முரண்பாடு உள்ளது என்கின்ற செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய அரசாங்கத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பாகவே ஜோன் கெரி வினவியிருந்தாரா? இல்லையா ? என்பது எமக்குத் தெரியாது.

எனினும் இந்தச் செய்திக்குறிப்பானது நிஷா பிஸ்வாலால் அனுப்பப்பட்டமையே இங்கு முக்கிய விடயமாகும். இவர் அமைச்சர் மங்கள சமரவீரவின் நண்பியாவார்.

மங்களவின் வெளிவிவகார அமைச்சுடன் ரணில் முன்னர் முரண்பாட்டைக் கொண்டிருந்த போதிலும் பின்னர் அவர் அதனை மறந்துவிட்டார். வெளிவிவகாரக் கொள்கையானது மங்களவின் வெளிவிவகார அமைச்சால் சரியான வகையில் அமுல்படுத்தப்படவில்லை எனச் சுட்டிக்காட்டிய ரணில் புதிதாக ஆணைக்குழுக்களை நியமித்திருந்தார்.

இது மட்டுமல்லாது, இந்த விடயம் தொடர்பாக ரணில், மைத்திரியுடனும் கலந்துரையாடியிருந்தார்.

இந்நிலையில் வெளிவிவாகார அமைச்சில் தலையீடு செய்வதை ரணில் திடீரென நிறுத்தியமைக்கான காரணம் எமக்குத் தெரியாது. ஏனெனில் மங்கள, ரணிலின் கருத்தை அனைத்துலக சமூகத்திற்கு எடுத்துச் சென்றிருந்தமையாக இருக்கலாம்.

அனைத்துலக சமூகத்தின் மனதை வென்றெடுப்பதற்காக மைத்திரி மற்றும் ரணில் ஆகியோருக்கு இடையில் பனிப்போர் ஒன்று ஆரம்பித்துள்ளமை தெளிவாகிறது. இந்தப் பனிப்போரில் ரணிலிற்கு ஆதரவாகவே மங்கள செயற்படுவதாக மைத்திரி தரப்புக் கருதுகிறது. இதன் காரணமாக போர்க் குற்றங்கள் தொடர்பாக மங்களவால் கூறப்படும் கருத்துக்களை



மைத்திரி தரப்பு மறுத்து வருகிறது.

இதில் முதலாவது விடயம் மைத்திரியும் அவரது தரப்பினரும் மகிந்த மற்றும் ராஜபக்ஷ குடும்பத்தை அரசியலிலிருந்து ஒதுங்கச் செய்வதற்கு முயற்சிக்கின்றனர். போர்க்குற்றங்கள் தொடர்பான நிகழ்ச்சி நிரலானது அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளில் ஒரு தடையாக இருப்பதாக இவர்கள் கருதுகின்றனர்.

ஆனால் இந்த விடயம் சிங்கள பௌத்த மக்களை மகிந்தவிற்குப் பின்னால் அணிதிரள வைக்கும் என மைத்திரி தரப்புக் கருதுகிறது. ஆகவே, சிங்கள பௌத்த மக்களால் போர்க்குற்றங்கள் தொடர்பான நிகழ்ச்சி நிரல் எவ்வாறு நோக்கப்படுகிறது என்பதற்கமைவாக அதனை மாற்றியமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.



உலகத் தமிழ் பேரவை போன்ற புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுடன் மங்கள மிகவும் நெருக்கமான தொடர்பைப் பேணி வருகிறார் என்பது வெளிப்படை. இதற்கு ரணில் எவ்வித எதிர்ப்பையும் வெளியிடவில்லை. ஏனெனில் இதன்மூலம் அடுத்த பொதுத்தேர்தலில் தமிழ் மக்களின் வாக்கை ஐ.தே.க. வெல்வதற்கான சாத்தியம் உள்ளதாக ரணில் கருதுகிறார்.

அனைத்துலக சமூகத்தின் இதயத்தை வெல்வதற்காக ரணில் மற்றும் மைத்திரிக்கு இடையில் இடம்பெறும் பனிப்போரானது அடுத்த பொதுத்தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை வெல்வதற்கான ஒரு முயற்சியாக உள்ளது.

புலம்பெயர் தமிழ் மக்களின் மனங்களை வெல்வதன் மூலம் தமிழ் மக்களின் வாக்குகளை ஐ.தே.க. வசம் பெற்றுக்கொள்ளலாம் என ரணிலிடம் மங்கள நம்பிக்கை தெரிவித்திருக்கலாம். இதன்காரணமாக போர்க்குற்றங்கள் தொடர்பில் மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சி நிரலிற்கு அமைவாகவே பணியாற்ற வேண்டும் என ரணிலிடம் மங்கள எடுத்துக்கூறுவதற்கான சாத்தியம் உள்ளது.

எனினும், ராஜபக்ஷ குடும்பம் மீண்டும் அரசியலில் தலைதூக்கக் கூடாது என்ற மைத்திரியின் அரசியற் திட்டமானது மங்களவின் நிகழ்ச்சி நிரல் மூலம் அழிவடையலாம் என மைத்திரி அச்சமடைவதாகவும் நோக்கலாம்.

வழிமூலம் - சிலோன்ருடே
ஆங்கிலத்தில் - உபுல் ஜோசப் பெர்னாண்டோ
மொழியாக்கம் - நித்தியபாரதி

# முதியோர்களின் சுயமரியாதையை பாதுகாத்தல் எமது கடமையாகும்

## வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி சுட்டிக்காட்டு

தொன்று தொட்டு இலங்கைப் பிரஜைகள் என்ற வகையில் நாம் பேணி வந்த பெறுமதி வாய்ந்த குணவியல்புகளை முழு உலகிற்கும் பறைசாற்றி சர்வதேச முதியோர் தினத்தினை அனுஷ்டிக்கின்றோம். எமது பொருளாதாரம் போன்றே கலாசாரம் மற்றும் பண்பாட்டை வளர்த்தெடுத்த முதியோர்கள் தொடர்பாக உலகின் வேறெந்த சமூகத்திற்கும் கிட்டாத கௌரவம் மற்றும் பாசம் எமக்குரியதாக்கப்பட்டுள்ளது. அது வெறுமனே குறித்த ஒரு தினத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டமை பற்றி நாம் பெருமையடைகின்றோம்.

முதியோர்களின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு போன்றே சுயமரியாதையை பாதுகாத்தல் எமது கடமையாகும். அவர்கள் தமது வாழ்வில் செய்த அர்ப்பணிப்புக்களை ஒருபோதும் நாம் குறைத்து மதிப்பிட முடியாது. முதியோர்கள் சமூகத்தின் மத்தியில் பலதரப்பட்ட துன்பங்களை அனுபவித்துள்ளார்கள் என்பதே அதற்கான காரணமாகும். உண்மையிலேயே முதியோர்கள் சமூக முன்னேற்றத்தின்போதும் ஒவ்வொரு தனி நபர்களது வாழ்க்கையிலும் செய்தவைகளை நன்றி உணர்வுடன் மீட்டிப்பார்ப்பது அவர்கள் மீது நாம் காட்ட வேண்டிய கௌரவம். பாசம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றிற்கு வழிவகுப்பதாக அமையும்.



"முதியோர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்ட ஓர் எதிர்காலம்'' என்பது இம்முறை சர்வதேச முதியோர் தினத்தின் தொனிப்பொருளாகும். எமது கலாசாரத்தின் பெறுமதி வாய்ந்த ஒரு அம்சமாக கருதப்பட்ட முதியோர்களை பாதுகாத்தலை முழு உலகிற்கும் எடுத்துக்காட்டாக அனுஷ்டிக்க கிடைத்தமை எமது மகிழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளது.

சர்வதேச முதியோர் தின நிகழ்வு முதியோர்களை மகிழ்விக்கும் அவர்கள் மீது ஆர்வம் செலுத்தும் பெறுமதி வாய்ந்த ஒரு சந்தர்ப்பமாக இது அமைவதற்கு பிரார்த்திக்கின்றேன்.

ஜனாதிபதி
மைத்திரிபால சிறிசேன

# கைதிகளும் மனிதர்கள்தான் கருணையாக நடத்துங்கள்

## சிறைச்சாலை ஊழியர்களுக்கு நீதிபதி அறிவுறுத்தல்

கைதிகளை கருணையாக நடத்துமாறு சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு நீதிபதி அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பத்மினி என். ரணவக்க குணதிலக்க. சிறைச்சாலை அதிகாரிகளுக்கு இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

சந்தேக நபர்கள் அல்லது கைதிகளும் மனிதர்களே. எனவே அவர்களை நீதிமன்றில் அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் வகையில் சிறைச்சாலை அதிகாரிகள் நடத்தக் கூடாது. சிறைச்சாலை அதிகாரிகள் இதனை விடவும் கருணையாக இருக்க வேண்டும்.

தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் நிபுண ராமநாயக்க தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பினான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக கொழும்பு வடக்கின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன, அவரது மகன் ரவிந்து குணவர்தன உள்ளிட்டவர்கள் நீதிமன்றில் அமர்ந்திருந்த ஓர் இருக்கையிலிருந்து எழுப்பப்பட்டு வேறு இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இதனை அவதானித்த நீதவான் கைதிகளையும் கருணையாக நடத்த வேண்டும்.

கைதிகள் நீதிமன்றிற்கு அழைத்து வரப்பட்டதன் பின்னர் அவர்களை கிரமமான முறையில் அமரச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நீதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். இந்த வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (இ-7-10)

## கைதடியில் இருந்து ஓர் கடிதம்

அன்பு மகனே!
நலமாய் இருக்கிறாயா என்றும்
என் வம்சம் தழைக்க வந்த பேரன் சுகமா?
உன் மனைவி சுகந்தானே
அண்மையில் உன் பேச்சை
நாளேட்டில் பார்த்தேன்
பள்ளி ஒன்றின் பரிசு நாளில்
"பெற்றோரைப் பேண வேண்டும்"
எனப் பெருமையாய்ப் பேசியிருந்தாய்
அருமையாய்த் தானிருந்தது
முதியோர் இல்லமே என்றைக்கும்
கதியென என்னை விட்டு
பத்து ஆண்டுகள் கழிந்தது மோனை
எத்தனை நாளோ இன்னும் தெரியாது
பேரன் பிறந்து மாதமொன்று ஆகாமல்
அவசரமாய் என்னை அனுப்பி வைத்தாய்
உன் மகவைக் கிருமியது தொற்றுமெனக் கூறி
என் மகவு நீ என்னை அனுப்பி வைத்தாய்
எப்படி இருக்கிறது எனது ஊர்
விழுது விலக்கிய வேர்களெல்லாம்-நேற்றைய
பொழுதில் தான் சந்நிதி போனோம்
கப்பூது வெளிக்காற்று என்மேனி தொட
எப்போதும் பெறாத உணர்வு பெற்றேன்
நினைவிருக்கா உனக்கு வள்ளி தெய்வானை
துணையோடு முருகன் வெளிவீதி வரும் போது
என் தோளேறி நிற்பாய் நேற்று
நினைவுகள் தோள்களை மட்டுமல்ல
நெஞ்சினையும் அழுத்தியது மகனே
சந்நிதிக்கு நேர்த்தி வைத்தே
நினைப்பெற்றாள் என் மனைவி
தூங்குகாவடி, கற்பூரச்சட்டி விரதமென
ஏக்கத்துடன் தவமிருக்க நீ கிடைத்தாய்
தந்தை மகற்காற்றும் உதவியை
உந்தை உனக்குச் செய்துவிட்டேன் உன்னை
நொந்து சுமந்த என் சக தர்மினி அதைப் பார்க்க
அந்தி வரை என்னோடு இல்லை
ஆசையொன்றுள்ளது எந்தனுக்கு
அப்புக்கு மூத்தவனும் ஆச்சிக்கு இளையவனும்
கொள்ளி வைத்த எங்களூரின்
கொத்துக்கட்டிச் சுடலையில்
என்னையும் கொளுத்தி விடு
வேறென்ன கோடை வெயிலின் கொடுமை
தாங்க முடியவில்லை பத்திரம் ராசா
சூடு தணியும் வரை சனிக்குச் சனி
நல்லெண்ணெய் உச்சி வைத்து நீராடு
பாசத்தோடும் பரிவோடும்
அப்பா.

**தி.சாந்தகுமார்**
**யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை.**

# ரஞ்சனின் "மாயா" திரைப்படம் காண்பிப்பதை தடுத்து நிறுத்துமாறு பிரதமரிடம் கோரிக்கை

(கொழும்பு)

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நடித்து வெளியாகியுள்ள புதிய திரைப்படமான மாயா திரைப்படத்தை ஊடகவியலாளர்களுக்கு காண்பிக்கப்படுவதை பிரதமர் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

அந்த இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த 27 ஆம் திகதி பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தனது இல்லத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் இறுதியில் ஊடகவியலாளர் ஒருவரை திட்டி அச்சுறுத்தி. கமராவை தாக்கிய சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

நுகர்வோரான மக்கள் ஊடகங்கள் வாயிலாகவே தகவல்களை பெற்றுக் கொண்டனர். தகவல்களை அறிந்து கொள்வது நுகர்வோரின் உரிமை. அந்த உரிமையை மீற மக்கள் பிரதிநிதிகளுக்கு எந்த வகையிலும் உரிமையில்லை.

தனது கருத்தை வெளியிட்ட ஊடகவியலாளர் ஒருவருக்கு இருக்கும் புனிதமான உரிமையை நாங்கள் மதிக்கும் அதேவேளை ஊடகவியலாளர்களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பான தேவையான பயிற்சிகளை அரசியல்வாதிகளுக்கு வழங்க வேண்டும் என்பதே எமது அமைப்பின் நிலைப்பாடாகும்.

ரஞ்சன் ராமநாயக்கவின் மாயா திரைப்படம் ஊடகவியலாளர்களுக்கு காண்பிக்கப்படுவதை பிரதமர் உடனடியாக தலையிட்டு நிறுத்த வேண்டும்.

தான் எந்த வகையிலும் ஊழல் மோசடிகளில் ஈடுபடவில்லை என்று கூற ரஞ்சன் ராமநாயக்கவுக்கு உரிமை இருக்கின்றது. அதனை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்பது மக்களுக்குரிய உரிமை.

நாட்டில் உள்ள அனைத்து மக்களும் ரஞ்சன் ராமநாயக்கவின் ஆதரவாளர்கள் அல்ல என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் ஊடகங்களுக்கு எதிரில் வெறித்தனமாக நடந்து கொள்ளும் நபர்களை கட்டுப்படுத்த வேண்டும் என்று நல்லாட்சியிடம் மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்பதை ஜனாதிபதி புரிந்து கொள்ள வேண்டும் எனவும் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் என மேலும் தெரிவித்துள்ளது. (இ-10)

# சுலைமான் கொலை குறித்து ஜி.பி.எஸ்.தொழில்நுட்ப விசாரணைக்கு உத்தரவு

பம்பலப்பிட்டி வர்த்தகர் மொஹமட் சுலைமானின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 9 சந்தேக நபர்களினதும் வாகனங்கள் மற்றும்தொலைபேசிகளை. மொறட்டுவப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி. ஜீ.பி.எஸ் தொழில்நுட்பம் கொண்டு சோதனைகளைமேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றம். நேற்று முன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டது.

பம்பலப்பிட்டி வர்த்தகர் கொலை தொடர்பான வழக்கு விசாரணை, கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் முன்னிலையில். நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது. கொலைச் சந்தேக நபர்கள் 9 பேரும். மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது. சந்தேக நபர்கள் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள், தங்களது கட்சிக்காரர்களுக்கு பிணை வழங்குமாறு கோரி. பிணை விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர். இருப்பினும். அவ்விண்ணப்பங்களை நிராகரித்த நீதவான். இவர்கள் கொலைச் சந்தேகநபர்கள் என்பதால். அவர்களை பிணையில் செல்ல அனுமதிக்க முடியாதென்று கூறியதுடன், அந்த 9பேரையும் இம்மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்நிலையில், சுலைமானின் பிரேத பரிசோதனை அறிக்கையை, எதிர்வரும் 5ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ளதாக, கொழும்பு குற்றத் தடுப்புப்பிரிவு அதிகாரிகளினால், நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. பம்பலப்பிட்டியைச் சேர்ந்த கோடீஸ்வர இளம் வர்த்தகர் மொஹமட் சகீப் சுலைமான், கடந்த ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 11.30 மணியளவில். அவரது வீட்டுக்கு முன்னால் வைத்து இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இவரது சடலம், கேகாலை மாவட்டத்துக்குட்பட்ட மாவனெல்ல - ஹெம்மாத்தகம பிரதேசத்திலிருந்து, ஓகஸ்ட் 24ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# கட்டாக்காலி நாய்களால் ஏற்படும் பாதிப்புக்களை தடுக்க புதிய முயற்சி

கட்டாக்காலி நாய்களால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தடுப்பதற்கான அதிரடி நடவடிக்கைகளை முன்னெடுக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கையை குறைத்தல், கட்டாக்காலி நாய்களுக்கான ஊசியினை விரைவில் போடுதல், கட்டாக்காலி நாய்களை பாதுகாப்பதற்கான மத்திய நிலையங்களை அமைத்தல் உள்ளிட்ட பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை. கடந்த சில நாட்களாக கட்டாக்காலி நாய்களினால் விபத்துக்களும் அதிகரித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும். கட்டாக்காலி நாய்களால் ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை திட்டமிட இதற்கு முதலும் அதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# நவராத்திரி விரதாரம்பம் இன்று

துர்முகி வருட 2016 ஆம் ஆண்டிற்குரிய நவராத்திரி விரதாரம்பம் (01.10.2016) இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் இம்முறை இடம்பெற்று (11.10. 2016) செவ்வாய்க்கிழமை நடைபெறுகின்ற விஜயதசமி பூஜையுடன் நிறைவு பெறும். இந்து ஆலயங்களிலும் வீடுகளிலும் பாடசாலைகளிலும் அலுவலகங்களிலும் மற்றும் தொழில் ஸ்தாபனங்களிலும் சுவாமி அறையில் நவராத்திரி கொலு வைத்து பூரண கும்பம் வைத்து பக்தி பூர்வமாக நவராத்திரி விரதம் ஆரம்பமாகின்றது.

முதல் மூன்று நாட்களும் விரதத்திற்கு அதிபதியாகிய துர்க்கை வழிபாடு மேற்கொள்ளப்பட்டு அடுத்த மூன்று நாட்களும் செல்வத்திற்கு அதிபதியாகிய லக்ஸ்மி வழிபாடு மேற்கொள்ளப்பட்டு இறுதி மூன்று நாட்களும் கல்விக்கு அதிபதியாகிய சரஸ்வதி வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது. இம்முறை பதினொராம் திகதி விஜயதசமி அன்று ஏடு தொடக்குதல் வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது.

சிம்ம வாகனத்தில் அமர்ந்து சக்கரம், சிங்கம், ஞலம் முதலிய ஆயுதங்கள் தரித்துத் துக்க நிவாரணியாகத் துர்க்கை காட்சி தருகின்றாள். நன்மைகளையும் நன்மை செய்யும் எல்லாப் பொருட்களையும் அளிப்பவள் லக்ஸ்மி. ஆயிரம் இதழ்களையுடைய தாமரையில் இரு கைகளிலும் தாமரைகள் தாங்கி அபயம், வரதம் என்ற முத்திரைகளுடன் வீற்றிருந்து அருள்,



பொருள் பாலிப்பவள் லக்ஸ்மி. பதினான்கு மன்வந்தரத் திலும் லக்ஸ்மி தேவி அவதாரம் செய்கிறாள் என்பர்.

ஸ்ரீநாராயணனின் திருமார்பில் லக்ஸ்மி அகலாமல் வசிக்கின்றாள். எனவே அவனை ஸ்ரீ நிவாஸன் என்பர். லக்ஸ்மி ஆதிலக்ஸ்மி, கஜலக்ஸ்மி, சந்தானலக்ஸ்மி விஜய லக்ஸ்மி தான்யலக்ஸ்மி, வீரலக்ஸ்மி, மஹாலக்ஸ்மி என்ற எட்டு ஸ்வரூபங்கள் உள்ளன.

ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு உடல் வலிமையும் வாழ்க்கைக்குத் தேவையான செல்வமும் அறிவும் மிக அவசியம். அதனை வெளிப்படுத்த உடல் வலிமையின் சக்தியாக ஸ்ரீ துர்க்கா தேவியையும் வாழ்க்கைக்குத் தேவையான செல்வத்தை நல்கவல்ல சக்தியாக ஸ்ரீ மகாலக்ஸ்மியையும் அறிவையும் ஆற்றலையும் தரவல்ல கல்வியின் அதிபதியாகிய ஸ்ரீ சரஸ்வதி தேவியையும் நாம் வழிபட்டு அந்தத் தேவியரின் அருள் பெற்று முறையே வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றையும் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட பண்டிகையே நவராத்திரி எனப்படும்.

அறுபத்திநான்கு ஆய கலைகளுக்கு கலைத் தெய்வமான சரஸ்வதி தலைமை தாங்குகிறாள். சரஸ்வதி தேவியானவள் கல்விக்கு அதிபதியானவள். கல்வி அழியாத செல்வமாகும். ஏனைய செல்வங்கள் யாவும் பிறருக்குக் கொடுக்கும் தோஷம் அழிந்து கொண்டே போகும். கல்விச் செல்வமானது பிறருக்கு கொடுக்கும் தோஷம் பெருகிக் கொண்டே செல்லும். இதனால் தான் கல்விச் செல்வத்தை அழியாச் செல்வம் என்பர்.

**"கேடு இல் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடு அல்ல மற்றையவை"**

கல்வி ஒன்றே நம்மைக் கடைத் தேற்றும் கலம் என்பதை மாணவச்செல்வங்கள் உணர வேண்டும். அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவதிலும் பார்க்க அங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியமாகும் என்கிறார் மகாகவி பாரதியார்.

இந்த உண்மையை நன்குணர்ந்து வீட்டிலும் நாட்டிலும் கல்விப் பயிர் வளர்ந்திட பணி செய்வதே கற்றறிந்தோர் கடலாகும். இத்தகைய நவராத்திரி விழா தத்துவார்த்த சிந்தனைகளை தருவதோடு சகல ஐஸ்வரியச் சிறப்புக்களையும் தரவல்லது.

நாமும் நல்லவர்களாக வாழ சக்தி விரதமெனப் போற்றப்படும் நவராத்திரி விரதத்தை அனுஷ்டித்து இந்த மண்ணிலே நல்ல வண்ணம் வாழ பிரார்த்திப்போமாக!

கலாவித்தகர்-திருமதி
மலர்விழி.கனகசபை
உதவிக்கல்விப்பணிப்பாளர்(அழகியல்)
தீவக கல்வி வலயம்
வேலணை.

# தமிழ் சினிமா வரலாறு

## அப்பாவின் வாழ்க்கை திறந்த புத்தகம்

**264**

## விஜயசாமுண்டீஸ்வரி பேட்டி

பாப்ஜி அம்மாவைப் பற்றி என்னிக்குமே ரொம்ப நேசத்தோட பாசத்தோட தான் அம்மா பேசுவாங்க. இரண்டு பெண்கள் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கிட்டு, நேசிச்சுக்கிட்டு வாழ்ந்ததில் அப்பா ரொம்ப கொடுத்து வைச்சவர்னு தான் நான் சொல்வேன். இப்பவும் பண்டிகை நாட்களானாலும் சரி நாங்க பாப்ஜி அம்மா அப்பாவுடைய ஆசீர்வாதத்தை வாங்காம இருக்க மாட்டோம்.

**திறந்த புத்தகம்**

அப்பாகிட்டே ஒரு சில குறைகள் இருந்திருக்கலாம். ஆனா புத்திசாலித்தனம் நடிப்புத்திறமை... இதெல்லாம் நிறைய இருக்கு. இயல்பா நடிக்கிறதில அப்பா மன்னன் என்றே சொல்லலாம். சினிமா உலகத்திலும் சரி நிஜவாழ்க்கையிலும் சரி உள்ளதை உள்ளபடி போட்டு உடைக்கும் ஒரு திறந்த புத்தகமாகவே அப்பா வாழ்ந்தார். அவருடைய வாழ்க்கை என்னும் புத்தகத்தில் நாங்களும் ஒரு பக்கம் என்ற பெருமை எங்களுக்கு இருக்கிறது. இவ்வாறு விஜயசாமுண்டீஸ்வரி கூறியுள்ளார்.

**சதீஷ்**

சாவித்திரி மறைவுக்கு முன்பே விஜயசாமுண்டீஸ்வரிக்கு திருமணம் ஆகிவிட்டது. சாவித்திரி இறந்த போது சதீஷ் குழந்தை. ஜெமினிகணேசனும் பாப்ஜியும் தான் வளர்த்தனர். கம்பியூட்டர் என்ஜினியரிங் படித்த சதீஷ் இப்போது நல்ல வேலையில் இருக்கிறார்.

அவர் மனைவி பெயர் பிரசன்னா. இது காதல் திருமணம். தன் காதலியை ஜெமினிகணேசனிடம் சதீஷ் அறிமுகப்படுத்தி வைக்க அவர் மாலையை எடுத்துக் கொடுத்து திருமணத்தை நடத்தி வைத்தார்.

அப்பாவைப் பற்றி சதீஷ் கூறியதாவது, அம்மா என்னை விட்டுப் போனபின் அப்பாவோடு பாப்ஜி அம்மாவோடு இருந்த 1 1/2 வருடத்தில் அப்பாவிடம் புதைந்திருக்கும் அன்பையும் நல்ல குணங்களையும் அணு அணுவாக அனுபவித்துப் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் எனக்குத்தான் கிடைத்தது.

விடியற்காலை 4.30 மணிக்கே எழுந்து தானே சமையல் அறைக்குச் சென்று கோப்பி போடும் அருமையான குடும்பத் தலைவர் அவர். காய்கறி விற்பவரிடம் முருங்கைக் காயா மரமா என்று பேரம் பேசுவார். கறிகாயை பொறுக்கி வாங்குவதில் இருந்து



ஜெமினிகணேசனின் மகன் சதீஷ், தன் மனைவியுடனும், மகனுடனும்.

நறுக்கிச் சமைக்கவும் தெரிந்த அருமையான மனிதர்.

**ஏக்கம்**

அம்மா, அப்பா நடித்த மாயாபஜார், களத்தூர் கண்ணம்மா, மிஸ்ஸியம்மா போன்ற படங்களைப் பார்க்கும் போது அவர்கள் தம்பதிகளாகச் சேர்ந்து வாழ்ந்து சின்னச் சின்ன சண்டைகள் ஊடல்களுக்குப் பிறகு ஒன்று சேர்ந்து வாழ்ந்திருக்கக்கூடாதா அவர்கள் நிஜ வாழ்க்கையில் சேர்ந்து வாழும் காட்சிகளைப் பார்க்கும் சந்தர்ப்பம் இருந்திருக்கக்கூடாதா என்ற ஏக்கம் எனக்கு நிறைய வரும். சினிமாவில் கூட அவர்கள் பிரிந்து சென்று விடும் திரைப்படங்களை என்னால் பார்க்க முடியாது. வெளியிலிருந்து எத்தனை சக்திகள் வந்தாலும் அவர்கள் இரண்டு பேரும் பிரிஞ்சிருக்கக் கூடாது.

அப்பாவுடைய கோபத்தையும் வெறுப்பையும் அநாயாசமாக பாப்ஜி அம்மா கையாளுவதைப் பார்த்து நான் பிரமித்திருக்கிறேன். பாப்ஜி அம்மாவைப்போல சக்தி படைத்தவர் வேறு யாருமே இருக்க முடியாது. அப்பா கோபப்பட்டு அடிக்க கையோங்கும் போது கூட அதற்கு ரியக்ட் பண்ணாமல் ஏதாவது சொல்லிச் சிரிக்க வைத்து அவர் கோபத்தைத் திசை திருப்புவதை நான் கண்ணால் பார்த்து வியந்திருக்கிறேன். இன்றும் என் மனைவிக்கு நான் முன்மாதிரியாகக் காட்டுவது பாப்ஜி அம்மாவைத்தான்.

(தொடரும்)

நல்ல காரியங்களைச் செய்ய ஒருபோதும் பயப்படாதீர்கள். தாமதமின்றி உடனே நல்ல காரியங்களை செய்யுங்கள். - நெப்போலியன் ஹில்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சர்வதேச விசாரணை நடக்காததால் பேரினவாதிகள் கெம்பி எழுகின்றனர்

போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்று கூறுகின்ற அரசியல்வாதிகள் தமிழர்களில் இருக்கின்றார்கள் எனில் தமிழ் மக்களின் தலைவிதியை எப்படி என்று சொல்வது.

கடந்த ஜெனிவா கூட்டத் தொடரில் கலந்து கொண்ட இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஜெனிவாவில் வைத்து,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மின்சார நாற்காலியில் இருந்து காப்பாற்றி விட்டேன் எனப் பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

மின்சார நாற்காலியில் இருந்து மகிந்த ராஜபக்ஷவை காப்பாற்றி விட்டேன் என்று வெளிவிவகார அமைச்சர் கூறியதற்குள் இருக்கக் கூடிய பொருளை எவரும் உணர்ந்து கொள்வர்.

அதாவது வன்னி பெருநிலப்பரப்பில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டிருந்தால், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மின்சார நாற்காலியில் வைத்து தண்டனை வழங்குகின்ற தீர்ப்பு கிடைத்திருக்கும்.

அந்தளவுக்கு போர்க்குற்றம் மிக மோசமாக இடம்பெற்றுள்ளது. இருந்தும் நான் ஜெனிவா கூட்டத் தொடரில் ஆலாவர்ணம் செய்து ஒரு மாதிரியாக எமது நல்லாட்சி அரசை நம்ப வைத்து, சர்வதேச விசாரணையை இல்லாமல் செய்து அல்லது காலம் தாழ்த்தி அல்லது உள்ளக விசாரணை என்பதை வலியுறுத்தியதன் வாயிலாக மின்சார நாற்காலியில் இருக்க வேண்டியவரை பாதுகாத்துள்ளேன் என்பது பொருளாகும்.

இந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் கூறிய மேற்போந்த பொருளைத் தரக்கூடிய கருத்தில் இருந்து இந்த உலகம் ஓர் உண்மையை புரிந்து கொண்டிருக்கும்.

அதாவது இலங்கையில் நடந்த போர்க் குற்றம் என்பது மிகவும் மோசமானது. அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சரே முன்னாள் ஜனாதிபதிக்கு மின்சார நாற்காலியில் வைத்து தண்டனை கிடைக்கும் என நம்பும் அளவில் நிலைமை இருந்துள்ளது என்பதால் வன்னியில் நடந்தது தமிழ் இன அழிப்பு என்பதை உலக நாடுகள் புரிந்து கொண்டிருக்கும்.

நிலைமை இதுவாக இருந்த போதிலும் தமிழ் அரசியல் தலைமையில் இருக்கக்கூடிய ஒரு சில தலைப்பா கட்டிகள் அரசுடன் இணங்கி சர்வதேச விசாரணை தேவையில்லை; இங்கு தமிழின அழிப்பு நடக்கவில்லை; விடுதலைப் புலிகள்தான் முஸ்லிம் மக்களை வட பகுதியில் இருந்து வெளியேற்றி அநியாயம் செய்தனர் என்றவாறு உலகின் காதுகளில் ஓதிவிட, இன்று பேரினவாதிகள் வடக்கின் முதலமைச்சருக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கும் அளவிற்கு வந்துள்ளனர்.

போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடைபெற்றிருக்குமாக இருந்திருந்தால் இன்று பேரினவாதிகள் வாலைச் சுருட்டிக்கொண்டு ஒரு மூலைக்குள் குந்தியிருந்திருப்பார்கள்.

ஆக, தமிழ் இன அழிப்புச் செய்த பேரினவாதிகள் எங்கள் வடக்கின் முதலமைச்சருக்கு எதிராக செயற்படுவதற்கு அடிப்படைக் காரணம் எங்கள் தமிழ் தலைவர்கள் அரசுடன் சேர்ந்து கொண்டு சர்வதேச விசாரணையை வலியுறுத்தாமல் விட்டதே ஆகும்.

இருந்தும் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்பதை வடக்கின் முதல்வர் வலியுறுத்துவதன் காரணமாகவும் அதனையே நாம் வேண்டி நிற்கிறோம் என்பதை தமிழ் மக்கள் பேரணியாகத் திரண்டு எழுந்தபோது ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச விசாரணையை வலியுறுத்த வேண்டியுள்ளது.

இதனால்தான் பேரினவாதிகள் முறுக்கெடுக்க படாப்பாடு படுகின்றனர்.

## சிறுவர் தினம் இன்று

யாழ். நவாலி சென்.பீற்றர்ஸ் றோ.க.த.க. பாடசாலையின் சிறுவர் தினமும் சிறுவர் மகிழ் முற்றம் திறப்பு விழாவும் இன்று முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாடசாலை வளாகத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர் க.ஸ்ரீநந்தகோபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கலந்து கொள்ள வுள்ளார்.

• • • • • • • • • • • • •

யாழ். நீர்வேலி சி.சி.த.க. பாட சாலையின் சிறுவர் தின நிகழ்வு இன்று முதலாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் தி.இரவீந்திர நாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணப் பொலிஸ் அத்தியட்சகர் த.கணேசநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3-136)

## உதயங்க வீரதுங்கவின் சிவப்பு பிடியாணை கோரிக்கை 2 ஆவது முறையும் நிராகரிப்பு

(கொழும்பு)

ரஷ்யாவின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு சிவப்பு பிடியாணை பிறப்பிக்குமாறு நீதிமன்றிடம் இரகசிய பொலிஸார் முன்வைத்த கோரிக்கையானது நீதவானால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு 14 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மிக் விமானக் கொள்வனவு கொடுக்கல்-வாங்கல் தொடர்பாக உதயங்க வீரதுங்கவை கைது செய்வதற்கு சிவப்பு பிடியாணை பிறப்பிக்குமாறு இரகசியப் பொலிஸார் கோட்டை நீதவான் நீதிமன்றில் கோரிக்கைவிடுத்தனர்.

எனினும் நீதவான் லங்கா ஜயரத்ன நேற்று இரண்டாவது தடவையாகவும் குறித்த கோரிக்கையினை நிராகரித்துள்ளார்.

இதேவேளை முன்னாள் ரஷ்யாவிற்கான தூதுவர் குறித்த வழக்கின் குற்றவாளியாக இன்னும் குறிப்பிடப்படாத போது அவருக்கு பிடியாணை பிறப்பிப்பதானது சட்டக்கொள்கைகளுக்கு முரணானது எனவும் நீதவான் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தற்போது தங்கியுள்ள நாட்டின் முகவரியைத் தெரிந்து அதற்கு தபால்மூலம் அறிவிப்பு அனுப்புமாறும் நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## சர்வதேச முதியோர் தினமும் முதியோர் மாதாந்த ஒன்றுகூடலும்

வடபிராந்திய மூத்தோர் அவை, இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகம், வடமாகாண ஓய்வூதியர் சங்கங்கள், யாழ்ப்பாணம் நீரிழிவுக் கழகம் என்பன ஒன்றிணைந்து நடத்தும் சர்வதேச முதியோர் தினமும் முதியோர் மாதாந்த ஒன்றுகூடலும் இன்று முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இல. 161, முதலாம் குறுக்குத்தெரு,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ். சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் முதியோர் எனும் 10 ஆவது சஞ்சிகை வெளியீடு இடம்பெறும்.

இந்நிகழ்வில் சிறப்புரையினை வடபிராந்திய மூத்தோர் அவை போஷகர் ரீ.கனகராஜாவும் சிறப்புரைகளை ஸ்ரீராம்சுந்தர் மிஷன் இணைப் பாளர் சீ.சுந்தரமூர்த்தி, யாழ்ப்பாணம் தாதியர்கல்லூரிப் போதனாசிரியர் கே.நந்தகுமார், உடல், உள, சமூக, ஆன்மீக மேம்பாடு வழிகாட்டுநர், சுகவாழ்க்கை பத்திரிகை ஆசிரியர் கா.வைதீஸ்வரன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (இ-3)

## கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் அறநெறிப்பாடசாலை ஆரம்ப நிகழ்வு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்து சமய அறநெறிக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாடசாலைகளினூடாக இந்து சமய அறநெறிக்கல்வியை ஊக்கப்படுத்தும் நோக்கில் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தினால் தொடங்கவுள்ள கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் அறநெறிப்பாடசாலை ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையினை யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் வழங்கவுள்ளார்.சிறப்பு விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் அறநெறிப் பாடசாலையை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். (இ-3)

## மகாகவியின் ‘புதியதொரு வீடு’ நாடகம் நாளை மேடையேற்றம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் மகாகவியின் புதியதொரு வீடு நாடகம் நாளை ஞாயிற்றுக்கிழமை இரண்டு காட்சிகளாக முற்பகல் 10.30 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இலக்கம் 286 பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையக மண்டபத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

1969 ஆம் ஆண்டு மகாகவியினால் எழுதப்பட்ட மேற்படி நாடகம் முதன் முதலாக அ. தாசீசியசினால் 1971 ஆம் ஆண்டு கொழும்பில் மேடையேற்றப்பட்டது. அதன்பின் பலதடவைகள் பல நெறியாளர்களினால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றங் கண்டதெனபது குறிப்பிடத்தக்கது.


1999 ஆம் ஆண்டு கொழும்பு திருமறைக் கலா மன்றத்தினாலும் தயாரிக் கப்பட்டு மேடையேற்றப்பட்ட இந்நாடகம் தற்போது மிக நீண்ட காலத்தின் பின் மீண்டும் யாழ்.திருமறைக் கலா மன்றத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

மகாகவியின் கவிதை நாடகமாகிய இந்நாடகம் மீனவ கிராமமொன்றின் கதை மாந்தரினையும் கடலோடு தொடர்புடையதாக அவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வின் சவால்களையும் வெளிப்படுத்துகின்றது. இந்நாடகம் க.பொ.த. சாதாரண தரத்தில் நாடகமும் அரங்கியலுக்குமான புதிய பாடத்திட்டத்தில் ஒரு பாடநூலாகச் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து 6மணி வரை யாழ்.பிரதேசத்தில ஐயனார் கோவிலடி, தச்சன் தோப்பு, கோகிலாக்கண்டி, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, வில்லூன்றி கேணியடி, நாவாந்துறை ஒருபகுதி, முத்தமிழ் வீதி, மீனாட்சி அம்மன் கோவலடி, சுன்னாகம் பெரிய மதவடி, மருதனார்மடம், உடுவில், வட்டுக்கோட்டை, அராலி, யாழ். சிறைச் சாலை, யாழ்.பொலிஸ் நிலையம், யாழ். துரையப்பா விளையாட்டரங்கு, மருதனார்மடம்- யாழ் நுண்கலைப்பீடம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில ஆனந்தபுரம்,உதயநகர், தொண்டமான்நகர், விவேகானந்தநகர், கிருஸ்ணபுரம், கனகாம்பிகைக்குளம், இரணைமடு, முறிகண்டி, அறிவியல்நகர், கொக்காவில், விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்ரெட், மத்திய வங்கி, இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம், MAS Active, யுனிச்செலா, பொறியியல் பீடம், விவசாயபீடம், North Cargill's Argo foods, இராணுவ பாசறை I மற்றும் II, இராணுவ பாசறை, 7வது படையணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கைத் தொலைத்தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில பெரியார் குளத்திலும் (பூந்தோட்டம்) மன்னார் பிரதேசத்தில் நானாட்டான், எருவிட்டான், அறுகுக் குன்று, அச்சங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்




❖ தானத்தைவிட உயர்ந்த நன்மை வேறொன்றில்லை. யாருடைய கை வாங்குவதற்காக நீளுமோ அவன் மிகத் தாழ்ந்தவன். எவனது கை கொடுப்பதற்காக முன் செல்லுமோ அவன் மிக உயர்ந்தவன். கையைப் படைத்தது எப்போதும் கொடுப்பதற்கே. நீ பட்டினி கிடப்பதாயினும் உன்னிடமுள்ள கடைசிக் கவள உணவையும் கொடுத்து விடு. பிறருக்குக் கொடுப்பதனால் நீ உணவின்றி இறந்தால் அப்போது நீ விடுதலை பெறுவாய். உடனே நீ பூரணமடைவாய். நீ தெய்வமாவாய்.

❖ புகழை யார் பொருட்படுத்துவது? அதனை விட்டொழி. பசித்த வாய்க்கு உணவுக் கவளங்களை எடுத்துச் செல்லும் முயற்சியில் புகழும் உடமையும் அனைத்தும் அழிவதானாலும் மும்மடங்கு பெறுபெற்றவன் ஆவாய். வெல்வது அன்பே. அன்பே ஒன்றே. அறிவல்ல. நூலும் அறிவும் யோகமும் தியானமும் ஆன்மீக ஒளியும் அன்போடு ஒப்பிடும்போது அனைத்தும் மண்ணாகும்.

❖ செல்வந்தர்களை வழிபடத் தொடங்கும் நாள் முதலே ஒரு சமயத்தின் கேடு ஆரம்பிக்கிறது.

# தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவி கோலூன்றிப் பாய்தலில் புதிய சாதனை









யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவி ஜே.அனித்தா கோலூன்றிப் பாய்தலில் புதிய தேசிய சாதனையை படைத்துள்ளார்.

அனித்தா சேர்.ஜோன் டாபட் சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் படைத்திருந்த தேசிய சாதனையை தானே முறியடித்துள்ளார்.

இவர் சேர்.ஜோன் டாபட் சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் 3.35 மீற்றர் உயரத்திற்கு கோலூன்றிப் பாய்ந்து சாதனை நிலைநாட்டியிருந்த நிலையில் நேற்று நடைபெற்ற 42 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் 3.41 மீற்றர் உயரம் பாய்ந்து சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

42 ஆவது தேசிய மட்ட விளையாட்டுப்போட்டி நேற்று முன்தினம் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் முதல் முதலாக யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

நேற்று நடைபெற்ற போட்டிகளில் வடக்கிற்கு கிடைத்த முதலாவது தங்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## முக்கோண வெற்றிக்கிண்ண கிரிக்கெட் யாழ்.பல்கலைக்கழக கே.சி.சி.சி.பலப்பரீட்சை






முக்கோண வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2 ஆவது ஆண்டாக நடத்தும் 50 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியாகும். இச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றும் கழகங்கள், யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலில் முதல் மூன்று அணிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவையாவன, யாழ்.பல்கலைக் கழக அணி, ஜொலிஸ்ரார் அணி, கே.சி.சி.சி. அணி இச் சுற்றுப் போட்டியின் முதலாவது போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி, ஜொலிஸ்ரார் அணியை 3 இலக்குகளாலும் 2 ஆவது போட்டியில் கே.சி.சி.சி. அணி ஜொலிஸ்ரார் அணியை 66 ஓட்டங்களாலும் 3 ஆவது போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி கே.சி.சி.சி. அணியை 8 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றுள்ளன.

இச்சுற்றுப்போட்டியில் இரு அணிகளை வென்றயாழ். பல்கலைக்கழக அணியும் ஒரு போட்டியில் வெற்றி கொண்ட கே.சி.சி.சி. அணியும் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்விரு அணிகளும் தற்போதைய தரவரிசை (2016) பட்டியலில் கே.சி.சி.சி.அணி முதலாம் இடத்தையும் யாழ்.பல்கலைக்கழக அணி 7 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. முதலாம் வருடம் மேற்படி வெற்றிக் கிண்ணத்தை ஜொலிஸ்ரார் அணி பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி இறுதிப்போட்டி 02.10.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (கு)

## 42 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் புதிய தேசிய சாதனை

42 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் முதலாவது நாளான நேற்று மகளிருக்கான குண்டெறிதல் போட்டியில் தேசிய மட்ட சாதனை புதுப்பிக்கப்பட்டது.

மேல் மாகாணத்தின் தாரிகா குமுதுமாலி மகளிருக்கான குண்டெறிதல் போட்டியில் இந்த சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

42 ஆவது தேசிய விளையாட்டு விழா நேற்று முன்தினம் சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியது. (கு)



## கொத்மலை சொக்ஸ் கால்பந்தாட்டம் அரையிறுதியில் புனித ஹென்றியரசர்





19 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான கொத்மலை சொக்ஸ் கால்பந்தாட்ட சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் (செ.29) இடம்பெற்ற மூன்றாவது காலிறுதியில் நீர்கொழும்பு மரிஸ் ஸ்டெல்லா கல்லூரி அணியை 2.0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி கொண்டதன் மூலம் யாழ்ப்பாணம் புனித ஹென்றியரசர் கல்லூரி அணி அரையிறுதியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

ஏற்கனவே இடம்பெற்று முடிந்த குழு மட்டத்திலான முதல் சுற்றுப் போட்டிகளில் குழு ஏ யில் போட்டியிட்ட யாழ்ப்பாணம் புனித ஹென்றியரசர் கல்லூரி அணி தாம் விளையாடிய ஆறு போட்டிகளிலும் வெற்றி பெற்று குழு நிலையில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டது. அதேபோன்று கடந்த முறை இடம்பெற்ற கொத்மலை சொக்ஸ் தொடரின் சம்பியனாக வந்த அணியாகவும் இவ்வணி உள்ளது. எனவே இவ்வணி சுற்றுத் தொடரில் உள்ள மிகவும் பலம் வாய்ந்த ஒரு அணியாகவே கருதப்பட்டது.

அதேபோன்று குழு டி யில் போட்டியிட்ட நீர்கொழும்பு மரிஸ் ஸ்டெல்லா கல்லூரி அணி தாம் விளையாடிய ஆறு போட்டிகளில் நான்கில் வெற்றி பெற்று ஒரு போட்டியில் தோல்வியடைந்தும் ஒரு சம நிலையான முடிவுடனும் குழு மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

அதன்படி குழு ஏ யில் இருந்து தெரிவாகிய புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும் குழு டி யில் இருந்து தெரிவாகிய மரிஸ் ஸ்டெல்லா கல்லூரி அணியும் காலிறுதியில் மோதிக் கொண்டன. இந்தப் போட்டி ஏற்கனவே முதல் இரண்டு காலிறுதி போட்டிகளும் இடம்பெற்ற கொழும்பு சிட்டி லீக் கால் பந்து மைதானத்தில் இடம்பெற்றது.

போட்டி ஆரம்பித்தது முதலே புனித ஹென்றியரசர் கல்லூரி அணியினர் சிறந்த முறையில் தமது திறமையை வெளிப்படுத்தினர். போட்டியின் 9ஆவது நிமிடத்தில் அவ்வணியின் முக்கிய வீரராகக் கருதப்படும் ஜட் சுபன் தனது அணிக்கான முதல் கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

அதனைத் தொடர்ந்து 17 ஆவது நிமிடத்தில் அவ்வணியின் மற்றொரு வீரரான அனோஜன் இரண்டாவது கோலைப் பெற்றுக்கொடுக்க புனித ஹென்றியரசர் கல்லூரி அணி முதல் 20 நிமிடங்களிலேயே 2.0 என்று முன்னிலை பெற்றது. அதன் பின்னரும் அவ்வணி முதல் கோல் பெறுவதற்கான வாய்ப்புக்களை பெற்றாலும் அந்த வாய்ப்புக்கள் சிறந்த முறையில் நிறைவு செய்யப்படவில்லை .

முதல் பாதியில் புனித ஹென்றியரசர் கல்லூரி அணியினரின் பலமே அதிகமாக இருந்தமையினால் மரிஸ் ஸ்டெல்லா கல்லூரி அணி வீரர்களுக்கு பந்தைத் தமது கால்களில் வைத்துக்கொள்வதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே கிடைத்தது.

பின்னர் ஆரம்பமாகிய இரண்டாவது பாதியில் மரிஸ் ஸ்டெல்லா கல்லூரி அணியினரின் ஆதிக்கம் முதல் பாதியை விட சற்று அதிகரித்தது. இரண்டாவது பாதியில் இரு அணியினரும் சம அளவில் மோதிக் கொண்டனர்.

இதில் இரு அணிகளுக்கும் பல கோணர் வாய்ப்புக்கள் கிடைத்த போதும் கோல்காப்பாளர்கள் மற்றும் பின்கள வீரர்களின் சிறந்த ஆட்டத்தினால் எந்தவித கோல்களும் யாராலும் பெறப்படவில்லை. எனினும் போட்டியின் இறுதி 30 நிமிடங்கள் மிகவும் விறுவிறுப்பாகவே சென்றது.

எனினும் முதல் பாதியில் பெறப்பட்ட கோல்கள் இரண்டும் மாத்திரமே போட்டியில் பெறப்பட்ட மொத்தக் கோல்களாக இருந்தன.

இப் போட்டியின் சிறந்த வீரர்- அன்டனி ரமேஷ் (புனித ஹென்றியரசர் கல்லூரி. (கு)

# சார்க் மாநாட்டில் பங்கேற்பது குறித்து ஜனாதிபதி மைத்திரி கடும் ஆலோசனை

(கொழும்பு)

சார்க் மாநாட்டைப் புறக்கணிப்பதாக இந்தியா எடுத்துள்ள தீர்மானத்துக்கமைய மேலும் மூன்று தெற்காசிய நாடுகளும் மாநாட்டைப் புறக்கணிப்பதாக அறிவித்துள்ள நிலையில், இந்த மாநாட்டில் பங்கேற்பது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் ஆலோசனைகளில் ஈடுபட்டுவருவதாக அறிய முடிகின்றது.

காஷ்மீர் விவகாரத்தால் பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் இடையில் இடம் பெற்று வரும் கடும் சொற்போரால், எதிர்வரும் நவம்பர் மாதம் 9, 10ஆம் திகதிகளில் இஸ்லாமாபாத்தில் நடைபெறவுள்ள 19ஆவது சார்க் மாநாட்டை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி புறக்கணிப்பதாக புதுடில்லி அறிவித்திருந்தது.

இந்தியாவின் இந்த முடிவையடுத்து, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், பூட்டான் ஆகிய மூன்று நாடுகளும் இந்த மாநாட்டைப் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளன. இதனால், 19ஆவது சார்க் உச்சி மாநாடு நடைபெறுமா? என்ற கேள்வியும் சந்தேகமும் தெற்காசிய பிராந்தியத்தில் எழுந்துள்ளது.

எட்டு நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட சார்க் அமைப்பில் இலங்கை, பாகிஸ்தான், நேபாளம், மாலைதீவு ஆகிய நான்கு நாடுகளும் மாநாடு குறித்த தங்களின் முடிவை இன்னும் அறிவிக்கவில்லை.

இந்நிலையில் இந்திய-பாகிஸ்தான் மோதலால் சார்க் உச்சி மாநாடு தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைக்குரிய நிலைமை குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர்மட்ட குழுவினருடன் ஆராய்ந்து வருவதாக அறிய முடிகின்றது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதாயின் இலங்கை, பாகிஸ்தான், மாலைதீவு, நேபாளம் ஆகிய நாடுகளே கலந்து கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

இந்தியா மாநாட்டை புறக்கணித்தமையானது நேபாளம், இலங்கை போன்ற நாடுகளுக்கும் கடும் நெருக்கடியாகியுள்ளது. இந்தியா அழுத்தம் கொடுக்கும் பட்சத்தில் ஏனைய நாடுகளும் மாநாட்டை புறக்கணிக்கும் சூழல அதிகமாகவே காணப்படுகின்றது.

நியூஸிலாந்து விஜயத்தின் பின்னர் நாளை மறுதினம் 3ஆம் திகதி இந்தியா செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சார்க் மாநாடு மற்றும் இந்திய-பாகிஸ்தான் மோதல் நிலைமை குறித்தும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் கலந்துரையாடுவார் என்றும் அரச தரப்பு வட்டாரங்களில் அறியமுடி கிறது.

1985ஆம் ஆண்டு இந்தியாவின் முயற்சியில் ஆறு நாடுகளின் கூட்டணியுடன் சார்க் அமைப்பு உருவாக்கப்பட்டது.

முதல் உறுப்பு நாடுகளாக இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய நாடுகள் அங்கம் வகித்தன.

பின்னர் பங்களாதேஷ் மற்றும் 2007ஆம ஆண்டு நடைபெற்ற 14ஆவது உச்சிமாநாட்டில் ஆப்கானிஸ்தானும் இணைந்து கொண்டது.

தற்போது சீனாவும் சார்க் அமைப்பில் இணைந்து கொள்வது தொடர்பில் தமது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது.

ஐ.நாவின் நிர்வாக கட்டமைப்பு போன்று சார்க் அமைப்புக்கு ஒரு நிர்வாக கட்டமைப்பு உண்டு. ஆரம்பகாலங்களில் ஒரு வருடத்திற்கு ஒருமுறை கூடிய சார்க் அமைப்பு தற்போது இரண்டு வருடங்களுக்கு ஒருமுறையே கூடுகின்றது. சார்க் உச்சிமாநாட்டில் தென்னாசிய நாடுகளின் அரசியல், பொருளாதார, சமூக விடயங்கள் தொடர்பில் தீர்க்கமாக கலந்துரையாடி இணக் கப்பாடுகள் எட்டப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுவது வழக்கமாகும்.

இம்முறை சார்க் மாநாடு பாகிஸ தானில் நடத்துவதற்கு 2014ஆம் ஆண்டு நேபாள தலைநகர் காத்மண்டில் நடைபெற்ற மாநாட்டின் போது தீர்மானிக்கப்பட்ட போது, ஏனைய அங்கத்துவ நாடுகளும் இணக்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-5)

## நிக்கவரெட்டியவில் திடீர் நில அதிர்வு

நிக்கவரெட்டிய, திவ்லெபிட்டிய மற்றும் இஹலகை ஆகிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு திடீர் நில நடுக்கம் ஒன்று உணரப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினமிரவு 9 மணிக்கும் 9.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இவ்வாறு நில நடுக்கம் உணர்ப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது வீடுகளில் இருந்த தளபாடங்கள் ஆடியதாகவும், மின்சாரம் நிறுத்தப்பட்டு மீண்டும் வழமைக்கு திரும்பியதாகவும் பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரையில் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் காலியிலும் இவ்வாறு நிலநடுக்கம் உணரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-5)

## யுத்தத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும்

### சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதுடன் நாட்டில் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற நிலையில் இன்றைய தினத்தில் இதற்கான உறுதிமொழியினை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சிறுவர் தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சர்வதேச சிறுவர் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. தேசிய சிறுவர் தின வைபவமானது இன்று காலை 9.30 மணிக்கு கேகாலை சென். ஜோசப் மகளிர் கல்லூரி மண்டபத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறுகின்றது.

இன்றைய தினமானது சிறுவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்படும் ஒரு நிகழ்வாகும். எமது நாட்டைப் பொறுத்தவரையில் சிறுவர்கள் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று தசாப்தகாலமாக இடம்பெற்ற யுத்தத்தில் சிறுவர்கள் பெரும் பாதிப்பை சந்தித்திருந்தனர். இறுதி யுத்தத்தின் போது ஆயிரக்கணக்கான சிறுவர்கள் அநாதரவாக்கப்பட்டனர். வடக்கு, கிழக்கில் யுத்தத்தினால் தாய், தந்தையரை இழந்த 9 ஆயிரம் சிறுவர்கள் சிறுவர் இல்லங்களிலும், காப்பகங்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

பெருமளவான சிறுவர்கள் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். பெருமளவானோர் அங்கவீனர்களாகியுள்ளனர். உடல்களில் ஷெல் துகள்களை சுமந்தவண்ணம் சிறுவர்கள் வடக்கு, கிழக்கில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான சிறுவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பவேண்டியது எமது கடமையாக உள்ளது. இதற்காக எமது அமைச்சின் மூலமும் அரசாங்கத்தின் மூலமும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியுள்ளது

இதேபோல் வடக்கு, கிழக்கில் பாலியல் ரீதியிலான துன்புறுத்தலினால் பெருமளவான சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இவ்வாறான பாதிப்புக்களிலிருந்து அவர்களை மீட்கவேண்டியுள்ளது. பாடசாலைகளில் கூட பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வருகின்றமை கவலையளிக்கும் விடயங்களாக உள்ளன.



இவ்வாறு பாதிக்கப்படும் சிறுவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் பாதிப்புக்களிலிருந்து அவர்களை மீளச் செய்வதற்கும் நாம் இன்றைய தினத்தில் உறுதி பூணவேண்டும். உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு அவர்களுக்கு ஏற்ற சிகிச்சைகள் வழங்கப்படவேண்டும். இவ்விடயம் குறித்தும் நாம் அவதானம் செலுத்தி வருகின்றோம்.

எதிர்காலத்தில் சிறுவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியுள்ளது. இதற்கான உறுதியினை நாம் எடுத்துக்கொள்வோம் என இராஜாங்க அமைச்சர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ)

## புதையல் வதந்தி

மன்னார் - செல்வநகர் கிராமத்திலுள்ள தனியார் ஒருவரின் வீட்டில் புதையல் இருப்பதாக எழுந்த வதந்தியை அடுத்து நேற்று மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஆசீர்வாதம் கிரேசியன் அலெக்ஸ்ராஜா தலைமையில் குறித்த இடம் தோண்டப்பட்டது.

இதற்கமைய பத்து அடி ஆழத்திற்கு தோண்டப்பட்ட போதிலும் அங்கு எந்தப் பொருட்களும் கைப்பற்றப்படவில்லை.

மன்னார் நீதவான் முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை 12 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட புதையல் தோண்டும் நடவடிக்கை பிற்பகல் 2.30 அளவில் 10 அடி ஆழம் தோண்டப்பட்டபோதும் எந்தவித பொருட்களும் மீட்கப்படாத நிலையில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

தமது வீட்டில் புதையல் இருப்பதாக எழுந்த வதந்தியை அடுத்து இரவு வேளைகளில் தமது வீட்டிற்கு புதையல் தோண்டுவதற்காக இனம் தெரியாத பலர் வருகைதந்து தொந்தரவு செய்வதாக வீட்டு உரிமையாளர் கடந்த 27 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அத்துடன், தமது வீட்டில் உள்ள புதையலை தோண்டுவதற்கு அனுமதி வழங்குமாறு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாகவும் குறித்த ஆசிரியர் நீதிபதியிடம் முறையிட்டிருந்தார். தொடர்ச்சியாக நீடித்த அச்சுறுத்தல் காரணமாக செல்வநகர் கிராமத்தில் இருந்து வெளியேறிய நிருபாகரன் மற்றும் அவரது குடும்பத்தினர் மன்னார் நீதிமன்றத்தின் அழைப்பின்பேரில் நேற்றுக் காலை தமது சொந்த கிராமத்திற்கு வருகைதந்திருந்தர்.

தொல்பொருள், தடயவியல் அதிகாரிகள், செல்வநகர் கிராமசேவகர், நகரசபை அதிகாரிகள், சட்டத்தரணிகள் மற்றும் பொது மக்கள் என பலர் புதையல் தோண்டும் இடத்தில் பிரசன்னமாகியிருந்த நிலையிலேயே இந்த தோண்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-281)

## உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக

# சர்வதேச பிடியாணை பிறப்பிக்க கொழும்பு நீதிமன்றம் மறுப்பு!



(கொழும்பு)

ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவை சர்வதேச பொலிஸார் ஊடாக கைது செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு கோட்டை நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை நிராகரித்துள்ளது.

இலங்கை விமானப்படைக்கு மிக் விமானங்களைக் கொள்வனவு செய்த கொடுக்கல், வாங்கல்களில் ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க நேரடி தொடர்புபட்டுள்ளார் என்று நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு கடந்த 26ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடாக உக்ரைனில் அவர் தாங்கியுள்ள வீட்டுக்கு அறிவுறுத்தல் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், அவர் வீட்டில் இருக்கவில்லை என உக்ரைன் அதிகாரிகள் கூறியுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், சர்வதேச பொலிஸாரின் ஊடாக அவரை கைது செய்ய திறந்த பிடியாணை பிறப்பிக்குமாறு இலங்கையின் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்திடம் அன்றைய தினம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந் நிலையில், இந்தக் கோரிக்கை தொடர்பான விசாரணை நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, நிதி மோசடி விசாரணைப் பிரிவினரின் கோரிக்கையை நீதிபதி நிராகரித்துள்ளார்.

இலங்கையின் நிதிக் குற்றப்புலனாய்வு பிரிவினரால் உதயங்க வீரதுங்க சந்தேக நபராக பெயரிடாத நிலையில் அவருக்கு பிடியாணை பிறப்பிக்கும் கோரிக்கை நிராகரிக்கப்படுவதாக இதன்போது நீதிபதி தெரிவித்தார்.

2006ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை உதயங்க வீரதுங்க ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவராக கடமையாற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# கோத்தபாய உள்ளிட்ட 7 பேரு...

தன் மூலம் அரசாங்கத்திற்கு சுமார் 11.4 பில்லியன் ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தியதாக ஊழல் விசாரணை ஆணைக்குழு அளித்த குற்றச்சாட்டின் கீழ் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் மூன்று முன்னாள் கடற்படை தளபதிகள் உட்பட எட்டு பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று அழைக்கப்பட்ட போது கருத்து தெரிவித்த கோத்தபாய ராஜபக்ஷ தரப்பின் வழக்கறிஞர், ஊழல் விசாரணை ஆணைக்குழு முறையாக இந்த வழக்கை தாக்கல் செய்ய தவறியுள்ள காரணத்தினால் சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால் அந்த வேண்டுகோளை நிராகரித்த நீதிபதி கோத்தபாய ராஜபக்ஷ உட்பட 7 சந்தேக நபர்களை இருபது மில்லியன் ரூபாய் சரீர பிணையின் கீழ் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களின் வெளிநாட்டு பயணங்களை தடை செய்த நீதிபதி, விசாரணை எதிர்வரும் மூன்றாம் தேதி நடத்தப்படுமென்று அறிவித்தார்.

வழக்கு விசாரணை முடிவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கோத்தபாய ராஜபக்ஷ , யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவர உதவிய மூன்று கடற்படை தளபதிகள் இன்று (நேற்று) நீதிமன்ற சிறைக் கூடத்தில் சில மணி நேரங்கள் தடுத்து வைக்கப்பட்டதாக குற்றம்சாட்டினார். (செ-11)

# அடங்கி இருந்...

பிரசன்னம்மாகியிருந்தார்.

முன்னதாக சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்ட கோத்தபாய ராஜபக்ச நீதிமன்ற வளாகத்தில் கூடியிருந்த ஊடகவியலாளர்களுக்கும் கருத்துக்களை வெளியிட்டார்.

யுத்தத்திற்கு பின்னர் ஐந்து வருடங்கள் ஆட்சி செய்தோம். எனினும் வட மாகாணத்தில் இருந்து ஒரு இனவாத வார்த்தைக்கூட வரவில்லை. இன்று அவர்களுக்கு என்ன வேண்டுமோ கூற முடியும். இது சரியா பிழையா என்பது தொடர்பில் அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும். தெற்கிலுள்ளவர்கள் இவ்வாறான கோரிக்கைகளை முன்வைக்கும்போது அவர்களை இனவாதிகள் என அரசாங்கம் அடையாளப்படுத்துகின்றது.

அவ்வாறெனின் தெற்கிலுள்ளவர்களுக்கு எதிராக மாத்திரமா சட்டம்செயற்படுகின்றது என்ற கேள்வி எழுகிறது. வட மாகாணத்தில் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டாமென கோரிக்கைகள் விடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தேர்தலை நடத்தினோம். அதற்கமையவே சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சராக தெரிவானார். முன்னாள் நீதியரசராக இருந்த ஒருவர் விடுத்துள்ள கருத்துக்கள் தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த வழக்கு விசாரணைகளை அவதானிக்கும் பொருட்டு நீதிமன்ற வளாகத்திற்கு வருகைத் தந்திருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வட மாகாண முதலமைச்சர் மற்றும் நல்லாட்சி அரசாங்கம் தொடர்பபில் கருத்து வெளியிட்டார்.

வழக்குகளுடன் தொடர்புடையவர் களின் தொலைபேசி அழைப்புகளை பதிவு செய்கிறார்கள். இது எங்காவது நடைபெற்றிருக்கின்றதா? என்னுடைய தொலைபேசி அழைப்புக்களையும் பதிவு செய்திருக்கிறார்கள் அது எனக்குத் தெரியும். அது தொடர்பில் எனக்கு கவலையில்லை. இந்த நாட்டின் ஜனநாயகம் எங்கு் செல்கிறது. அரசியல்வாதிகள். அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைவரும் இன்று நீதிமன்றில் இருக்கின்றனர்.

மக்கள் ஒரு தீர்ப்பை வழங்கினர். அதன் பின்னர் இவர்களால் எந்தவொரு வேலையையும் செய்ய முடியவில்லை. அவர்கள் வாழ வேண்டு மல்லவா? அரசாங்கத்தை கொண்டு நடத்த பழைய விடயங்களை கிளறிவிட்டு மக்களின் மனங்களை மாற்றியமைக்க முயற்சிக்கின்றனர். வடக்கை பாருங்கள் சி.வி.விக்னேஸ்வரன் இதுவரை எதனையும் செய்யவில்லை.

ஆகவே குறறச்சாட்டுகள் எழுந்தன அதனை மறைக்க இனவாதத்தை தூண்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்து பேரணியை நடத்துகின்றார். அரசாங்கமும் இணைந்தே அந்த பணியை முன்னெடுத்துள்ளது.

ஆனால் எங்களது ஆட்சியில் நாங்கள் வடக்கில் இவ்வாறான இனவாத கருத்துக்களை யாரும் வெளியிட முடியாத வகையில் ஆட்சி நடத்தினோம்.

இன்று எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது என மகிந்த ராஜபக்ஷ தனது கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். (செ-9,11)


**வீட்டுப்பணிப்பெண் தேவை**

திருநெல்வேலிப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய சொந்தப் பொறுப்புக்களற்ற வீட்டுப்பணிப்பெண் தேவை

தொடர்பு :-

070 220 2206


# வடக்கு முதல...

எனவே, வடக்கின் முதல்வராக விக்னேஸ்வரன் இருக்கும்வரை தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என்பதால், அவரை வடக்கில் நாங்கள் எதிர்க்க; தெற்கில் நீங்கள் எதிர்த்தால் அவரை பதவியிலிருந்து இறக்க முடியும் என்ற எழுதப்படாத ஒப்பந்தத்தின் கீழ் வடக்கின் முதல்வருக்கு எதிராகக் கண்டனங்கள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

இதேவேளை வடக்கின் முதல்வருக்கு எதிராகப் பேரினவாதிகள் மேற்கொள்ளும் கண்டனங்கள் தமிழ் மக்கள் மீதான கரிசனையை சர்வதேச ரீதியில் அதிகரிக்கும் என தென்பகுதிப் புத்திஜீவிகள் கருத்து வெளியிட்டிருப்பதாகவும் அறிய முடிகிறது. (செ)

# விக்னேஸ்வரனுக்கு எதிராக...

வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இனவாதத்தை தூண்டியிருப்பதாகத் தெரிவித்து அவருக்கு எதிராக பௌத்த கடும்போக்குவாதிகளால் கண்டனப் போராட்டமொன்று நேற்று வெள்ளிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றுள்ளது.

வவுனியா மாவட்டத்தின் எல்லைப்புறமாகிய போகஸ்வெல பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான சிங்கள மக்களுடன், பொதுபலசேனா, இராவண பலய உள்ளிட்ட பௌத்த கடும்போக்கு அமைப்புக்களைச்சேர்ந்த பௌத்த மத குருக்களும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

எழுகதமிழ்பேரணி நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அங்கு ஆற்றிய உரையைக் கண்டித்து இந்தப் போராட்டத்தில் கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் பதாதைகளும், சுலோக அட்டைகளும் ஏந்திச் செல்லப்பட்டன.

இனவாதக் கருத்துக்களை விக்னேஸ்வரன் தனது உரையில் வெளியிட்டதாகக் குற்றம் சாட்டிய போராட்டத்தில் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், எழுக தமிழ் பேரணியை ஒழுங்கு செய்தவர்கள், அதில் கலந்து கொண்டவர்கள் உள்ளிட்ட அனைவரையும் கைது செய்ய வேண்டும் எனவும் இந்தக் கண்டனப் போராட்டத்தில் கோரிக்கை வைத்துள்ளனர்.

வவுனியா ஹொரவப்பொத்தான வீதியில் ஆரம்பமாகிய இந்தப் போராட்டம் பொலிஸாரின் பலத்தப் பாதுகாப்புக்கு மத்தியில் நகர வீதிகள் வழியாக நகர்ந்து அரச செயலகத்தைச் சென்றடைந்து ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்கு எழுதப்பட்ட மனுவை கையளித்தப் பிறகு முடிவடைந்தது.

நல்லிணக்கத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள வேளையில் சிங்கள மக்களை வடக்கில் அத்துமீறி குடியேற்றக்கூடாது. புத்தர் சிலைகளை தேவையின்றி நிறுவக்கூடாது, பௌத்த விகாரைகளை அனுமதியின்றி அமைக்கக் கூடாது என கருத்துக்களை பேரணி நிகழ்வில் அவர் வெளியிட்டதன் மூலம் நாட்டில் இனவாதத்தை தூண்டியிருப்பதாக இந்தக் கண்டனப் போராட்டத்தில் உரையாற்றிய பொது பல சேன அமைப்பின் செயலர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

இத்தகைய இனவாதக் கருத்துக்களை பெரும்பான்மை இன மக்களுக்கு எதிராகத் தொடர்ந்தும் தெரிவிப்பாரானால் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசியமைப்பில் முதலிடம் வழங்கப்பட்டுள்ள பௌத்த மதத்திற்கு விரோதமான கருத்துக்களை வெளியிட்டுள்ள விக்னேஸ்வரனுக்கு எதிராக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஞானசார தேரர் கோரிக்கை வைத்துள்ளார். (செ-250)

# பயங்கரவாத தடையை நீக்குமாறு அழுத்தம்!

(கொழும்பு)

இலங்கையில் தற்போது அமுலிலுள்ள பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்குவது தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு, நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ அழுத்தம் கொடுக்க வேண்டும் என நியூசிலாந்து சர்வதேச மன்னிப்புச் சபையின் நிரவாக பணிப்பாளர் கிராண்ட் பேல்டன் வலியுறுத்தி உள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர், இலங்கையின் மனித உரிமை செயற்பாடுகளில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதனை நாம் வரவேற்கிறோம்.

ஆனால், இலங்கையில் இன்னும் பல சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டியுள்ளது. அவை தொடர்பில் பிரதமர் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அவற்றில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பில் அழுத்தம் கொடுக்க வேண்டியது பிரதானமானதாகும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

# இரு சகோ...

மேலும் தெரியவருவதாவது, நேற்று இரவு 9.00 மணியளவில் பிரஸ்தாப மூன்று இளைஞர்களும் யாழ்ப்பாணம் அத்தியடிப் பகுதியில் உள்ள பலசரக்குக்கடையில் நின்று உரையாடிக் கொண்டிருந்துள்ளனர்.

இந் நிலையில் மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த 9 பேர் அடங்கிய இனந்தெரியாத குழு அங்கு நின்ற மூன்று இளை ஞர்கள் மீதும் சரமாரியாக வாளால் வெட்டியுள்ளது.

இதில் பிரஸ்தாப இளைஞர்களுக்கு கால் பகுதி, முதுகு மற்றும் தலைப்பகுதியில் பலத்தவெட்டுக்காயங்கள் ஏற்பட்டுள்ளது.

வாளால்வெட்டியவர்கள் முகத்திணை துணியினால்மறைத்தபடி தலைக்கவசம் அணிந்திருந்ததோடு மூன்றுமோட்டார்சைக்கிள்களின் இலக்கத்தகடுகளும் மறைக்கப் பட்டிருந்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை அடுத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-30)


**V2 TRAVELS**

குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.

- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா(UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

(C-5945)

தொடர்புகளுக்கு: 0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி. ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**தற்போது** தரம் 4 2017 தரம் 3 2018

மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கான புதிய வகுப்புக்கள்

ஆரம்பம் - 02.10.2016

ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 4 மணி

ஆசிரியர் :-

**மனோ - சுரேஸ்**

(முன்னாள் ஆசிரியர், கொழும்பு றோயல் கல்லூரி)

- புலமைமொட்டுக்கள், புலமைச்சிட்டுக்கள், புலமை அரும்புகள், புலமை விருந்து நூலாசிரியர் -

- வரையறுக்கப்பட்ட மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி.
- தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு மாணவர்களும் கவனிக்கப்படுவர்.
- அடிப்படை விடயங்களில் இருந்து பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்பிக்கப்படும்.
- அனுமதிகளை முன்பதிவு செய்யவும்.

தொடர்பு : (C-5551)

புதிய **நாவலர்** கல்வி நிலையம். ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே : 077 459 8440

**வாடகைக்கு**

சுன்னாகம் சந்திக்கும் மல்லாகம் சந்திக்கும் இடையில் காங்கேசன்துறை பிரதான வீதியில் அமைந்துள்ள 10x25 விஸ்தீரணமுள்ள இரண்டுகடைகள்வாடகைக்குஉண்டு.

(6078) தொடர்புகளுக்கு :- 0775360475

**நீங்கள் தொழில் தேடுபவரா?**

முன்னணி நட்சத்திர ஹோட்டேல்களில் Front Office, Restaurant, Room Service, Kitchen போன்ற பகுதிகளில் வேலைவாய்ப்புடன்

O/L உடன் Diploma in Hotel Management

CERTIFICATE - DIPLOMA - DEGREE

With FREE English Course Up to 30% Discount

- பயிற்சிக் காலத்திலேயே உழைக்கும் வாய்ப்பு
- கற்கைநெறி நிறைவில் நிரந்தர வேலைவாய்ப்பு

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு

புதிய பிரிவுகள் ஆரம்பம் Week & Weekend Batch அனுமதிகளுக்கு 077 3616 798

www.sikaram.lk Sikaram Academy 021 222 0041

SIKARAM ACADEMY SCHOOL of HOSPITALITY

(C-5957) இல.175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.

**அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு

UK - 550/=Kg

DELIVERY IN 3 - 5 DAYS

தொடர்புகளுக்கு: 0768226240 (C-5950)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

**Win Repair**

A/C களும், சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும் உங்கள் வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு - 077 9648942 (6089)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.